SRI M. VENUGOPALA GOUNDER :—" ஆட்சேபனை செய்யப்படாத புறம்போக்கு நிலங்கள் அதிகமாகயிருந்தும்கூட, என் ஜாரி செய்யப்படாமலிருக்கிறது என்பதை கனம் மந்திரி அவர்கள் சொல்வார்களா ? "

[5th March 1955

THE HON. SRI M. A. MANICKAVELU :—" Some lands in that taluk are even now under the *sivoijama* cultivation. The question is examined as to which land is objectionable and which is not objectionable. All unobjectionable lands will be assigned."

Production of Khadi

* 1117 *Q.*—SRI M. D. THIAGARAJA PILLAI : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the quantity of khadi in yards produced by the State Government Khadi Centres during the years 1952–53 and 1953–54 and its value in rupees;

(*b*) the total quantity supplied to Government Departments during those years; and

(*c*) the quantity supplied to the Government of India during this period?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" The particulars are as follows :—

(*a*)	**() Total number of yards produced during 1952–53.**	**1,471,085**
	(2) Total Approximate value	**Rs. 25,74,364**
	(3) Total number of yards produced during 1953–54.	**613,572**
	(4) Total approximate value	**Rs. 10,73,751**
(*b*)	**Total quantity supplied to Government Departments during 1952–53 (yards).**	**708,422**
	Total quantity supplied to Government Departments during 1953–54 (yards).	**763,738**
(*c*)	**Nil."**	

School for mentally defective children

* 1118 *Q.*—SRI K. V. RAMASWAMY : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have any proposal under consideration to open a school for children who are mentally defective; and

(*b*) if so, when and where?

THE HON. SRI C. SUBRAMANIAM :—" (*a*) & (*b*) Steps will be taken to open a school for mentally defective children after teachers who are specially qualified to impart instruction to pupils in such a school become available."

5th March 1955]

Government Hospital, Tindivanam

* 1119 *Q.*—SRI M. VENUGOPALA GOUNDER: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) the amount sanctioned for medicine for a year to the Government Hospital at Tindivanam in South Arcot district; and

(*b*) whether the Government intend increasing the amount sanctioned?

THE HON. SRI A. B. SHETTY:—" (*a*) Rs. 7,000 during 1954–55.

" (*b*) Yes, Sir."

SRI M. VENUGOPALA GOUNDER:—" இப்போது கொடுக்கும் பணம் போதாதாகையால், உடனடியாகக் கவனித்து அதிகப் பணம் வழங்குவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?"

THE HON. SRI A. B. SHETTY:—" Yes, Sir, necessary provision has been made in the revised budget for the extra amount needed."

SRI V. GOPALA GOUNDER:—" May I know whether the allotment is a fixed one or does it depend on the indents submitted by hospital authorities in regard to the requirements of the hospital?"

THE HON. SRI A. B. SHETTY:—" Certain amount is sanctioned. If extra or additional amount is needed, it is provided for."

SRI M. JAGANNATHAN:—" May I know who prepares the list of medicines required for the hospital. Is it prepared by the local doctor or the District Medical Officer?"

THE HON. SRI A. B. SHETTY:—" The local doctor sends the indents to the District Medical Officer."

Sale of raw-rice

* 1120 *Q.*—SRI M. NARAYANA KURUP: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the price of raw-rice, first sort and second sort, stocked by the Producers'-*cum*-Consumers' Societies, Limited, Malabar, in November-December 1954;

(*b*) whether any request was received to sell the first sort rice at the same rate as the second sort, and, if so, whether it was granted;

(*c*) whether the stock was sold subsequently by public tender and, if so, at what rate;

[5th March 1955

(*d*) whether the Producers'-*cum*-Consumers' Societies, Limited, made any request to allow them to participate in the tender and, if so, whether it was allowed; and

(*e*) whether the Government sold any quantity of rice to Producers'-*cum*-Consumers' Societies and, if so, at what rate?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" (*a*)

	I sort.			II sort.		
	RS.	A.	P.	RS.	A.	P.
(i) **Wholesalers' issue rate to retailer per maund.**	21	2	7	16	11	9
(ii) **Retailers' issue rate to consumers per maund.**	21	12	0	17	4	0

" (*b*) A representation to downgrade the first sort stocks as second sort was received prior to November 1954. This was not agreed to as the stocks were intended to be given to the Government of India and as they had been requested to take over the stocks quickly.

" (*c*) Tenders were called for, for a quantity of about 11,860 tons. The highest tender rate received in respect of a quantity of about 7,500 tons was Rs. 10–4–3 per maund. The rates received for the balance ranged from Rs. 10–4–3 to Rs. 14–10–0 per maund.

It was not the same stuff, which it was suggested may be downgraded, that was sold by tender. The latter was damaged stuff, while the request made by some of the societies was to downgrade the entire stocks of I sort raw rice.

" (*d*) & (*e*) In the first instance, when certain Producers-*cum*-Consumers' Co-operative Societies, which had not cleared their dues to the Government approached the Collector of Malabar for permission to participate in the tenders, it was refused by the Collector. Later, five Producers'-*cum*-Consumers' Co-operative Societies in Ponnani taluk offered to purchase a quantity of 6,000 tons, out of the 7,500 tons referred to above, at the rate of Rs. 12 per maund for which the highest tender rate received was only Rs. 10–4–3 per maund. The Collector was, therefore, instructed to reject all the tenders received for the 7,500 tons in question and to dispose them of as under :—

(i) to deliver 6,000 tons to the five Producers'-*cum*-Consumers' Co-operative Societies in Ponnani taluk at a rate of Rs. 12 per maund; and

(ii) to deliver the balance of 1,500 tons to the other Producers'-*cum*-Consumers' Co-operative Societies, if any, who were prepared to purchase them at the rate of Rs. 12 per maund and, if not, to private merchants at the same rate."

5th March 1955]

The Producers'-*cum*-Consumers' Co-operative Societies were allowed time till 20th January 1955 to take over as much stocks as possible at Rs. 12 per maund. The five Producers'-*cum*-Consumers' Co-operative Societies of Ponnani taluk have lifted in all 4,110 tons at Rs. 12 per maund against the 6,000 tons agreed to be purchased by them. Certain other Producers'-*cum*-Consumers' Co-operative Societies have taken over about 800 tons at the same rate of Rs. 12 per maund against the balance quantity for which Rs. 10-4-3 per maund was offered previously."

MR. SPEAKER :—" If it is a big statement or answer, it is better that the Government print it and lay it on the table of the House as it will save time. I hope it will be done in the future."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" It was not printed as it did not contain much of figures."

SRI M. NARAYANA KURUP :—" If the Government had accepted the suggestion of the Producers'-*cum*-Consumers' Co-operative Societies to sell the first sort of rice at Rs. 16–11–0 they could have saved lakhs of rupees because the same rice was sold afterwards at Rs. 12–8–0 and even less than that? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" No, Sir. I already answered that as the Government of India were taking it, this Government did not consider the question of transferring it."

Loss of Teachers' certificate

* 1121 *Q.*—SRI T. C. NARAYANAN NAMBIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether any Teachers' certificate of Higher Elementary Trained Teachers who appeared for the Secondary Grade Training School-Leaving Certificate Examination have been lost from the office of the Commissioner for Government Examinations during 1949—1954; and

(*b*) if so, how many?

THE HON. SRI C. SUBRAMANIAM :—" (*a*) & (*b*) Information is not readily available. If individual cases are reported, action may be taken."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" Is it not a fact that in 1948–49 the certificate of a teacher who appeared for the Secondary Grade Training School-Leaving Certificate Examination was not returned to him on the ground that the original certificate was lost from the Office of the Commissioner for Government Examinations—the fact of which was communicated to him. If so, will the Government see that the injustice done to the teacher is removed? "

[5th March 1955

THE HON. SRI C. SUBRAMANIAM :—" The original question relates to 1949–54 and the hon. Member is now citing an instance that happened in 1948. Certainly to elicit information on it, he must give notice of it to the Government."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" I said the official year 1948–49."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" But the original question relates to 1949—1954."

House-sites for Harijans in Malabar

* 1122 *Q.*—SRI O. KORAN : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(*a*) whether the Government have received any representation from the State Harijan Welfare Committee regarding the acquisition of lands to provide house-sites to Harijans in Malabar; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI B. PARAMESWARAN :—" (*a*) & (*b*) At the meeting of the State Harijan Welfare Committee held on 18th January 1955, Sri E. Kannan, a member of the Committee, moved a resolution requesting the Government to start the work of acquiring house-sites for all Harijan families in Malabar who have no jenmam lands not later than the 1st April 1955. Other members also expressed that the acquisition of house-sites in other districts should be expedited. The Minister informed the members that the Collectors of the districts will be instructed accordingly and that the special staff required for acquisition of land in Malabar district would be sanctioned before the end of April 1955. Necessary provision for the special staff will be included in the budget for 1955–56."

9-30 a.m. * 1123 *Q.*—SRI S. RAMALINGAM :—" Sir, I request that this question may be taken up on Monday."

MR. SPEAKER :—" I have no objection."

Amount collected for the National Plan Loan from Tanjore

* 1124 *Q.*—SRI M. P. SUBRAMANYAM (on behalf of Sri K. R. Sambandam) : Will the Hon. the Minister for Finance be pleased to state the amount collected so far under the National Plan Loan from Tanjore district?

THE HON. SRI C. SUBRAMANIAM :—" According to the latest figures furnished by the Reserve Bank, the total amount collected from the Tanjore district for the National Plan Loan was Rs. 22,46,600."

5th March 1955]

Contribution to a destitute home by Kozhikode Municipality

* 1125 *Q.*—Sri T. C. NARAYANAN NAMBIAR (on behalf of Sri V. R. Krishna Ayyar): Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Kozhikode Municipality has applied to Government for permission to contribute to a destitute home to be run by the local Rotary Club; and

(*b*) if so, what action has been taken thereon by Government?

The Hon. Sri S. S. RAMASAMY PADAYACHI :—" (*a*) Yes, Sir.

" (*b*) The payment of the contribution was not sanctioned by the Government."

Sri T. C. NARAYANAN NAMBIAR :—" Sir, may I know why the Government was not pleased to sanction the contribution for such a philanthropic purpose? "

The Hon. Sri S. S. RAMASAMY PADAYACHI :—" Sir, the financial position of the Kozhikode Municipality was not satisfactory and that is why the Government turned down the request."

Srimathi Dr. T. S. SOUNDARAM RAMACHANDRAN :—" இந்த மாதிரி குழந்தைகளுக்கும், பெண்களுக்கும், அகதிகளுக்கும் ரொம்பவும் சில சமயங்களில் உதவி தேவை படுகிறது. அதற்காக முனிசிபாலிடிகள், பஞ்சாயத்து போர்டுகள், டிஸ்ட்ரிக்ட்டு போர்டுகள் இவைகளை பண உதவி செய்யும்படி அணுகினால்தான் உதவியாக இருக்கும் என்பதை சர்க்கார் உணர்வார்களா ? அப்படி உணர்ந்தால், அதைக் கொடுப்பதற்கு அனுதாபம் காட்டுவார்களா ? "

The Hon. S. S. RAMASAMY PADAYACHI :—" பொதுவாக நிதி நிலைமை திருப்திகரமாக இருக்கின்ற நகரசபைகளிலும் பஞ்சாயத்து போர்டுகளிலும் அவ்வாறு உதவுவதற்கு அரசாங்கம் வசதி செய்திருக்கின்றது. அது குறைவாக இருக்கும் இடங்களிலே அனுமதிப்பதில்லை."

Srimathi Dr. T. S. SOUNDARAM RAMACHANDRAN :—" சமீப காலத்திலே நிதி நிலைமை திருப்திகரமாக உள்ள பல இடங்களில் இது மறுக்கப்படுகிறது. அதனால்தான் சர்க்காரைக் கேட்கிறேன். முனிசிபாலிடிகள், நகரசபைகள், ஜில்லா போர்டுகள், இதன் அவசியத்தை உணர்ந்து, முன்மாதிரியாக ரூ. 500, ரூ. 1,000 கொடுக்க முன்வர வேண்டும். இதைத்தான் சர்க்கார் புரிந்துகொண்டார்களா என்றும், புரிந்துகொண்டால் அனுதாபத்தோடு அவ்வாறு கொடுப்பதற்கு முன் வரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். இதற்கு சர்க்கார் உறுதி சொல்வார்களா ? "

The Hon. Sri S. S. RAMASAMY PADAYACHI :—" நகர சபைகளுக்கும். பஞ்சாயத்து போர்டுகளுக்கும் ரூ. 5,000, ரூ. 1,000 என்றால் அது அதிகமான நிதி கொடுப்பதாக அர்த்தம், ஆதலால் அது சம்பந்தமான கோரிக்கையை கவனிப்பதற்கில்லை. "

Srimathi Dr. T. S. SOUNDARAM RAMACHANDRAN :—" நான் ரூ. 500 என்று சொன்னதை தவறாக மந்திரி அவர்கள் ரூ. 5,000 என்று கருதிவிட்டார்கள். இல்லையென்றால் ரூ. 100 அல்லது ரூ. 200 ஆவது கொடுக்க முன்வரலாம். அதுவும் லட்சக்கணக்கான ரூபாய் வருமானம் வரும் ஒரு சில முனிசிபாலிடிகள் ஜில்லா போர்டுகள் இருக்கின்றன. அவை

களால் கூட உதவுவதற்கு சர்க்காரால் மறுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே குழந்தைகள் பெண்கள், அகதிகள், முன்னேற்றத்திற்காக இந்த விஷயத்தை அனுதாபத்தோடு கவனிப்பார்களா என்றுதான் கேட்கிறேன் ?"

THE HON. SRI S. S. RAMASAMY PADAYACHI :—" ஜில்லா போர்டு களிலும் இன்னும் நிதி நிலைமை அதிக மந்தமாகவே இருக்கிறது."

Attack of spike disease on sandal trees

* 1126 *Q.*—SRI V. R. NAGARAJAN (on behalf of Sri K. Aranganathan): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the sandal trees in the forests of Madras State are infested by spike pest; and

(*b*) if so, the action taken by Government to control this disease?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" (*a*) Yes, Sir. The sandal trees occurring in parts of Salem North, Salem South, Vellore West, Vellore East, Coimbatore North, Kollegal and the Nilgiris Forest Divisions have been attacked by the spike disease.

" (*b*) The spike disease has been under investigation for the last 50 years, and research in the matter has not yet yielded conclusively satisfactory results."

SRI V. R. NAGARAJAN :—" Sir, the sandalwood tree is the most precious tree in our country and as we have got almost a monopoly in regard to the production of sandal-wood oil, may I request the Government to pay attention to the effective curing of this disease so that our trade is kept apace? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" Yes, Sir, the Government are fully aware of the value of the sandal-wood trees and the need to preserve and protect them from this disease. The Government have recently addressed the Government of India to pursue this matter further and see whether they could not achieve some results to avoid the incidence of this disease."

Building for the Municipal High School, Mayuram

* 1127 *Q.*—SRI M. P. SUBRAMANYAM (on behalf of Sri K. R. Sambandam): Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have received any representation from the Mayuram Municipality for the grant of a loan to provide additional accommodation for the Municipal High School; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM :—" (*a*) & (*b*) The question of sanctioning a loan for the construction of a building for the Municipal High School, Mayuram, will be considered after the plans and estimates are approved by the Director of Public Instruction."

5th March 1955]

Sandalwood oil

* 1128 *Q.*—SRI V. R. NAGARAJAN (on behalf of Sri K. Aranganathan): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government are manufacturing sandal-wood oil; and

(*b*) if so, the quantity produced during 1954 and the cost of its production?

THE HON. SRI M. BHAKTAVATSALAM:—" (*a*) No, Sir.

" (*b*) Does not arise."

SRI T. C. NARAYANAN NAMBIAR:—" Sir, in view of the fact that there are about a thousand sandalwood trees available in Irikkur firka of Chirakkal, will the Government see that an investigation is made and the plants are utilized properly?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM:—" Sir, the Government will examine it."

SRI S. DAIVASIGAMONEY:—" May I know whether there is a proposal for constructing a plant for the extraction of sandal-wood oil?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM: " Sir, there is no such proposal at present."

MR. SPEAKER:—" Questions are over."

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ANNOUNCEMENT BY THE HON. SPEAKER.

MESSAGE FROM THE GOVERNOR.

MR. SPEAKER:—" I have to announce to the House that I have received the following message, dated 17th February 1955, from the Governor of Madras:—

' In pursuance of Article 207, Clause (1) read with Article 199, Clause (1), sub-clause (*a*) of the Constitution of India, I, Sri Prakasa, Governor of Madras, hereby give my recommendation for the introduction in the Madras Legislative Assembly of the Madras Land Revenue (Sur-charge) Amendment Bill, 1955.' "

III.—THE HON. FINANCE MINISTER'S REPLY TO THE GENERAL DISCUSSION IN THE COUNCIL ON THE BUDGET FOR 1955-56.

* SRI P. RAMAMURTHI:—" Sir. I want to bring to the notice of this House and particularly to the notice of the Hon. the Minister for Finance a question about which I feel a bit strongly. This morning I found in the newspapers that the Hon. the Minister for Finance had already replied to the debate on the Budget proposals in the Legislative Council. I am raising this issue not as a matter of privilege or even as a point of order but it is a question of propriety that is involved in this. We know that

as far as this Assembly is concerned the Budget is discussed in detail here and secondly it is this Assembly that is supreme though it may be a fact that the Legislative Council has also co-existent power for the purpose of initiating legislation. Apart from this we also know that the Legislative Council itself can be abolished by a vote of this House and it is not the other way about. Therefore, on a question of this nature. I would certainly like and I am sure that every Member of this House also would like that the reply of the Hon. the Minister for Finance is made here first in this House or, at any rate, the programme of the discussion in both the Houses is arranged in such a way that the Members of this House do not find themselves in the position of seeing that the Hon. the Minister for Finance has already made his reply on the very questions that have been raised during the course of the discussion here.

" I am very particular about this question because what happens is we know what exactly the Hon. the Minister for Finance has said in the other House. After one knows what the Hon. Minister has stated in his reply, every hon. Member who participates in the general discussion on the Budget proposals to-day would have a feeling that any amount of what he has got to say is not going to change matters if the Hon. the Finance Minister's mind is already closed. I am not saying that the other Hon. Ministers should not participate in the discussion but the Hon. the Finance Minister stands on a different footing as far as the discussions on the Budget are concerned. It is therefore very necessary and very proper that the Hon. the Finance Minister's reply should be made here first and he brings to bear his fullest judgment on the various points that are made on the floor of this House. Certainly, he may also listen to the points that are made in the other House and ultimately when he makes his reply it should be in such a way that they are more or less simultaneous, that is, one just following the other.

" In this connexion, I would just like to point out one thing. I understand that the same question was raised in 1948. I have not got the details, but I understand that the then Government did give an assurance that they would arrange the programme of the two Houses in such a way that a contingency like the present one would never arise. This is what happened and I would like to bring it to the notice of the Hon. the Minister for Finance so that at least in the future such a thing would not occur."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, I am glad that the hon. the Leader of the Opposition has taken notice of this fact at least now. The programmes for the Council and the Assembly were published long ago and they were in the possession of the hon. Members. If the hon. the Leader of the Opposition had any objection to the conclusion of the debate in the Council at an earlier date on which date I would necessarily have to reply, he should have brought it to my notice and to the notice of the House much earlier."

An hon. MEMBER :—" We have not received the programme of the Legislative Council."

* The Hon. Sri C. SUBRAMANIAM :—" It has been published and after all the Legislature in our State is a composite Legislature with two Chambers. (Interruption.) It is not so. No question of a money Bill is involved here and it is only a discussion of the Budget proposals. Even when the debate in the Council was nearing its conclusion, if the hon. Members had mentioned this objection, I would certainly have taken notice of it and would have adjusted the programme of the Council accordingly."

Mr. SPEAKER :—" The Hon. the Minister has given an assurance. Let us not continue this debate any further."

* The Hon. Sri C. SUBRAMANIAM :—" Sir, I shall keep this in mind. There is no question of any point or principle involved in this because the Legislative Council also may raise the same question and say that the Hon. the Finance Minister having given his reply to the debate in the Assembly there will be no use in their discussing the Budget proposals further in the Council. We have to make adjustments to suit both the Houses."

Sri M. NARAYANA KURUP :—" The Hon. the Minister for Finance said that the programme of the Council was already published and that the Members of this House did not take any objection to the dates of the sitting of the Council as published in the programme. I wish to say in this connection that the Hon. the Minister for Finance made a speech introducing the Budget proposals in this House and that in the case of the other House the Hon. the Minister for Agriculture and Leader of the Council Sri M. Bhaktavatsalam made the Budget speech and, therefore, we thought that the Leader of the Council and not the Hon. the Minister for Finance would reply to the debate in the other House. It was, therefore, not possible for us to take objection to the programme of the other House anticipating the fact that the Hon. the Minister for Finance would reply to the debate and not the Leader of the Council." 9–40 a.m.

* The Hon. Sri C. SUBRAMANIAM :—" There is confusion in the mind of the hon. Member. Even if the Leader of the other House replies to the debate, he does so on behalf of the Government. Simply because the reply comes from the mouth of another Minister it does not mean that it is not conclusive. Whether the reply is made by the Hon. the Minister for Agriculture or by the Hon. the Minister for Finance it means the same thing because it is made on behalf of the Government."

IV.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1955–56—*cont.*

Sri S. SWAYAMPRAKASAM :—" Mr. Speaker, the general discussion that has been going on for the last five days . . ."

(Hon. MEMBERS :—" Let the hon. Member speak in Tamil.")

MR. SPEAKER :—" Please do not confuse the hon. Member. Let him have his own choice regarding the language in which he wishes to speak.

(Sri S. Panchaksharam rose to speak.)

" There will be no end to that. Another hon. Member may ask him to speak in Telugu . . ."

SRI S. SWAYAMPRAKASAM :—" I shall speak in English the first half of my speech and in Tamil the latter half."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Hon. Member Sri Govindasami took exception to my speaking in English and then reverting to Tamil. The leader of his party should set an example by speaking in Tamil throughout . . ." (Cheers.)

9–43 a.m. SRI S. SWAYAMPRAKASAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த பட்ஜட் விவாதமானது கடந்த 5 நாட்களாக நடந்து இன்று கடைசியாக 6-வது நாளாக நடக்கிறது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். குறிப்பாக இந்த பட்ஜெட்டிலே இரண்டு விஷயங்களை நன்றாக பார்க்கவேண்டும். அதிலே ஒன்று வரவேற்கப்படுகின்றது, ஒன்று பலமாக எதிர்க்கப்படுகின்றது. வரவேற்கப்படுவது என்னவென்றால் ஏதோ சில ஏழை மாணவர்களுக்கு 8-வது வரையிலும் இனாமாகக் கல்வி கற்பிக்க வசதி செய்திருப்பதாகும். இதை இந்த பக்கத்திலுள்ள அங்கத்தினர்கள் மட்டுமல்லாமல், எல்லாப்பக்கத்திலுமுள்ள அங்கத்தினர்களும் வரவேற்கிறார்கள்.

" இரண்டாவதாக, நிலவரியில் சர்-சார்ஜ் போடப்பட்டிருப்பதாகும். இதை ஏற்கனவே இருதரப்பிலிருந்தும் ஆட்சேபித்திருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது வரவேற்கப்படுகின்ற கல்வி விஷயத்தைப்பற்றி ஆராய்ந்து பார்க்கும்போது, அப்படி இந்தச் சபையிலே பெருமளவிற்கு வரவேற்கும் படியான தன்மையிலே இந்த முறையில் அப்படி விசேஷம் ஒன்றுமில்லை என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். கல்வி விஷயத்திலே ஏழை மக்களுக்கு 8-வது வரை படிக்க நமது அரசாங்க பொதுநல (**Welfare State**) அபிவிருத்திலே சலுகை காட்டக்கூடிய அளவிலே இந்த அம்சமானது கருத இடமில்லையென்பதையும், கனம் நிதி மந்திரி அவர்களுடைய அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதற்கு தகுந்த முறையிலே இல்லையென்பதையும் அழுத்தம் திருத்தமாக கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஹரிஜன மாணவர்களுக்கோ, பிற்பட்ட மாணவர்களுக்கோ, கிராமத்திலே இருக்கக்கூடிய ஏழை மாணவர்களுக்கோ 8-வது வரையிலும் இலவசமாகப் படிப்பதற்கு ஒருவிதமான சலுகையும் இதிலே குறிப்பிடப்படவில்லை. இது தான் அந்த அறிக்கையிலே கூறப்பட்டுள்ளது. பின்னர் அது வேறு யாருக்குத்தான் பயன்படுகிறது என்பதைப் பார்ப்போம். உள்ளபடியே நாம் உண்மையை ஆராய்ந்துப் பார்த்தால் இதனால் சாதாரணமாக டவுனில் இருக்கும்படியான ஒரு பகுதி மக்களுக்குத்தான் உதவமுடியும். கிராமத்திலே இருக்கும்படியான ஏழை மக்களுக்கு எந்தவிதத்திலும் உதவவே முடியாது. காரணம் என்னவென்றால், ஏழை மக்கள் வசிக்கும்படியான பல இடங்களில் பள்ளிக்கூடங்களே இல்லை. அப்படி இருக்கும் இடங்களிலும், அது டிஸ்ட்ரிக்ட் போர்டு பள்ளிக்கூடமாக இருக்கும். அதிலே ஏற்கனவேயே இனாமாக சொல்லிக் கொடுக்கப்பட்டு வருகின்றது. ஆகவே கிராமத்திலே இருக்கும்படியான ஏழைமக்கள் பொறுத்தவரையில் ஏதாவது சலுகை (நிதி மந்திரி அவர்களுடைய பிரசங்கத்தில்) அடையும்படியாக இருக்கிறதா என்றால், அதற்கு இடமேயில்லை. இதை நாம் திட்டவட்டமாக அறிந்துகொள்ளலாம். ஆனால் யாருக்கு கொடுக்க முடியும் ? டவுனில் வசிக்கின்ற ஒரு சில ஏழைமக்கள் பலனடைய முடியும். ஆனால் ஏழை மக்கள் டவுனிலும் பாதிக்குமேல் ஏற்கனவே இந்தச் சலுகையைப் பெற்று வருகின்றனர். ஆகவே இன்று சபையில் எல்லோரும் எதிர்பார்க்கக்கூடிய

6th March 1955] [Sri S. Swayamprakasam]

அளவிலே இந்த திட்டம் அமைக்கப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால் இது எல்லோருக்கும் நம்பிக்கை அளிக்காமல் ஏமாற்றும் விதத்தில் தான் அமைந்திருக்கிறது. ஆகவே இது ஒரு பெரிய அளவிலே பாராட்டக் கூடிய திட்டமல்ல என்பதை எல்லோரும் திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ளவேண்டும்.

" இந்தத் திட்டமானது சாதாரணமாக டவுனிலே இருக்கின்ற, அதுவும் படிப்பதில் சிறிது சிரத்தையுள்ளவர்களுக்கு ஓரளவு பயன்படுமே தவிர, படிக்காமல் திரிகின்ற ஏழை மக்களுக்கோ அதிலும் கிராமத்திலே சுற்றித் திரிகின்ற மக்களுக்கோ இந்தத் திட்டம் ஒருவித நன்மையும் புரியவில்லை. இதனை ஆளும் கட்சியினர் நன்குபுரிந்து கொள்ளவேண்டும். அதற்காகவே மீண்டும் மீண்டும் இதனை வற்புறுத்திக் கூறுகின்றேன்.

" மேலும் தாலூகா சென்டர்களில் ஹைஸ்கூல் இருக்குமானால், அதைச் சுற்றியுள்ள படிப்பில் அக்கறை உள்ள ஒரு சிலருக்கும் இது வாய்ப்பளிக்கும். இதிலும் ஒரு சில குழந்தைகளே பயனடைய முடியும். எதற்காக சொல்லுகிறேன் என்றால், நமது அரசியல் சட்டத்தின்கீழ் 14-வயதுக்கு கீழுள்ள குழந்தைகள் அனைவரையும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக ஆக்கிவிடவேண்டுமென்ற சட்டம் இருக்கிறது. அந்த அளவிலே இன்றுள்ள திட்டம் வழி செய்யாது. அப்படிச் செய்வதென்றால் அதற்கு வேறொரு திட்டம் வரவேண்டும். ஆகவே இன்று நிதி மந்திரியார் அவர்கள் கொண்டுவந்துள்ள திட்டத்தை பூரணமாக நம்புவதற்கில்லை. ஆகையால் அந்த முறையிலே நிதி மந்திரியார் அவர்களை பாராட்டுவதற்கு முடியாது. ஆனால் இப்படியெல்லாம் ஏமாற்றுகின்றாரே என்பதற்காக வேண்டுமானால் அவருக்கு பாராட்டுச் சொல்லலாம்."

The Hon. Sri C. SUBRAMANIAM :—" நீங்கள் ஒருவராவது ஏமாறாது இருங்கள்."

Sri S. SWAYAMPRAKASAM :—" ஆகவே இந்திய அரசியல் சட்டத்தின் 45-வது பிரிவின் கீழுள்ள முறையில் வசதிகள் செய்யப்படவில்லையென்றும், குறிப்பாக கிராம மக்களுக்கு அதிகம் சலுகை கொடுக்கப் படவில்லையென்றும், அதற்காக வேறொரு திட்டத்தை வெகு சீக்கிரத்திலே நிதி மந்திரியார் அவர்களைப் பெரிதும் பாராட்டக்கூடிய அளவிலே கொண்டுவரவேண்டு மென்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

" இதற்கு அடுத்தபடியாக மற்ற அங்கத்தினர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால் இப்பொழுது நில வரியைப் போடுகிறார்கள் என்று. நிலவரி இரண்டணா போடுவதில் ஆட்சேபணை இருக்க முடியாது என்றும் சொல்லுகிறார்கள். அவ்விதம் வரி போடுவது சரியல்ல. இப்பொழுது வரியின் மேல் வரி போடுவதாக இருக்கிறது. எதற்காக வரி போடவேண்டும் என்று கேட்கிறேன். இதை நான் ஆட்சேபிக்கிறேன். 9-50 a.m.

" கிராமங்களில் போக்குவரத்து சாதனங்கள் ரோடு வசதிகள் கிடையாது. ஜில்லா போர்டுக்கும் பஞ்சாயத்துகளுக்கும் இப்பொழுது பண வசதி இல்லை. அவர்களால் ரோடுகள் போட முடியவில்லை. அதற்காக 75 லட்சம் ரூபாய் இந்த ஆண்டு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. கிராமங்களுக்கு ஏதாவது வசதி செய்து கொடுக்கவேண்டும் என்றால் கிராமவாசிகள் பணம் கொடுக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதை நான் மிகவும் ஆட்சேபிக்கிறேன். பணம் கொடுத்தால் வசதி செய்து கொடுக்கிறேன் என்று சொல்வது அவர்களுடன் பேரம் பேசுவது போல் தோன்றுகிறது. கிராமத்தார்களிடமிருந்து பணம் வாங்கி அவர்களுக்கு வசதி செய்து கொடுப்பது என்பதில் பொருத்தமில்லை.

" இன்றையதினம் தேசீய விஸ்தரிப்பு திட்டம், சமுதாய அபிவிருத்தி திட்டம் முதலியவைகளைக்கொண்டு வந்து நிறைவேற்றப்போவதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் அங்கே என்ன நடக்கிறது ? கிராமங்களுக்கு ரோடு வசதி, கிணறு வசதி, குடி தண்ணீர் வசதி முதலியவைகள் வேண்டுமென்றால் அந்த கிராமத்தார்கள் அதில் 25 லிருந்து 50 சத விகிதம்

கொடுக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் அந்த பங்கைக் கொடுத்துவிட்டு சௌகர்யங்களை அடையவேண்டியதாக இருக்கிறது. இப்படி பணம் கொடுத்து வசதி செய்து கொண்டதற்கு மேல் இந்த நிலவரி இரண்டணாவையும் கொடுத்தாகவேண்டும். அவர்கள் தாங்கள் ஏற்கெனவே கொடுத்து வந்த வரிக்குமேல் இப்பொழுது அதிகப்படியாக இரண்டணா கொடுக்கவேண்டியதாக இருக்கிறது.

" ஒரு கிராமத்தை எடுத்துக்கொண்டால் தேசீய விஸ்தரிப்புதிட்டத்தின் கீழ் அவர்களுக்கு ரோடு போடுகிறார்கள். பள்ளிக்கூடத்தைக் கட்டுகிறார்கள். இவ்விதம் வசதிகளைச் செய்துகொடுத்து விட்டு அவர்களிடமிருந்து இரண்டணா வரியாக வசூல் செய்து வருகிறார்கள். கிராமத்தார்களிடமிருந்து பங்கு வாங்கிக்கொண்டு அவர்களுக்கு சௌகர்யம் செய்வது என்பது அவர்களுக்கு சிரமமாக இருக்கிறது.

" இப்பொழுது நீர்பாசன வசதிகளைச் செய்யப்போகிறார்கள். அதற்கு அவர்கள் பணம் கொடுக்கவேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். திடீரென்று அவர்களை பணம் கேட்டால் அவர்களுக்கு பணம் ஏது ? அவர்களுக்கு கடன் கொடுப்பதற்குக்கூட ஒருவரும் இல்லை. அதனால் அவர்கள் தங்களுடைய நிலத்தை விற்றுவிட்டு பணத்தைக் கட்டவேண்டியதாக இருக்கிறது. அவரவர்கள் தங்களுடைய நிலங்களை விற்பதற்கு ஏற்பாடு செய்கிறார்கள். அதனால் நிலத்தின் விலை குறைகிறது என்றும் சொல்லுகிறார்கள். அதிலிருந்து என்ன தெரிகிறது. கிராம மக்கள் ஏழைகளாக இருக்கிறார்கள். பணம் இல்லாமல் இருக்கிறார்கள் என்பதையும் ஒத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. நாம் 1938-ம் வருஷம் விவசாய கடன் நிவாரணச் சட்டம் கொண்டுவந்தோம். இப்பொழுதும் கொண்டுவந்திருக்கிறோம். அப்படிக் கொண்டுவந்தும் அவர்களுடைய நிலைமை முன்னேற்றமடைந்திருக்கிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். இவ்வளவு சட்டங்கள் வந்தும் அவர்கள் கடனில் மூழ்கி இருக்கிறார்கள். அவர்கள் கடனில் மூழ்கிக்கொண்டிருக்கும்போது கிராமங்களுக்கு வசதி செய்து கொடுக்கிறோம் என்று சொல்லிவிட்டு அவர்களிடமிருந்து ரூபாய்க்கு இரண்டணா அதிகப்படியாக வரி கொடுக்கவேண்டும் என்று சொல்வது அவ்வளவு பொருத்தமாக இல்லை.

" சாதாரணமாக கிராமங்களில் விவசாயிகள் தான் இருப்பார்கள். பிற்பட்டவர்கள் சாதாரணமாக சாதாரணத் தொழிலைச் செய்யக்கூடியவர்களாகத்தான் இருப்பார்கள். குயவர்கள், தச்சர்கள் மற்றவர்களும் சில சிறிய தொழில்களைத்தான் செய்து கொண்டிருப்பார்கள். கிராமங்களில் விவசாயத் தொழிலை ஒரு பகுதியும் குடிசைத் தொழிலை மற்ற பகுதியும் செய்து கொண்டிருப்பார்ர்கள்."

Sri S. DAIVASIGAMONEY :—" கிராமங்களில்தான் தொழிலாளர்கள் இருக்கிறார்களா ? "

Sri S. SWAYAMPRAKASAM :—" கிராமங்களிலும் இருக்கிறார்கள், பட்டணங்களிலும் இருக்கிறார்கள். டவுனில் இருப்பவர்கள் கம்மி, கிராமங்களில் இருப்பவர்கள் அதிகம். கிராமங்களிலுள்ள விவசாயிகள், தச்சர்கள், குயவர்கள், மற்றும் இதர தொழில்களைச் செய்கின்றவர்கள், இவர்கள் எல்லோரும் தாங்கள் உற்பத்தி செய்கிற பொருள்களை வியாபாரம் செய்வதற்கு முடியாமல் ஒருபுறம் தத்தளித்துக்கொண்டிருக்கிறார்கள். பொருளாதார துறையில் அவர்கள் தத்தளித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் யாருக்கு உற்பத்தி செய்கிறார்கள் ? விவசாயி எதற்காக நெல் உற்பத்தி செய்கிறான் ? நேற்றையதினம் கனம் மந்திரி அவர்கள் பதில் சொல்லும்போது நூற்றுக்கு 90 பேர்கள் விவசாயிகள் என்றும் கூறியிருக்கிறார். இந்த 90 பேர்கள் உற்பத்தி செய்யும் நெல்லைத் தான் மற்றவர்கள் சாப்பிட வேண்டியதாக இருக்கிறது. அப்படி அவர்கள் சிரமப்பட்டு உற்பத்தி செய்யும் பொருள்கள் எங்கே போகின்றன ? டவுனில் இருக்கிறவர்களுக்கும் மற்றவர்களுக்கும் போகிறது. அதன் பலனை கிராமவாசிகள் அனுபவிக்கிறார்களா என்றால் இல்லை என்றுதான் சொல்ல

5th March 1955] [Sri S. Swayamprakasam]

வேண்டும். அவர்கள் பலனடையும்படி அரசாங்கம் எதாவது திட்டத்தை வகுத்திருக்கிறார்களா என்றால் அதற்கு வேண்டிய திட்டம் இந்த பட்ஜெட்டில் இல்லை. வரி போடுகிற முறையில்தான் இருக்கிறது. மக்கள் உள்ள படியே பலனடையக்கூடிய வகையில் இல்லை. இதை யாரும் மறுக்க முடியாது. இந்த முறையில் அவர்களுக்கு இந்த வரியைப் போடுவது உசிதம் இல்லை.

"இப்பொழுது விலைவாசிகள் வேறு வீழ்ந்துவிட்டது. அதனால் வாங்கிய கடனைக் கொடுக்க முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் அவர்களுக்கு இரண்டணா அதிகமாக வரி போடுவது சரியல்ல. விளையாமல் இருந்தாலும்கூட வரியைக் கொடுக்கவேண்டும் என்று ஆகிறது. வரி போடுவது என்பது கிராம மக்களை நசுக்கும் முறையில் இருக்கிறது. இதை நான் அழுத்தம் திருத்தமாக எடுத்துச் சொல்லுகிறேன்.

"இன்றையதினம் கிராமத்திலுள்ள விவசாயிகளும் ஹரிஜனங்களும் பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடையவில்லை. இது எல்லோருக்கும் நன்கு தெரிந்திருக்கும். அவர்களுக்கு சலுகைகள் கொடுக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு வருகிறார்களேயொழிய அதற்குத் தகுந்த பலனை அவர்கள் அடைவதற்கு எந்த விதத்திலும் வழி செய்யவில்லை. ஒதுக்கும் பணத்தை வேறு ஒருவர் எடுத்துக்கொண்டு போகும் வகையில் திட்டங்களை அமைத்திருக்கிறார்கள். மற்றும் பல திட்டங்கள் இருக்கின்றன. அவைகளை நாங்கள் வரவேற்கிறோம்.

"பிற்பட்டவர்கள் என்ற முறையில் இன்றையதினம் பல சலுகைகள் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். பிற்பட்ட வகுப்பினர் என்ற முறையில் சாதாரணமாக மெஜாரிட்டி அளவில் இருக்கிறார்கள் என்பதை எடுத்துக் கொள்ளவேண்டும். நூற்றுக்கு 32 பேர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆனால் சென்ஸஸ் கணக்கில் 51 சத விகிதம் இருப்பதாக சொல்லுகிறார்கள். இன்றையதினம் அரசியல் திட்டத்தில் பிற்பட்ட சமுகத்திற்கு சலுகை கொடுக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி ஒப்புக்கொண்டிருந்தும் ஜாதி முறையில் சென்சஸ் எடுக்காத காரணத்தால் இன்றைய தினம் அவர்களுடைய கணக்கு 32 சத விகிதம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். 1921-ம் வருஷ சென்ஸஸ் கணக்கை எடுத்து வைத்துக்கொண்டு ஜனத்தொகை 100-க்கு இவ்வளவு அதிகரிக்கும் என்று பெருக்கி கணக்குப் போட்டு வைத்துக்கொண்டிருக்கிறார்கள். 10 a.m. அப்படி பெருக்கிப் பார்த்தால் இன்றையதினம் 65 சத விகிதத்திற்குக் குறையாமல் இருக்கும் என்பதை யாரும் மறுக்க முடியாது. இன்றையதினம் சாதாரணமாக பிற்பட்ட வகுப்பினருக்குச் சலுகை என்ற அனுதாபம் கூட இல்லாமல் நிதி மந்திரி பேசிக்கொண்டுவருகின்றார் என்பதை மிக வருத்தத்துடன் சொல்ல ஆசைப்படுகிறேன். பிற்பட்ட வகுப்பினருக்கு உத்தியோகம் கிடைப்பதில் அநேக கஷ்டங்கள் இருக்கின்றன. "பிற்பட்ட வகுப்பினன்" என்று மனுச்செய்துகொண்டால், உள்ளபடியே பிற்பட்ட வகுப்பினர் அதிகமாக மார்க் வாங்கியிருந்தபோதிலும்கூட, திறமை இருந்போதிலும்கூட, உத்தியோகம் கிடைக்கமுடியாத தன்மையில் பிற்பட்ட வகுப்பினர்கள் இருக்கிறார்கள் என்பதையும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மனுப் போடுகின்றார்கள் பிற்பட்ட வகுப்பினர் என்று சொல்லிவிட்டால் அதற்காக 25 சத விகிதம் ஒதுக்குகின்றார்களே, அதில் எல்லோரையும் ஒதுக்கிவிடுகிறார்கள். திறமைசாலிகளாக இருப்பவர்கள் பிற்பட்ட வகுப்பினர் என்று சொல்லாமல் இருப்பதால் 60 சத விகித உத்தியோகத்தைப் பெற்றுவிடுகிறார்கள். பிற்பட்ட வகுப்பினன் என்று சொன்ன காரணத்தினாலே பிற்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட 25 சத விகித பகுதிக்கு வருகின்ற காலத்தில், வேறு எந்த தகுதியும் திறமையும் செல்லாது. திறமையுள்ளவன் உத்தியோகம் கிடைக்காமல் போவது பரிதாப நிலைமை. பிற்பட்ட வகுப்பினர் என்பதை சுட்டிக்காட்டி விடுகிறார்கள். தகுதியும் திறமையும் உள்ளவன் இங்கும் அங்கும் எதோ ஒருவன் இருக்கலாம். அறுபது சத விகிதம் என்பதை எடுத்து உத்தியோகம் தரவேண்டும். 25 சத விகிதம் என்பதை தகுதியும் திறமையும் உள்ளவர்களுக்குக் கொடுத்தால், மிகவும் நலமாகஇருக்கும்.

[Sri S. Swayamprakasam] [5th March 1955

பிற்பட்ட வகுப்பு மந்திரியாக வந்தாலும், ஒரு காரியம்கூட மக்களுக்கு நடக்கமுடியாது. பிற்பட்ட வகுப்பிலிருந்து ஒரு மந்திரியைப் போட்டு விட்டால் மட்டும் போதாது. பிற்பட்ட வகுப்பினர்களுக்கு வேண்டிய காரியங்களைச் செய்தாகவேண்டும்.

"பிற்பட்ட வகுப்பினர் கமிஷன் வந்திருந்தது. அதற்குத் தலைவராக இருந்தவர் ஸ்ரீ காகா சாகேப் காலேல்கர். அவர்கள் இந்தியா முழுவதும் சுற்றிவந்து, இன்னும் ரிபோர்ட் சமர்ப்பிக்கவில்லை. ஆனால், ஜனவரி 26-ந் தேதி அவர்கள் ஒரு அறிக்கை விட்டார்கள். அதில் சொல்வது என்னவென்றால், 'பிற்பட்ட வகுப்பினருடைய ஒரு தன்மை பெரும் பாலோருடைய தன்மையாக இருக்கமுடியும். அவர்களுடைய தன்மையை எல்லாம் நாம் சரியாக செய்தோமானால் நமது நாட்டினுடைய நலனை நாம் பாதுகாத்தவர்களாவோம்.' என்று அவர்கள் அறிக்கையில் எழுதி யிருக்கிறார். பிற்பட்ட வகுப்பினருடைய தன்மையை பிற்பட்ட சமூகம் என்று சொல்லமுடியாது. இன்னும் சரியாக அறிந்துகொள்ளவில்லை, தெரிந்துகொள்ளவில்லை என்று எழுதியிருக்கிறார். அவர் எழுதியிருப் பதை நிதி மந்திரி அவர்கள் படித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 26-ந் தேதி "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பேப்பரில் அந்த அறிக்கை வந்திருக்கிறது. அது மைனாரிடி பிரச்னை அல்ல. திருப்பித் திருப்பி மைனாரிடி இவ்வளவு சத விகிதம்தான் என்பது அல்ல. அவர்கள் சொல்வது

'The problem of the backward classes is a problem of the majority of the population and therefore, it is a problem of the reconstruction of the nation itself.'

என்று அவர்கள் தங்களுடைய அறிக்கையிலே வெளியிட்டிருக்கிறார். ஜனவரி 26-ந் தேதி பேப்பரில் அது வந்திருக்கிறது. அவர்கள் எழுதிய வியாசத்திலே மேலே சொல்கிறார்

'It had not touched the upper classes to the full extent as it ought to have done.'

அதாவது, 'பிற்பட்ட சமூகத்தாருடைய தன்மை இன்னும் முற்பட்டவர்களுடைய மனதைத்தட்டி எழுப்பவில்லை என்று அவர் சொல்லியிருக்கிறார். ஆகையால், இன்றைய தினம் இந்த அரசாங்கம் பிற்பட்ட வகுப்பினருடைய தன்மையை உணர்ந்ததாகத் தெரியவில்லை. நாட்டுக்கு முதுகெலும்பு போன்றிருக்கும் ஹரிஜனங்களுக்கும், பிற்பட்ட வகுப்பினருக்கும் நன்மை இல்லாமல் தீமை விளையுமென்றால் நாடு முன்னேற்றமடைவது தடைப்பட்டுவிடும். பெரும்பாலான ஜனத்தொகையாகிய பிற்பட்ட வகுப்பினர், ஹரிஜனங்கள், ஆகியவர்களுடைய நலன்கள் கவனிக்கப்பட்டால் தான் க்ஷேமநல ராஜ்யத்தை அமைத்ததாகச் சொல்லமுடியும். இல்லாவிட்டால் க்ஷேமநல ராஜ்யம் என சொல்வதெல்லாம் வெறும் கனவாகத் தான் முடியும். ஆகவே, பிற்பட்டவர்களுடைய நிலைமையைக் கொஞ்சம் அனுதாபத்தோடு பார்த்துக்கொள்ளும்படி அரசாங்கத்தைப் பன்முறை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

"பொது மராமத்து இலாகா மூலமாக நிறைவேற்றப்படும் வேலைகளுக்கு பணம் அதிகமாக செலவழிக்கப்படுகிறது. ஸ்தல ஸ்தாபனங்களில் கிணறு வெட்டவேண்டுமானாலும், பாலம் கட்டவேண்டுமானாலும் பொது மராமத்து இலாகாவிலிருக்கும் அதிகாரிகளைத்தான் வைத்து எஸ்டிமேட் போடுகிறார்கள். அவர்கள்தான் அந்தக் காரியங்களையும் நிறைவேற்றுகிறார்கள். அவர்கள் மூலமாகச் செய்யப்படும் காரியங்களுக்கு பணம் அதிகமாக செலவழிக்கப்படுகிறது. நேற்றையதினம் கனம் அங்கத்தினர் ஸ்ரீ பஞ்சாட்சரம் செட்டியார் பேசும்போது, 'பொது மராமத்து இலாகாவில் ஏதோ லஞ்சமெல்லாம் தாண்டவமாடுகிறது' என்று சொல்லிவிட்டு அப்படியே போய்விட்டார். அரசாங்கக் கட்சியைச் சேர்ந்தவர் அல்லவா அவர்? அதற்குமேல் அவர் சொல்லமுடியுமா? ஆகவே, அத்துடன் அவர் நிறுத்தி விட்டார். லஞ்சப்பேய் சாதாரணமாக அங்கு கூத்தாடுகிறது என்று எந்தக் காலத்திலும் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அது அரசாங்கத்திற்குத்

தெரிந்த விஷயம். அதைப்பற்றி நான் சொல்ல ஆசைப்படவில்லை. ஆனால், அவர்கள் செய்கின்ற திட்டங்களிலே அனேகமாக வீண் செலவு இருக்கிறதென்பதை யாரும் மறுக்கமுடியாது.''

* SRI S. PANCHAKSHARAM :—'' On a point of personal explanation, Sir. I never said that there was corruption in the Public Works Department. I only said that there is a lot of waste which has got to be looked into and that Sri Rajagopalachari himself has when hew as the Chief Minister categorically expressed that the Public Works Department was his enemy No. II. I also said that while seeing that there was no evasion of taxation, avoidance of taxation, we should also tackle the problem of corruption, since the charge of corruption against many officials was not being recklessly made. I never said particularly about the Public Works Department and about corruption.''

SRI S. SWAYAMPRAKASAM :—'' கனம் அங்கத்தினர் அவர்களும் லஞ்சப்பேய் இல்லையென்று சொல்லவில்லை. லஞ்சப் பேய் இருக்கிறதாகவும் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி நான் மேலும் சொல்ல ஆசைப்படவில்லை. வீண் செலவு பி.டபிள்யு.டி. இலாகா செய்கின்றார்கள் என்பதில் சந்தேகம் இருக்கமுடியாது. அதற்கு ஆதாரமாக இருப்பது என்னவென்றால், ஏதோ ஆங்கில சர்க்கார் இருந்த காலத்தில் அவர்கள் சில 'ரேட்கள்' தயார் செய்தார்கள். அதற்கு ஒரு சிறு உதாரணம் தருகிறேன் : வெள்ளையடிப்பதற்கு சதுர அடிக்கு 10 அணா முதல் 13 அணா என்று ஒரு 'ரேட்' வைத்திருந்தார்கள். சாதாரணமாக ஒரு சதுர அடிக்கு ஒரு அணா அல்லது ஒன்றரையணாதான் ஆகும். அப்படியிருக்கும்போது எப்பொழுதோ நிர்ணயித்து ஒரு அடிப்படையில் அதை மாற்றாமல் அப்படியே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதனுடைய முடிவு என்ன ஆகும் ? ஸ்தல அபிவிருத்தி திட்டங்களில் என்னென்ன காரியங்களைச் செய்யவேண்டுமென்பதற்கு தஞ்சை ஜில்லாவிலுள்ள சட்டசபை அங்கத்தினர்களைக்கொண்ட ஒரு கூட்டம் போடப்பட்டது. தஞ்சை ஜில்லாவில் ஒரு கிணறு வெட்டுவதற்கு ரூ. 2,500 ஆகும் என்று எஸ்டிமேட் போட்டார்கள். சேலம், கோயமுத்தூர் ஜில்லாவில் ஒரு கிணறு வெட்டுவதற்கு ரூ. 2,500 ஆகும் என்று சொல்வதை ஒத்துக்கொள்ள முடியும். ஆனால், தஞ்சை ஜில்லாவில் அவ்வளவு பணம் வேண்டுமா என்பதை யோசிக்கவேண்டும். அதுவும் நான் வசிப்பதற்கு பக்கத்து ஊரிலேயே ஒரு கிணறு வெட்டுவதற்கு 2,500 ரூபாய் செலவாகும் என்று சொன்னவுடனே நான் உண்மையிலேயே திடுக்கிட்டேன். நான் கலெக்டரிடம் விஷயத்தை சொன்னவுடனே அவர் விழித்துக்கொண்டார். 38 அடி தோண்டவேண்டும், சிமிட்டி போடவேண்டும், கருங்கல் போட்டுக் கட்டவேண்டும் என்றெல்லாம் சொல்லிக்கொண்டுபோனார். அதைப்பற்றி நான் இங்கு சொல்லவேண்டியதவசியமில்லை. 2,500 ரூபாய் எவ்வளவு தூரம் எங்கெங்கெல்லாம் போய்ச்சேரும் என்பதைப்பற்றி நான் இங்கு சொல்ல ஆசைப்படவில்லை. நான் எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், கிராமத்தார்கள் பாதித்தொகையாகிய ரூ. 1,250 கொடுக்கிறார்கள், கிராமத்தார்கள் கொடுக்கவேண்டுமென்று கட்டாயம் இருக்கிறது. கிணறு வெட்டுவதற்குப் பாதிப் பணம்தானே செலவழிக்கப்படுகிறது ? என் ஜனங்களிடமிருந்து 1,250 ரூபாய் வாங்கவேண்டும் ? என்று என் ஊருக்குப் பக்கத்திலுள்ள ஜனங்கள் கேட்கிறார்கள். பாதிப் பணத்திலேயே வேலை முடிந்துவிடும்போது எங்களுக்கு ஏன் தொல்லை கொடுக்கவேண்டும் ? என்று அவர்கள் கேட்பதில் நியாயம் இருக்கிறது. கிராமத்தாரிடமிருந்து வசூலாகும் பணம்தான் குறிப்பிட்ட வேலைக்கு செலவழிக்கப்படுகிறதேயொழிய சர்க்கார் கொடுக்கும் பணம் அந்த வேலைக்குச் செலவழிக்கப்படுவதே கிடையாது. அரசாங்கத்தாரின் பணம் அந்த வேலைக்குத் தேவைப்படுவது இல்லை. அந்தப் பணம் எங்கே போகிறது என்பதை நான் விவரிக்கத் தேவையில்லை. 500 ரூபாய்க்குமேல் செலவு

செய்து வெட்டிய கிணற்றை எங்கள் தஞ்சை ஜில்லாவில் நான் பார்த்ததே கிடையாது. அப்படியிருக்கும்போது 2,500 ரூபாய் ஒரு கிணறு வெட்டுவதற்குச் செலவழிக்கக் காரணம் என்ன? இதுவிஷயத்தைப் பற்றி ஜில்லா கலெக்டரிடம் கூறினேன். இன்ஜினீருக்கு அவர் எழுதி யனுப்பியிருக்கிறார்கள். பொது மராமத்து இலாகாவிலுள்ள 'ஸ்பெசிபிகேஷன்' புத்தகத்தில்—அவர்களுடைய வேத புத்தகத்தில்—குறிப்பிட்ட 'ரேட்' தான் இவ்வளவுக்கும் காரணம் என்று நான் நினைக்கிறேன். அந்தப் புத்தகத்தில் பழைய காலத்தில் குறிப்பிட்டுள்ள 'ரேட்' களை குறைத்து மாற்றுவதற்கு ஏற்பாடு செய்வதாகச் சொன்னார். 'தஞ்சை ஜில்லாவில் 500 ரூபாய்க்குமேல் கிணறு வெட்ட தேவையில்லையே, எதற்காக ஜனங்களிடம் பணம் வாங்கவேண்டும்? ஜனங்களே 500 ரூபாய்க்கு வெட்டி முடிக்கிறோம் என்று சொல்கிறார்கள்' என்றெல்லாம் நான் எடுத்துச் சொன்னேன். ஆனால், அவர்கள் என்ன செய்தார்களோ தெரியவில்லை. இந்தத் தன்மையில் இந்த ராஜ்யம் பூராவும் பொது மராமத்து இலாகா மூலமாகச் செய்யப்படும் வேலைகளுக்கெல்லாம் இவ்வளவு பணம் விரயமாக்கப்படுகிறதென்றால், சர்க்காருக்கு இவ்வளவு பணம் நஷ்டம் ஆகிறதென்று சொன்னால், அது அரசாங்கத்தார் உடனடியாக கவனிக்கவேண்டிய ஒரு விஷயமாகும். ஸ்தல ஸ்தாபனங்கள் திட்டங்களை நிறைவேற்றுகின்ற காலத்தில் கிராமத்தார்கள் பாதித்தொகை கொடுக்கவேண்டும், அல்லது அவர்களுடைய உழைப்பைக் கொடுத்தால் போதும் என்று சொல்லும்போது அவர்கள் எப்படிச் செய்யமுடியும்? சில ஊர்களில் செய்ய முடிவதில்லை. முற்போக்காக உள்ள மக்களும், பண வசதி உள்ளவர்கள் இருக்கும் ஊர்களில்தான் பாதிப் பணத்தைக் கொடுக்கமுடியுமே தவிர சாதாரண ஜனங்கள் வசிக்கக்கூடிய ஊர்களில் பாதிப் பணத்தைக் கொடுக்கமுடியவில்லை. ஆகையால்தான்
10-10 a.m. பல அங்கத்தினர்கள் மக்கள் கொடுக்கவேண்டிய அரைப் பங்கை குறைக்கவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். இந்தப் பாதிப் பகுதியை மக்களிடமிருந்து வாங்காமலேயே சர்க்கார் இந்தத் திட்டங்களை நிறைவேற்றவேண்டும். தஞ்சை ஜில்லாவை எடுத்துக்கொண்டால் மாயவரம், கும்பகோணம், எல்லாவிதத்திலேயும் முற்பட்ட இடங்கள். அங்கேதான் சர்க்கார் இந்தத் திட்டங்களைத் துவக்கியிருக்கிறார்கள். பிற்பட்ட இடங்களுக்கு வசதி செய்வதுதான் சர்க்காருடைய முதல் கடமையாக இருக்கவேண்டும் என்பதை நான் வலியுறுத்துகிறேன். பிற்பட்ட இடங்களிலே இந்தத் திட்டத்தை ஆரம்பித்திருந்தால், சர்க்காரின் திறமை அப்போதுதான் புலனாகும். இப்பொழுது முற்போக்கான இடங்களிலே பணத்தைச் செலவு செய்துவிட்டார்கள். ஏற்கெனவே இயற்கை வசதியுள்ள இடங்களுக்கே, மேலும் வசதி செய்து கொடுத்தால், சர்க்கார் செய்யும் நன்மை மக்களுக்கு வெளிப்படையாகத் தெரியாது. என்னைவிட தஞ்சை ஜில்லாவைபற்றி தனக்கு நன்றாகத் தெரியும் என்று கனம் விவசாய மந்திரி அவர்கள் சொல்லுகிறார்கள். ஏதோ அவர் அந்த ஜில்லாவில் சுற்றுப்பிரயாணம் செய்யும்பொழுது ஒரு சில இடங்களுக்குப் போயிருக்கலாம். நான் கிராமம், கிராமமாக அலைந்திருக்கிறேன். என்னைவிட தஞ்சை ஜில்லாவைப்பற்றி அவருக்கு அதிகமாகத் தெரியுமென்பதை யாரும் ஒப்புக்கொள்ளவேண்டாம். தஞ்சை ஜில்லாவிலே, பட்டுக்கோட்டை, அரந்தாங்கி, தஞ்சை தாலூகாக்கள் பிற்பட்டவை. அந்த இடங்களில் இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தால், அப்போதுதான் அதனால் ஏற்படும் நன்மையை மக்கள் உணரமுடியும்.

"மேலும் **Public Works Department** ரேட்டுகளை மாற்றி அமைப்பதற்கு சர்க்கார் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்."

MR. SPEAKER :—" Five minutes more for the hon. Member."

SRI S. SWAYAMPRAKASAM :—" மற்றுமொரு விஷயம். நிறையக் கட்டடங்கள் இருக்கிற இடங்களிலேயே **Public Works Department** புதுக் கட்டடங்களைக் கட்டுகிறார்கள். ஒரத்தநாடு டெபுடி தாசில்தார் ஆபீசுக்குக் கட்டடம் வேண்டுமென்றால் உடனே ஒரு திட்டம் தயாரிக்கப்

5th March 1955] [Sri S. Swayamprakasam]

படுகிறது. ஆந்திரப் பிரிவினைக்குப் பிறகு, இருக்கிற கட்டடங்களே அதிகமாயிருக்கின்றன. இந்த நிலைமையில் புதுப்புது கட்டடங்களைக் கட்டிக்கொண்டே போகிறார்கள். தஞ்சை கலெக்டர் ஆபீசில் இன்னும் மேலே மாடி வைத்துக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். டவுன் நிர்வாகத்தில் செலவழிக்கப்படும் பணத்தைக் குறைத்துக்கொண்டு அந்தப் பணத்தைக் கிராம மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய திட்டங்களில் செலவழிக்க வேண்டும். இதைக் கவனக் குறைவு என்று சொல்லுவதா, அல்லது திறமையில்லை என்று சொல்லுவதா, என்பது தெரியவில்லை.

"ரொம்ப நாளாக **Board of Revenue** என்ற ஒரு பெரிய யானை இருந்துவருகிறது. யானை என்றால் நல்ல தீனி தின்னும் என்று சொல்லவேண்டியதில்லை. முன்னால், வெள்ளைக்காரர் ஆட்சி காலத்தில், திறமையான **Collector**கள் இருந்தார்கள்; அப்பொழுது இந்த **Board of Revenue** அவசியமில்லையென்றும், ஆனால், இப்பொழுது அனுபவம் வாய்ந்த **Collector**கள் இல்லாததால் மேற்பார்வை பார்ப்பதற்கு இந்த **Board** வேண்டும் என்று கனம் **C. Rajagopalachariar** சொன்னார்கள். மக்களுக்கு உகந்த காரியத்தை தாமதப்படுத்துவதற்காக ஏற்பட்ட ஒரு **machinery**யாகயிருக்கிற இந்த போர்டை, இவ்வளவு பணம் செலவழித்து வைத்துக்கொள்ளவேண்டுமா? ஒருவரை வைத்துக்கொண்டு மேற்பார்வை செய்யச் சொன்னால் போதாதா? இந்தப் பணத்தை மிச்சப்படுத்தி, மக்களுக்கு வேண்டிய நன்மையைச் செய்யக்கூடாதா?

"சுகாதாரத் துறையை எடுத்துக்கொண்டால், மக்களின் தேகநிலை நாளுக்கு நாள் சீர்குலைந்து வருகிறது என்பது வெட்டவெளிச்சமாகத் தெரிகிறது. ஆஸ்பத்திரிகள் அதிகமாகிக்கொண்டு வருவதும், **bed** எண்ணிக்கை அதிகரித்து வருவதும், புதுப்புது வியாதிகள் தோன்றுவதும் எதைக் குறிக்கிறது? இந்திய அரசியல் சட்டத்தின் 47-வது ஷரத்தின்படி மக்கள் சாப்பிடும் ஆகாரத்தில் '**nutrition value**' எவ்வளவு இருக்கிறது என்று பார்க்கவேண்டும். இதற்கு முன்னாலிருந்த மந்திரி சபை ஒரு கமிட்டியை நியமித்து இந்தக் கமிட்டியின் ரிப்போர்ட்படி டவுன்களில் 100-க்கு 90 பேர் விகிதமும் கிராமங்களில் 100-க்கு 40 அல்லது 50 பேர் விகிதமும் ஹோட்டல்களில் சாப்பிடுகிறார்கள் என்று தெரிகிறது. ஹோட்டல்களில் சுகாதாரம் எவ்வாறு அனுஷ்டிக்கப்படுகிறது. ஹோட்டலில் தயாரிக்கப்படும் பதார்த்தங்கள் நல்ல சாமான்களால செய்யப்படுகின்றனவா, மக்கள் உட்கொள்ளும் ஆகாரத்தில் சத்து (**nutrition value**) எவ்வளவு யிருக்கிறது என்பதையெல்லாம் கவனிக்க ஒரு கமிட்டியை நியமித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஹோட்டல் சாப்பாட்டையே மக்கள் நம்பியிருக்கும் இந்தக் காலத்தில் ஹோட்டல்காரர்கள் தங்கள் லாபத்தையே முக்கியமாகக் கருதாமல், பொது மக்களின் நன்மையையும் மனத்தில் கொள்ளவேண்டும்.

"அடுத்தபடியாக **N.G.Os.**-களிடம் அரசாங்கம் கொஞ்சம் அனுதாபம் காட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆரம்ப ஆசிரியர்களுக்கு ஏதாவது செய்யலாம் என்று கனம் மந்திரி சொல்லியிருக்கிறார்கள். **N.G.O.**க்களுக்கு மற்ற வசதிகள் செய்யாவிட்டாலும்கூட குடியிருக்க வசதி செய்துகொடுப்பது மிகவும் அவசியம். அவர்கள் மாற்றலாகிச் செல்லும் இடங்களில் குடியிருக்க வசதியில்லாமல் திண்டாடுகிறார்கள். போன பட்ஜெட் விவாதத்தின்போதே ஆசிரியர்களுக்கும் **N.G.O.**க்களுக்கும் குறைந்த வாடகையில் வீடுகள் கட்டிக் கொடுக்க ஒரு திட்டத்தை தாயாரிக்கவேண்டுமென்று சொன்னேன். இப்படிச் செய்தால்தான், மாற்றலாகிப்போகிற இடங்களுக்கு அவர்கள் குடும்பத்தை உடனே அழைத்துச் செல்ல முடியும். அரசாங்க ஊழியர்களின் வேலைதிறனும் நன்றாக இருக்கும். ஆகவே வீடு கட்டும் திட்டத்தை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போன பட்ஜெட் விவாதத்தின் போது நிதி மந்திரி அவர்கள் இதைப்பற்றி கவனிப்பதாகச் சொன்னதாக ஞாபகம். இந்த பட்ஜெட்டில் '**N.G.O.**' என்ற பெயரையே காணோம். இதைச் சர்க்கார் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு **voting on demands** வருகிற காலத்திலே பாக்கி விஷயங்களைப்பற்றிப் பேசுகிறேன்."

[5th March 1955

10-20 a.m. * SRIMATHI DR. T. S. SOUNDARAM RAMACHANDRAN "கனம் சபா நாயகர் அவர்களே ! இந்த வரவு செலவு திட்டமானது, உள்ள வருவாயை வைத்துக்கொண்டு, அதிகமான வரிகளைப் போடாமல், நல்ல விதமாக தயாரித்திருப்பதற்காக முதலில் நான் எனது வாழ்த்துக்களை நிதி அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதோடு நான் இங்கு எல்லா விஷயங்களையும் எடுத்துபேச விரும்பவில்லை. சில முக்கியமான, விஷயங்களை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

"நம்முடைய கவனத்தையெல்லாம் கவர்ந்திருப்பது, இரண்டாவது, ஐந்து வருஷத்திட்டமும், முதல் ஐந்து வருஷத்திலே உள்ள பாக்கி இரண்டு வருஷமும் ஆகும். இந்த 2 வருஷங்களிலே என்னவெல்லாம் செய்ய முடியும் ? அதிலும் குறிப்பாக மனித பலத்தைக்கொண்டும், நமக்குள்ள நிதி பலத்தைக்கொண்டும் என்னவெல்லாம் செய்யலாம் ? என்பதே இன்றுள்ள முக்கியப் பிரச்னையாகும். இது நம் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருப்பது அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த இரண்டாவது ஐந்து வருஷத்திட்டத்திலே முக்கியமாக நம் நாட்டின் கைத் தொழில் வளத்தை உற்பத்திமூலம் அதிகரிப்பதோடு, அதனை வாங்குவதற்கு சக்தியுள்ள மனிதர்களாகவும் செய்யவேண்டும். இதுதான் முக்கியமாக நம் தயாரிக்கும் திட்டத்தில் இடம் பெறவேண்டும். அதற்கு மனித சக்தியையே முழுக்க முழுக்க உபயோகப்படுத்தவேண்டும். இம்மாதிரியான முறையைக்கொண்ட கைத்தொழில்களை ரொம்பவும் நல்ல விதத்திலே திட்டமிட்டு, அதற்கான வேலைகளைச் செய்தால்தான் வேலையில்லாத் திண்டாட்டம் ஓரளவு குறைய முடியும். இதனால் விவசாயிகளும், கிராமங்களிலுள்ள மற்றவர்களின் வாழ்க்கை நிலைமை உயரமுடியும். ஆகவே இம்மாதிரியாக எல்லோருக்கும் நன்மை தரும்படியான விதத்திலே திட்டங்களை உருவாக்கவேண்டும்.

'தோசைக்கு மா அறைக்க மெஷீன் வைத்ததால் 30 பேருக்கு வேலைபோய் விட்டது என்று மெஷீன்களேவேண்டும் என்ற நிபுணர்கள் கூட நம் நாட்டிலுள்ள மனித பெருக்கத்தை, மனித சக்தியை அறிந்து அது கூடாது, மனித சக்தியையே உபயோகிக்கவேண்டுமென்று கூறுவதைக் கேட்டு பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். இன்று நம்நாட்டில் அம்மாதிரியான நிலைமை ஏற்பட்டுள்ளது. நம் நாட்டில் ஜனங்கள் ஜாஸ்தி ; பூமி குறைவு, அதற்கு ஏற்ற வேலை குறைவு ; ஆகவே இதை யெல்லாம் அனுசரித்து, பெரிய தொழில்களை சற்று கட்டுப்படுத்தி, அதோடு சிறு குடிசைத் தொழில்களை நம் நாட்டில் உண்டாக்குவதற்கு உடனடியாக ஏற்பாடுகள் செய்யவேண்டும். அப்படி செய்தால்தான், உற்பத்திப்பெருகுவதோடு மக்களுக்கு வாங்கும் சக்தியும் சற்று அதிகரிக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

"சௌந்திரம் எழுந்து நின்று பேசுகிறாள் என்றால், அவள் என்னத்தைச் சொல்லுவாள் என்பது அனைவருக்கும் தெரியும். இரண்டு லட்ச ரூபாய் செலவு செய்து ஒரு கைத்தொழிலை ஆரம்பித்தால் 30 பேருக்கு தான் வேலை கொடுக்கமுடியும். நான் சொல்லுகிற திட்டத்திலே ரூ. 50 ஆயிரம் செலவிலே 500 பெண்களுக்கு மாதம் ரூ. 10 வருமானம் வரும்படியாகச் செய்வேன். அதாவது கதர் நூற்றல், நெய்தல், அரிசி அரைத்தல், எண்ணெய் ஆட்டல், மற்ற தானியங்கள் அரைத்தல், உடைத்தல் போன்றவேலைகளினால் கிராமங்களிலே உள்ள ஆண்களுக்கும், பெண்களுக்கும் வாழ்க்கைத்தரத்தை ஓரளவு உயர்த்தமுடியும், அதற்கு இந்திய அரசாங்கத்தாரும் அனுகூலமாக இருக்கிறார்கள். இதற்காக ஆலோசனை செய்ய தனிக்கமிட்டி, சப்-கமிட்டிகள் எல்லாம் இருக்கின்றன. இதனை விரைவிலே பெருமளவிற்கு செய்துமுடிக்கவேண்டும்.

"நம்முடைய வரவு செலவுத்திட்டத்தில் ஒரு சிறு அளவில்தான் துண்டு விழுந்து சரிக்கட்டமுடியாமல் இருக்கிறது. ஆகவே இன்னும் 4, 5 கோடிகள் துண்டு விழுந்தாலும் பரவாயில்லை. வேலையின்மையைப் போக்கு

5th March 1955] [Srimathi Dr. T. S. Soundaram Ramachandran]

வதற்காக 4, 5 கோடிகள் ஒதுக்கி, இம்மாதிரியான கைத்தொழில் வளர்ச்சியை அதிகரித்தால், பலருக்கு வேலை தரமுடியும். இதைத்தான் நான் முக்கியமாக வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

"அடுத்து, தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தையும், சமுதாய நலத் திட்டத்தையும் எடுத்துக்கொள்வோம். பிற்போக்கான இடங்களுக்கு முதலில் இத்திட்டங்கள் விஸ்தரிக்கப்படுகின்றன என்று அரசாங்கத்தார் கூறியிருக்கின்றனர். அதைச் கண்டு நான் ரொம்ப சந்தோஷம் அடைகின்றேன். நாம் முன்னைவிட இப்போது சற்று உயர்ந்திருக்கிறோம். இதை யாரும் மறுக்க மாட்டார்கள். மிகவும் பிற்போக்கான சில ஜில்லாக்களிலே இன்று மின்சாரவசதி இத்திட்டங்களின்மூலம் கிடைத்திருக்கிறது. திருநெல்வேலி சாதாரணமாக மிகவும் பிற்பட்ட இடம். அங்கும் கோவில் பட்டி, சங்கரன்கோவில் முதலிய இடங்களுக்கு வசதிசெய்யப்பட்டுள்ளது. இன்னும் அதைவிட பிற்பட்ட நித்திய பஞ்சம், நாங்குனேரி முதலிய இடங்கள் உள்ளன. அவைகளுக்கும் விரைவில் விஸ்தரிக்கவேண்டும். அதோடு நீர்ப்பாசனத்திட்டங்களையும் செய்யவேண்டும். கீறி ஆறுத்திட்டம் இருப்பதுபோல் இன்னும் 3, 4 திட்டங்களை தயார் செய்யவேண்டும். திருநெல்வேலியிலுள்ள இதர பிற்பட்ட இடங்களுக்கு முக்கியமாக சலுகைகளைத்தந்து, சௌகரியங்கள் செய்யவேண்டும். மதுரை ஜில்லா, ஓரளவு வசதிகளைப் பெற்றுக்கொண்டுவருகிறது. ஆகையால் அதைக் குறிப்பிட விரும்பவில்லை.

"விவசாயக் கடன்களை எடுத்துக்கொண்டோமானால், இன்று அவர்கள் கடன்களைத் திருப்பிகொடுக்க முடியாமல் கஷ்டப்படுகின்றனர். ஆகவே அவைகளைத்தீர்ப்பதற்கு வழிசெய்தாகவேண்டும். அதைத் தீர்த்தால்தான் நாடு உயரமுடியும். ஒரு வருஷத் தவணைக்கடன்களினால் அவர்களுக்கு பிரயோஜனம் ஒன்றுமில்லை. அதனால் நில அடமான பாங்கியை பலப்படுத்தி, அதனுடைய சட்டதிட்டங்களை சிறிது தளர்த்தி, சுலபமாக ஏழை விவசாயிகள் நெடுங்காலக் கடன் வசதி பெறுவதற்கு பெரியளவிலே ஏற்பாடு செய்யவேண்டும். மூன்று வருஷத் தவணை, 5 வருஷத்தவணை என்று காலத்தை உயர்த்தவேண்டும். தக்காவிக் கடனை இன்னும் 10 பங்கு ஜாஸ்தியாக்கவேண்டும். அவ்வாறெல்லாம் செய்தால்தான் விவசாயிகள் ஓரளவாவது முன்னேற்ற மடைவதற்கு முடியும். அதோடு இதையெல்லாம் கூட்டுறவு முறையிலே செய்யலாம். ஆனால் இப்போது கூட்டுறவு சங்கங்கள் எப்படி மாற்றி அமைக்கப்படலாம் என்பதுபற்றி ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தக் கமிட்டி கூட்டுறவு அடிப்படைத் தன்மையை மாற்றி, உண்மையான கூட்டுறவின் மூலம் விவசாயிகளுக்கு எளிதாக கடன் வசதிகளைப் பெறச்செய்யவேண்டுமென்பது என் விருப்பம்.

"கல்வியைப்பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள்கூற விரும்புகிறேன். எட்டாவது வகுப்புவரை இலவசக்கல்வி அளித்திருப்பது குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். ஆனால் இதில் வித்தியாசங்கள் வேண்டுமா என்ற பிரச்னை எழுகிறது. சாதாரணமாக 6, 7, 8 வகுப்புக்கள் என்று பள்ளிக்கூடத்தில் படிக்கிறார்கள். அதையே ஹைஸ்கூலில் 1, 2, 3 பாரங்கள் என்று படிக்கிறார்கள். இந்த இரண்டிற்கும் வித்தியாசம் காணப்படுகிறது. ஹைஸ்கூலில் **B.A., B.T.** படித்தவர்களைப் போட்டு பாடம் சொல்லிக்கொடுப்பதால், ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது. ஆனல ஏழைப் பிள்ளைகள் படிக்கும் மிடில் ஸ்கூல்களில் இந்த வசதி கிடைப்பதில்லை. மற்றும் சில **Higher** எலிமெண்டரி ஸ்கூல்களில் ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது. இவ்வாறு பல வேறுபாடுகள் இருப்பதால் பிள்ளைகளுக்கு மிகவும் கஷ்டமேற்படுகிறது. ஆகவே இவைகளையெல்லாம் அடுத்த நடப்பு ஆண்டிலிருந்து போக்குவதற்காக எல்லாப் பள்ளிகளிலும் இங்கிலீஷில் கற்பிக்கவேண்டுமென்று ஏற்பட்டால் எல்லோருக்கும் வசதியாக இருக்கும். நான் ஆங்கிலம் வேண்டுமென்பதற்குக் குறுக்கே நிற்கமாட்டேன். தவிர இப்போது 8-வது வகுப்பிலே ஆங்கிலம் படித்து பாஸ்செய்தால் 4-வது பாரத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று ஜி.ஓ. வந்திருக்கிறது. ஆகவே எல்லா ஹையர் எலிமெண்டரி

[Srimathi Dr. T. S. Soundaram Ramachandran] [5th March 1955

பள்ளிகளிலும் ஆங்கிலமும் கற்பிக்க வேண்டுமென்று ஆக்கிவிட்டால் இந்த தொல்லைகளுக்கு இடமிருக்காது, தவிர, அது நம்முடைய சர்க்கார் திட்டமிட்டிருக்கும் ஆதாரக் கல்விக்கும் பின்னால் பெரிதும் உதவியாக இருக்கும். ஆகவே இந்த மாதிரியாக இரண்டுவிதமான பள்ளிகள் வேண்டாமென்று தெரிவித்துக்கொண்டு சர்க்கார் இலவசமாக 8-வது வரை படிக்க வசதி செய்துகொடுத்ததற்கும், ஆதாரக் கல்வியைப்பரப்ப திட்டமிட்டுக்கொண்டு வருவதையும் கண்டு பெரிதும் என்னுடைய மகிழ்ச்சியைத்
10-30 a.m. தெரிவித்துக்கொள்ளுகிறேன். இன்று நடந்த கேள்வி நேரத்தில் ஒரு உபகேள்வியில்கூட இதைப்பற்றி கேட்கப்பட்டது. அனாதைக் குழந்தைகளுக்கு பாதுகாப்புக் கொடுக்கவேண்டும். சட்ட ரீதியில் அதை அமைக்க வேண்டும். ஒரு குடும்பம் ஏழ்மையாக இருந்தால் அந்தக் குடும்பத்திலுள்ள குழந்தைகளைக் காப்பாற்றுவது அந்தக் குடும்பத்தின் பெண்களின் தலையில் தான் சுமையாக இருக்கிறது. அந்தக் குடும்பத்தினுடைய தலைவிதி அந்தக் குடும்பத்தின் பெண்களின் மீதுதான் இருக்கிறது. நிச்சயமாக சொல்லலாம் புருஷர்களுடைய தலையில் இந்தச் சுமை இல்லை. சென்னையிலுள்ள ஒளவை விடுதிக்கும் மாதர் நலசங்கத்திற்கும் தாய்மார்கள் குழந்தைகளைக் கொண்டு வருவதைப் பார்த்தால் இவ்வளவு குழந்தைகளுக்கு தகப்பனார் எங்குதான் இருக்கிறார்களோ என்று தோன்றுகிறது. பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு அவர்களை இந்த நிலைக்குக்கொண்டு போய் விட்டிருக்கிறது. புருஷர்கள் குழந்தைகளோடு பெண்களை விரட்டிவிடுகிறார்கள். புருஷர்கள் ஓடி விடுகிறார்கள். பெண்கள் குழந்தைகளை எங்கு விட்டு விட்டு ஓடமுடியும். ஆகவே இப்படிப்பட்ட குழந்தைகளை பாதுகாப்பதற்கு வேண்டிய ஸ்தாபனங்களை அமைக்கவேண்டும். தர்ம ஸ்தாபனங்களில் குழந்தைகள் விடுதிகளை நடத்தலாம்.

" இப்படி முக்கியமாக குழந்தைகளுடன் வருகிறவர்கள் வாலிபப் பெண்கள்தான். அவர்கள் தான் ரொம்பவும் நசித்துப்போயிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. பொருளாதார நெருக்கடியால் பல குடும்பங்கள் அழிந்துபோய்க்கொண்டிருக்கின்றன. இவர்களை பாதுகாப்பது க்ஷேமநல சர்க்காரின் பொறுப்பு. இவர்களுக்கு அதிகப்படியான வசதிகள் செய்து கொடுக்கவேண்டும்.

" இதைப்பற்றி சொல்லும்போது ஒன்றைச் சொல்லவேண்டியதாக இருக்கிறது. இப்பொழுது எவ்வளவோ ஊமைப் பிள்ளைகளும். 'defective' குழந்தைகளுக்கும் இருக்கின்றன. இப்படிப்பட்ட குழந்தைகளுக்கு நகரங்களில் அநேக ஸ்தாபனங்களை தொடங்க பலர் தயாராக இருக்கிறார்கள். இப்பொழுது ஜன சமூகத்தில் விழிப்பு ஏற்பட்டிருக்கிறது. அவ்விதம் குழந்தைகளை பாதுகாப்பதற்கு ஸ்தாபனங்களைத் தொடங்குவதென்றால் அதற்கு வேண்டிய ஆசிரியர்கள் கிடையாது. அதற்குத் தகுந்த பயிர்ச்சி பெற்றவர்கள் கிடையாது. பயிர்ச்சி இல்லாதவர்கள் இந்த வேலையை செய்ய முடியாது. மூன்று நான்கு வருஷங்களுக்கு முன்பு டெப் அண்ட்டம்ப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்களை பயிர்ச்சிக்கு எடுத்துக்கொள்ள முடியாது: என்று சொன்னார்கள். அது அப்படியே நின்று போய்விட்டது அதனால் இப்பொழுது பயிர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் கிடையாது. (மிஸ்டர் ஸ்பீகர் உங்களுக்கு இன்னும் இரண்டு நிமிஷங்கள்தான் இருக்கிறது.) அதனால் சர்க்கார் உடனடியாக இப்படிப்பட்ட பயிர்ச்சிப் பள்ளிக்கூடங்களை தொடங்க வேண்டும். இப்பொழுது தொடங்கினால்தான் இன்னும் இரண்டு வருஷங்களிலாவது ஆசிரியர்கள் கிடைப்பார்கள். பத்து வருஷ அனுபவம் உள்ளவர்கள் கிடையாது. ஆகவே இப்பொழுது சர்க்கார் ஒரு பயிர்ச்சிப் பள்ளிக்கூடத்தை தொடங்கி ஆசியர்களுக்கு பயிர்ச்சி அளிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

" ஆஸ்பத்திரிகளைப் பற்றி ஒரு வார்த்தையை மட்டும் சொல்லி விட்டு முடித்துக் கொள்ளுகிறேன். நான் ஒரு டாக்டர் என்பதால் அதைப்பற்றி சொல்லாமல் இருந்தால் நான் ஒரு டாக்டர் என்பதற்கு அர்த்தம் இல்லை. நம்முடைய ஆஸ்பத்திரிகளில் நெடுங்கால வியாதியஸ்தர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வருஷக்கணக்காக ஆஸ்பத்திரிகளில் இருந்து தொண்டே

5th March 1955] [Srimathi Dr. T. S. Soundaram Ramachandran]

இருக்கிறார்கள். அப்படி அநேகம் பேர்கள் இருப்பதால் சீக்கிரத்தில் குணம் அடையக்கூடிய வியாதியஸ்தர்கள் வந்தால் அவர்களுக்கு இடம் கிடைக்காமல் போய்விடுகிறது. ஆஸ்பத்திரிகளில் நெருக்கடிக்கு பல காரணங்களில் இதுவும் ஒன்று. இப்படிப்பட்ட நெடுங்கால நோயாளிகளுக்கு அந்தந்த ஊர் ஆஸ்பத்திரிகளில் அவர்களுக்கு என்று தனியாக வார்டுகள் அமைத்து அவைகளுக்கு அவர்களை மாற்றி மற்றவர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். இப்படி ஒரு ஏற்பாட்டை சர்க்கார் செய்தால் ஆஸ்பத்திரிகளில் ஓரளவு நெருக்கடி குறையும். கூட்டமும் குறையும். இதை முக்கியமாக எடுத்துக்கொண்டு ஆஸ்பத்திரி நிர்வாகத்தில் இந்த முறை வரவேண்டும். ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

" மராமத்து இலாகாவைப்பற்றி எதிர் கட்சி அங்கத்தினர் ஒருவர் குறிப்பிட்டார். அதை நான் வரவேற்கிறேன். அங்கு இப்பொழுது வீண் செலவாகிறது. அந்தக் காலத்தில் போடப்பட்ட ரேட்டையே இப்பொழுது போட்டுக்கொண்டு வருகிறார்கள். இப்பொழுது விலைவாசிகள் குறைந்து விட்டன. விலை ஜாஸ்தியாக இருந்தபோது போடப்பட்ட ரேட்டுகளையே இப்பொழுதும் போட்டுக்கொண்டு வருகிறார்கள். விலைவாசி குறைந்து விட்டது என்பதனால் நான் கூலியைக் குறைக்கச் சொல்லவில்லை. மற்ற சாமான்களின் விலைகள் இப்பொழுது ரொம்பவும் குறைந்து விட்டது. முன்பு சுமார் 2,000 ரூபாயில் கிணறு வெட்டுவதாக இருந்தால் இப்பொழுது 1,000 அல்லது 1,500 ரூபாய் தான் செலவாகும். மற்றும் கிணற்றில் நிறைய தண்ணீர் வந்து விட்டால் உடனே வேலையை நிறுத்தி விடலாம். அதற்கு அவ்வளவு செலவு ஆகாது. முன்பு செலவு ஆனது இப்பொழுது ஆகாது. அதனால் இப்படிப்பட்ட இனங்களை பரிசீலனை செய்து நியாயமான முறைகளில் ரேட்டுகளை அமைத்து பணத்தைக் குறைக்க முடியும் என்று தோன்றுகிறது. இவ்விதம் பணத்தை மிச்சப்படுத்தி அவைகளை குடிசைத் தொழில்களுக்கு ஒதுக்கி குடிசைத் தொழிலை அபிவிருத்தி செய்யலாம். இந்த முறையில் ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை கொடுக்கவும் முடியும் என்பதைச் சொல்லிக்கொண்டு இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்."

Sri V. BALAKRISHNAN:—" கனம் சபாநாயகர் அவர்களே, ஒரே ஒரு வேண்டுகோள். ஆண்கள் நிறைந்த இந்த சட்ட சபையில் அத்திப்பூ பூத்தது போல் ஒரே ஒரு அம்மையார் தான் இருக்கிறார். அதனால் அந்த அம்மையாருக்கு இன்னும் அதிகப்படியான நேரம் கொடுத்து பேசச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்." (சிரிப்பு.)

Mr. SPEAKER:—" ஒரு அம்மையார் இருப்பது தெரியும். கனம் பாலகிருஷ்ணன் தன்னுடைய ஸ்தானத்தை ராஜீனமாச் செய்துவிட்டு அந்த ஸ்தானத்திற்கு மற்றொரு அம்மையாரைக் கொண்டுவைத்தால் அதைப்பற்றி எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. அப்படி ராஜீனமா செய்து விட்டு மற்றொரு அம்மையாருக்கு இடம் கொடுங்களேன்." (சிரிப்பு.)

***Sri K. VINAYAKAM**:—" அவைத் தலைவர் அவர்களே, இந்த பட்ஜெட் விவாதத்தில் பேசும்போது வழக்கமாக ஆங்கிலத்தில் பேசும் நான் இன்று தமிழில் பேச விரும்புகிறேன். காரணம் தமிழகத்திற்குச் சேர வேண்டிய ஒரு சில பகுதிகள் வெளி ராஜ்யத்தில் இருக்கும்போது அவர்களை இந்த ராஜ்யத்துடன் கொண்டுவந்து சேர்க்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக நான் தமிழில் பேச வேண்டியதாக இருக்கிறது. அப்படி தமிழில் பேசா விட்டால் அது பெரிய குற்றமாகும் என்று என்னுடைய தோழர் கே. டி. ராஜுவும் மற்றவர்களும் எனக்கு எடுத்துச் சொன்னது எனக்கு இப்பொழுது ஞாபகத்திற்கு வருகிறது.

" தலைவர் அவர்களே, போன ஆண்டு வரவு செலவு திட்ட அறிக்கையை இந்த சபையில் வாசித்த பிறகு விவாதங்கள் நடைபெற்றது. அதன் பிறகு கனம் நிதி மந்திரி அவர்கள் சர்ச்சைக்குப் பின்னால் பதில் சொல்லும்

போது அந்தப் பகுதிகளையெல்லாம் இந்த வருஷ முடிவுக்குள் இந்தப் பகுதியுடன் சேர்த்து விடுவதற்கு முயற்சிக்கிறோம் என்று சொன்னார். அதைத் தொடர்ந்து நாங்களும் எதிர் பார்த்துக்கொண்டிருந்தோம். அதைத் தொடர்ந்து அங்கே இப்பொழுது தேர்தல் நடந்தது. அதில் ஒரு சில தொகுதிகளில் தமிழர்கள் சார்பாக நின்றவர்கள் தோற்றுவிட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். அதனால் நமக்கு பாதகம் ஏற்பட்டிருக்கிறது என்று நிதி மந்திரி அவர்கள் எடுத்துச் சொன்னார். அவருக்கும் உங்கள் மூலமாக இந்த அரசாங்கத்திற்கும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். மொழியின் அடிப்படையில் இந்தத் தேர்தல் நடந்து இப்படி வந்திருந்தால் நாங்கள் அதை ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறோம். ஆனால் தலைவர் ஸ்ரீ பக்தவத்சலம், தமிழ் நாட்டு காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஸ்ரீ கக்கன், ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரி, ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவர், நமது முதல் மந்திரி ஸ்ரீ காமராஜ் நாடார் முதலியவர்கள் சொல்லியதை நான் இப்பொழுது ஞாபகத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும். மொழியின் அடிப்படையில் வோட்டுகள் கேட்கக் கூடாது, மொழியின் அடிப்படையில் தேர்தல் நடக்கக் கூடாது என்று சொன்னார்கள். அதை மறந்து விடக்கூடாது. அங்கு இப்பொழுது தேர்தல் நடந்த காலத்தில் வழக்கம்போல் பல தில்லுமுல்லுகள் நடந்திருக்கின்றன. பணக்காரர்கள் தங்களுடைய பணத்தைவாரி இறைத்திருக்கிறார்கள். எதிர்க்கட்சி பதவிக்கு வராமலிருப்பதற்கு வேண்டிய சூழ்ச்சிகளை நடத்தியிருக்கிறார்கள். காங்கிரஸ் கம்யூனிஸ்ட் என்ற வித்யாசத்தில் பெரிய காரியங்கள் நடந்திருக்கின்றன. பெரிய நிலச்சுவாந்தார்கள் தங்களுடைய பணத்தை வாரியிறைத்திருக்கிறார்கள். அப்படியிருந்தும் ஒரே ஒரு பகுதியில் நாங்கள் வெற்றியடைந்திருக்கிறோம். அந்த ஒரு பகுதியில் நடந்த வோட்டுப் பதிவைப்பற்றி கொஞ்சம் சொல்ல விரும்புகிறேன். தமிழின் சார்பாக வெற்றி அடைந்தவருக்குக் கிடைத்த வோட்டுகள் 18 ஆயிரத்தி சொச்சம். அவருக்கு எதிராக நின்ற காங்கிரஸ் கட்சியின் அங்கத்தினருக்கு 6 ஆயிரம் வோட்டுகள்தான் கிடைத்திருக்கிறது.''

The Hon. Sri C. SUBRAMANIAM :—"போன வருஷம் நான் சொன்ன வார்த்தையை வைத்துக்கொண்டு அதைப்பற்றி இந்த சபையில் பிரசங்கம் செய்வது இப்பொழுதுள்ள விவாதத்திற்கு உகந்தது அல்ல. அதை ஆந்திர சட்டசபையில் பேச வேண்டியவிஷயம்."

*** Sri K. VINAYAKAM** :—"கனம் நிதி மந்திரி அவர்கள் தேர்தல் பிரச்னையாக வைத்துக்கொள்ளக் கூடாது. ஆந்திர சபையில் பேச வேண்டும் என்று சொல்லுகிறார்."

(Sri P. G. Karuthiruman in the Chair)

10–40 a.m. "மாதம் 100 ரூபாய்க்குக் குறைவாக வருமானமுள்ள ஏழைப் பெற்றோர்களின் குழந்தைகளுக்கு ஜாதி மத வித்தியாசமின்றி கல்விச் சலுகை மூன்றும் படிவம் வரை கொடுக்கப்போகிறோம் என்று சொல்வது நல்லதொரு திட்டமாகக் காணப்படுகிறதேயொழிய, ஆனால், ஏற்கெனவே அப்படிப்பட்ட சலுகையை பிற்பட்ட இனத்தவர்களும் ஹரிஜன மக்களும் மற்றும் பெரும்பாலோரும் அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள். ஆனால், இந்தத் திட்டப்படி முழுச் சம்பளச் சலுகை காட்டுவதாகக் காணப்படுகிறதே தவிர, நடைமுறையில் வரும்போது 100 ரூபாய்க்குமேல் வரும்படி உள்ளவர்களுக்கு சலுகை கிடையாது என்று சொல்லப்படுவதால், பிற்பட்ட இனத்தவர்களுக்கும் இந்தக் கல்விச் சலுகை கிடைக்காது. குறிப்பாக ஆங்கிலத்தில் சொல்லவேண்டுமென்றால் **'It is only a camoufl age to deceive the forward classes'** என்றுதான் சொல்லவேண்டும். முற்போக்கு எண்ணத்தைக்கொண்ட திட்டத்தை நாங்கள் வரவேற்கிறோம்.

"அழியக்கூடிய பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளித்திருப்பதை வரவேற்கிறேன். ஆனால், ஒரே ஒரு பொருளுக்கு இன்னும் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படவில்லை. தேங்காய்க்கும் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கவேண்டியது மிகவும் அத்தியாவசியமாகும். அப்படிச்செய்தால் அந்தப் பகுதியிலிருந்து வருகிறவர்க

ளுடைய நெடுநாளைய குறைகள் நீங்கிவிடும். தேங்காயும் கெட்டுபோகக் கூடிய பொருள்தான் **(perishable commodity)**. பால், வாழை, இலை, உருளைக்கிழங்கு, வெங்காயம் ஆகியவைகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளித்ததுபோல் தேங்காய்க்கும் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளித்தால் அரசாங்கத்தின் நல்ல எண்ணத்தை மக்களுக்கு எடுத்துக் காட்டுவதாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

"புதிய வரியைப்பற்றி ஒரு வார்த்தை. எந்த ஜனநாயக அரசாங்கமும் வரி விதிக்காமல் நடக்கமுடியாது என்பது எனக்குத் தெரியும். வரி வசூலிப்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனல், யாரிடத்திலிருந்து எந்த விதத்தில் வரி வசூலிக்க வேண்டுமென்பது நிதி மந்திரி அவர்களுக்கு நன்கு தெரியும். ஆகையால், வேறு விதத்தில் நிதி குறைந்திருப்பதைச் சரிக்கட்டுவதற்கு முயற்சிக்க வேண்டுமே தவிர, ஏற்கெனவே வரியினல் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய விவசாயிகளை மேலும் ரூபாய்க்கு இரண்டணு சர்சார்ஜ் கொடுக்கச் சொல்வது அவ்வளவு நல்ல முயற்சியாக எனக்குத் தோன்ற வில்லை. நிதி மந்திரி அவர்கள் புதிய வரி இனங்களை ஆராய்ந்தறிய வேண்டும்.

"திருவள்ளூர் தாலூகாவிலுள்ள ஆரணியார் பிராஜெக்ட்டில் ;புதிதாக வேலை செய்யப்பட்டிருக்கிறது. அப்பகுதியில் வாழும் எனக்கு அதைப்பற்றி நன்கு தெரியும். அமைச்சரவர்கள் இதைக் கவனித்து அதற்குவேண்டிய வேலைத்திட்டத்தை திருத்தியமைக்கவேண்டும். ஆரணியார் தமிழ்நாடு எல்லையோரத்தில் இருக்கிறது. நீர்ப்பிடிப்பு பகுதி **catchment area** ஆந்திர ராஜ்யத்தில் இருக்கிறது. அங்குள்ள மலையின்மேல் மழை பெய்தால் ஆரணியாறு பிராஜெக்ட்டில் தண்ணீர்வரும். ஆரணியார் பிராஜெக்ட் நிறுவுவதற்குமுன்னலேயே ஆந்திர ராஜ்யத்திலுள்ள விவசாயிகளெல்லோரும் கிளர்ச்சி செய்தார்கள். எங்கள் ஊரிலுள்ள நிலத்தை நாங்கள் நஷ்ட ஈடு பெற்றுக்கொண்டு அந்தப் பிராஜெக்டுக்காகக் கொடுத்துவிட்டோம், அதிலே இருக்கிற லாபத்தைத் தமிழ் நாட்டவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறர்கள், இதைத் தடுக்கவேண்டும் என்று அங்குள்ள மக்கள் ஸ்ரீ சஞ்சீவ ரெட்டியைப் பேட்டி கண்டு கிளர்ச்சி செய்தார்கள். அதற்கு ஸ்ரீ சஞ்சீவ ரெட்டி பதில்சொல்லும்போது, 'இரு அரசாங்கங்களுக்குமிடையே மோதல் வைத்துக்கொள்ள முடியாது, நஷ்ட ஈட்டுத் தொகையை வேண்டுமானல் அதிகமாகக் கேட்டுப் பார்க்கலாமேயொழிய ஆரணியாறு திட்டத்தை எடுத்துவிடுங்கள் என்று சொல்ல முடியாது' என்று சொல்லிவிட்டார். கனம் ஸ்ரீ பக்தவத்சலமும், ஸ்ரீ சஞ்சீவி ரெட்டி அவர்களும் கலந்தாலோசித்துத்தான் அந்தக்காலத்தில் அத்திட்டத்தை நிறுவினர்கள். ஆந்திர ஆட்சியிலே அங்கிருக்கும் கலெக்டர் இன்ஜினீர்களுக்குத் தாக்கீது அனுப்பி சிறிய சிறிய கால்வாய்களை வெட்டி, ஆரணியாறு பிராஜெக்டில் தண்ணீர் வராத முறையில் தண்ணீரை **divert** செய்துவிடுகிறர்கள். சின்னஞ்சிறு கால்வாய்களை வெட்டி, தண்ணீரை வேறு இடங்களுக்குத் திருப்பிவிட்டு விட்டால், ஆரணியாறு நீர்த்தேக்கத்திற்குத் தண்ணீர் வரவே வராது, தமிழ் நாட்டிலுள்ளவர்களுக்கு எந்த விதமான லாபமும் இல்லாமல் ஏமாற்றப்படுவார்கள் என்ற முறையில் ஆந்திர ராஜ்யத்தில் சூழ்ச்சி நடக்கிறது. நான் ஆரணியாறு பகுதியிலிருந்து வருபவன் ஆதலால் எனக்கு இவ்விஷயம் நன்றுகத் தெரியும். சித்தூர் கலெக்டர் மேற்சொன்ன முறையில் உத்தரவுபோட்டு நம்முடைய பிராஜெக்டுக்குத் தண்ணீர் வராமல் செய்திருக்கிறர்கள். இதை உடனடியாக அரசாங்கம் கவனித்து ஆவன செய்யவேண்டும். ஆந்திர சர்க்கார் **catchment area**-வில் விழும் தண்ணீரை **divert** செய்யாமல் இருக்கச் செய்வது நம்முடைய அரசாங்கத்தின் பொறுப்பும், கடமையும் ஆகும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

"பாலாற்றின் அவதி நிலை எல்லோருக்கும் தெரியும். வட ஆற்காடு, செங்கற்பட்டு எம்.எல்.ஏ.க்கள் முயற்சி செய்துவருகிறர்கள். மைசூர் அரசாங்கத்தோடு நம்முடைய சர்க்கார் கலந்துகொண்டு, ஆரணியாறு பிராஜெக்டுக்குப் போதிய தண்ணீர் பாலாற்றில் வருவதற்கான ஏற்பாட்டைச்

செய்யவேண்டும். நீர்ப்பிடிப்புப் பகுதியில் விழும் தண்ணீர் ' டைவர்ட் ' செய்யப்படாமலும் பார்த்துக்கொள்ளவேண்டும். இந்த ஒரு நல்ல யோசனையையும் நான் எடுத்துச் சொல்கிறேன். செங்கற்பட்டு ஜில்லாவில் எவ்விதமான பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களும் இல்லாததினால் எங்கள் ஜில்லாவில் சிறிய சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களையாவது நிறைவேற்றிக் கொடுத்தால் அது பெரும் உதவியாக இருக்கும். ஆனால், அதற்கு வேண்டிய திட்டம் நிதி மந்திரி அவர்கள் சமர்ப்பித்திருக்கும் பட்ஜெட்டில் காணப்படவில்லை என்று வருத்தத்துடன் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். சிறிய சிறிய பாசன வசதிகளைச் செய்துகொடுத்தால் அங்கிருக்கும் விவசாயிகளுடைய குறைபாடுகள் ஓரளவு நீங்குவதற்கு சௌகரியமாக இருக்கும்.

" நான் ஆண்டுதோறும் எடுத்துச் சொல்லும் ஒரு குறையை இவ்வருஷமும் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கத்தார் ஏனோ அதைப்பற்றி கவனிக்காமல் இருக்கிறார்கள் என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். கடலோரத்தில் நிலத்தின் அடியிலே தண்ணீர் அதிகமாகத் தேங்கிக்கிடக்கிறது. வாஞ்சுகள் என்று அவைகள் சொல்லப்படும். மேலே மணல் இருப்பதால் எந்த விவசாயியும் அதை தோண்டிப் பார்த்து தண்ணீரை மேலே எடுத்து விவசாயத்திற்குப் பயன்படாமலிருக்கிறது. விவசாயிகளுக்கு பணவசதி இல்லாத காரணத்தாலும், அந்த நிலங்களெல்லாம் சர்க்காருக்குச் சொந்தமான நிலங்களாக இருப்பதாலும், விவசாயிகள் பூமிக்கடியில் இருக்கும் தண்ணீரை விவசாயத்திற்கு பயன்படுத்திக்கொள்ள முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகையால், அரசாங்கத்தார் ஒரு சிறு கமிட்டியை ஏற்படுத்தவேண்டும். இன்ஜினீர்களைக் கொண்ட ஒரு சிறு கமிட்டியை அமைத்து, வாஞ்சுகள் (பூமிக்கடியிலே தேங்கி இருக்கும் தண்ணீர் திட்டு) இருக்கும் இடங்களில் போய்ப்பார்க்கும்படி அவர்களுக்குச் சொல்லி, அந்தத் தண்ணீரை எப்படியாவது வெளியில் எடுப்பதற்கு வேண்டிய சாத்தியக்கூறுகளைக் கண்டுபிடித்தால் விவசாயிகள் தொல்லையைத் தீர்க்கமுடியும். சென்னை, செங்கற்பட்டு, கடலூர் ஆகிய பிராந்தியங்களில் கடலோரங்களில் இம்மாதிரி வாஞ்சுகளை, பூமிக்கடியிலுள்ள தண்ணீர்த் தேக்கங்கள்—தோண்டிப் பார்த்து, அத்தண்ணீர் விவசாயத்திற்குப் பயன்படும்படிச் செய்யவேண்டும்மென்று அரசாங்கத்திற்கு யோசனை சொல்ல விரும்புகிறேன்.

" விவசாயத்திற்கு மின்சார சக்தி அவசியமாகும். செங்கற்பட்டு ஜில்லாவில் பெரிய பிராஜெக்டுகள் இல்லாத காரணத்தினால், விவசாயத்திற்குப் போதிய மின்சார வசதி செய்துக் கொடுக்கவேண்டும். மற்ற ஜில்லாக்களில் மின்சாரச் சக்தி விவசாயத்திற்கு கொடுக்கப்படும் அளவைவிட கொஞ்சம் அதிகமாகக் கொடுப்பதற்கு ' ப்ரையாரிடி ' கொடுக்கவேண்டும். அப்பொழுதுதான் எங்கள் ஜில்லாவிலுள்ள பஞ்சப் பிரச்னை தீரும். வேறு எவ்விதமான இர்ரிகேஷன் பிராஜெக்ட்களையும் எங்கள் ஜில்லாவில் எடுத்துச் செய்யமுடியாது. ஆகையால் எங்களுக்கு சீக்கிரமாக மின்சார வசதி கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

" சமுதாய நலத் திட்டங்களை செங்கற்பட்டு தாலூகாவிலும், தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தை திருவள்ளூர் தாலூகாவிலும் வைத்து நல்ல வேலை செய்ய அரசாங்கம் முயற்சிக்கிறது. நோக்கம் நல்லதாக இருந்தாலும் நடைமுறையில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. மக்கள் 50 சதம் தொகை திட்டங்களுக்காகத் தரவேண்டுமென்று சொன்னால், எந்தக் கிராமத்து மக்கள் கொடுக்கமுடியும் ? ஒரு கிராமத்திலிருப்பவர்களாவது 50 சதம் தொகையைக் கொடுக்க முன்வருவதில்லை. நானும் எத்தனையோ கிராமங்களிலுள்ள விவசாயிகளைப் பாதிப் பணம் கொடுக்கும்படி கேட்டிருக்கிறேன். யார் கொடுக்கிறேன் என்று முன் வருகிறார்கள்? மக்களிடமிருந்து பாதிப் பணம் வந்தால்தான் அரசாங்கம் பாதிப் பணம் தருகிறேன் என்று சொல்கிறார்கள். இப்படியாக திட்டங்கள் நிறைவேற்றப்பட முடியாமல் நின்றுவிடுகின்றன. 'எங்களிடம் பணம் கேட்பதற்குத் தானா உங்களை நாங்கள் எம்.எல்.ஏ.க்களாகத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறோம் ? எங்கள் பணத்தைக் கொண்டே எங்களுக்கு நீங்கள் திட்டம் நிறைவேற்றுவேண்டுமென்றால் அப்படிப்பட்ட திட்டங்கள் எங்களுக்கு

5th March 1955] [Sri K. Vinayakam]

வேண்டியதில்லை. சர்க்காருக்கு நாங்கள் வரி கொடுக்கிறோமே, அந்தப் பணத்திலிருந்து, சர்க்கார் செலவிட்டு எங்களுக்குத் திட்டங்களை நிறைவேற்றிக்கொடுக்கக் கூடாதா ?' என்று கிராம மக்கள் கேட்கிறார்கள். அரசாங்கத்தார் எப்பொழுது பணம் போட்டு திட்டங்களை நிறைவேற்றுகிறார்களோ அதுவரையில் நாங்கள் காத்திருக்கத் தயார் என்றும் அவர்கள் சொல்கிறார்கள். இம்மாதிரியாக சமூக நலத் திட்டங்களுக்காக சர்க்கார் ஒதுக்கியுள்ள பணங்கள் செலவிடப்படாமல், மக்கள் பாதிப் பணம் கொடுக்கவில்லை என்ற காரணத்திற்காக, வீணாகத் தேங்கிக் கிடக்கிறது என்பது எனக்குத் தெரியும்.

"ஒரு இலாகாவிலிருந்து பணம் செலவாகிறது. விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கும்போது, அவர்களுடைய நிலத்தைக் காட்டி, அந்த அடிப்படையில்தான் கடன் வாங்கிவிட்டார்கள். அந்தத் துறையில் ஒதுக்கப்பட்ட பணம் செலவாகிறது. ஆனால் பள்ளிகளை ஏற்படுத்துவது, ஆஸ்பத்திரிகளை நிறுவுவது, ரோடு போடுவது ஆகிய துறைகளுக்காக ஒதுக்கப்பட்ட பணம் தேக்கமாக இருக்கிறது. சமூக நலத் திட்ட வேலைகள் நடைபெறாமல் இருக்கின்றன, 50 சதம் மக்கள் தரவேண்டுமென்றால் எந்த மக்களும் முன்வருவது இல்லை. சமூக நலத் திட்டங்களும், தேசிய விஸ்தரிப்புத் திட்டங்களும் நல்ல திட்டங்களாக இருந்தாலும் அதனால் ஏற்படும் முழுப் பயனும் மக்களுக்கும் போய்ச்சேருவதற்கு முடியாமல் மேற்கண்ட கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை அரசாங்கம் கவனித்து ஆவன செய்யவேண்டும். இந்த சமுதாய அபிவிருத்தித் திட்டங்களும், 10-50 a.m.
தேசிய வளர்ச்சித் திட்டங்களும் காகிதத்திலே நல்ல திட்டங்களாக யிருக்கலாம். ஆனால், நடைமுறையில் பார்க்கும்பொழுது, பாதிப்பணம் கொடுக்க வேண்டுமென்று சொல்வதினால், பணம் கொடுக்கத் தயாராக யில்லாத மக்கள் சம்பந்தப்பட்ட வரையில், இந்த திட்டங்கள் எல்லாம் '**total failure**' என்று தான் சொல்லவேண்டும். 50 சத விகிதம் பணம் வாங்காமல் இலவசமாகவே பூராத்திட்டத்தையும் செய்ய அரசாங்கம் முயற்சிக்க வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

"பிற்பட்ட மக்களுடைய பிரச்னை ஒரு பெரிய பிரச்னையாகவேயிருக்கிறது. இதைப்பற்றி பல ஆண்டுகளாக நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இதற்கு முன்னேயிருந்த கனம் கோபால ரெட்டி அவர்கள் இது ஒரு பெரிய 'தலைவலி' என்று சொன்னார். அந்த அளவிற்கு இப்பொழுதுயிருக்கும் மந்திரிகள் ஆவேசப்படுவதில்லை. நண்பர் சுயம் பிரகாசம் அவர்கள் ஸ்ரீ கலெக்கர் சாகிப் சொன்னதைப்பற்றி விரிவாகச் சொல்ல விரும்பினார். தடுத்தகாரணத்தினாலேயே அவர் சொல்ல முடியவில்லை. அவர் ஒரு பிராமணர். என்னைப்போல் பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர் இல்லை. காந்தி அடிகளின் பிரதம சிஷ்யர். அவர் சொல்லியிருப்பது என்னவென்றால் :

'The forward classes will have to be at the mercy of these backward classes in the Government service and new leadership will emanate from this class.'

"நாங்கள் ஒரு காலத்தில் அமைச்சர்களாக வரப்போகிறோம் என்று சொல்லிக்கொள்ளவில்லை. ஆகவே முற்பட்ட வகுப்பினர், அவர்களுடைய எண்ணத்தைத் திருத்தி அமைத்துக்கொண்டு, பிற்பட்ட வகுப்பினரின் பிரச்னையை தீர்க்க முயல வேண்டும். இங்கு இருக்கும் மந்திரிகளில் சிலர் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராகயிருக்கலாம். உண்மையாகவே, அவர்களை '**Backward class**' ஆகச் சேர்த்துக் கொள்ளத் தயார். கனம் நிதி மந்திரி அவர்கள் 'கொங்க வெள்ளாள' இனத்தைச் சேர்ந்தவர். அவர் '**Backward class**' ஆகச் சேர விரும்பினால், நாங்கள் அவரைச் சேர்த்துக் கொள்ளத்தயார். பிற்பட்ட வகுப்பினரின் எண்ணிக்கை 32 சத விகிதம் என்று அவர் சொல்லியிருக்கிறார். 1952-ம் வருடத்திலே எடுக்கப்பட்ட ஜன சங்கியையின்போது, பிற்பட்ட வகுப்பினர், முற்பட்ட வகுப்பினர், ஹரிஜன், என்ற அடிப்படையில் கணக்கெடுக்கப் படவில்லை. பிற்பட்ட வகுப்பினரின் எண்ணிக்கை 60 சத விகிதம் என்று

நாங்கள் சொல்லுகிறோம். அவர் ' **Backward ciass** ' ஆக இல்லாத காரணத்திற்காக 32 சத விகிதம் என்று சொல்லுவது சரியல்ல. அவரே பார்த்து, உண்மையை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன். கல்வி வசதிகள் மட்டும் எங்களுக்குக் கொடுத்தால் போதும். உத்தியோகம் நாங்கள் வாங்கிக் கொள்ளுகிறோம். எங்களுக்கும் திறமை உண்டு. ' **Knowledge is not the monopoly of a few sections of people. Even a Harijan can stand on a par with a man of any other community.** ' எங்களுக்குக் கல்லூரிகளில் படிப்பதற்கு வேண்டிய வசதி மாத்திரம் இருக்கும்படி செய்துவிட்டால், உத்தியோகம், மற்ற விஷயங்களையெல்லாம் நாங்கள் பார்த்துக்கொள்வோம்.

" அடுத்தபடியாக கார்ப்பொரேஷன் தேர்தல் வருவதாக விளம்பரம் செய்திருக்கிறார்கள். தேர்தலை வரவேற்கிறேன். ஆனால் ஜனநாயக ரீதியில் ' எலக்டோரல் ரோலை ' திருத்தி யமைக்கவேண்டும். இப்பொழுது இருக்கும் ' எலக்டோரல் ரோல் ' மிகவும் **defective**-ஆக யிருக்கிறது. இறந்துபோனவர், ஊரைவிட்டு வேறு ஊர் போனவர் இவர்களின் பெயர்கள் எல்லாம் அதில் காணப்படுகின்றன. ஆகவே இந்த ஜாப்தாவை உடனடியாக ' **revise** ' செய்வதற்கான நடவடிக்கைகளை கார்ப்பொரேஷன் எடுத்துக்கொண்டு, பிறகு தேர்தலை நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

" இந்த மாகாணத்திலேயுள்ள தமிழ் மாணவர்கள் வெளி மாகாணங் களிலே படிக்கிறார்கள். அவர்களுக்கு இலவசச் சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்று நான் பன்முறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அர சாங்கம் முன்வந்து இலவசச் சம்பளம் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த மாணவர்களின் சார்பில் அரசாங்கத்திற்கு எனது நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

" கடைசியாக ஒரு விஷயத்தை மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன். என்னுடைய தொகுதியிலே மகாபலிபுரம் என்ற ' டூரிஸ்ட் ஸெண்டர் ' இருக்கிறது. நல்ல முறையிலே அதைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். '**Tourist traffic**' ஐ அதிகப்படுத்தினால், அரசாங்கத்திற்கு நல்ல வருமான மும் கிடைக்கும். நான் ஒவ்வொரு ஆண்டும் இதைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அங்கே வருகிற ' டூரிஸ்டு ' களுக்கு ஒரு ஹோட்டல் கட்டுவதாகச் சொன்னார்கள். அதற்கு வேண்டிய நிலம் (**site**) கூட தெரிந்தெடுத்துவிட்டார்கள். ஆனாலும் இன்னும் வேலையைத் துவக்க வில்லை.''

THE HON. SRI C. SUBRAMANIAM :—" வேலை துவக்கியாய் விட்டது. அதற்கு முழு ' கிரெடிட்டையும் ' கனம் அங்கத்தினர் எடுத்துக் கொள்ளலாம்.''

*SRI K. VINAYAKAM :—" வேலையைத் துவக்கினால் மட்டும் போதாது. அதிலிருந்து வருவாய் கிடைக்கும்படி செய்யவேண்டும். இந்த ' டூரிஸ்ட் ஸெண்டருக்கு ' அமெரிக்கா, ரஷியா முதலிய வெளி நாடு களிலிருந்து வரும் ' டெலிகேஷன் ' கள் கூட எங்கள் ஜில்லா கலெக்டர், மற்றும் ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர், தாசில்தார் போன்ற ரெவின்யூ அதிகாரிகள் எல்லோரும் போவதால், அவர்கள் ஆபீசுகளுக்கு வரமுடிய வில்லை. டெலிகேஷன்கள் கூட மகாபலிபுரம், காஞ்சீபுரம், திருக்கழு குன்றம் முதலிய இடங்களுக்குப் போகிறார்கள். இதனால் அவரவர்க ளுடைய வேலையைச் சரிவரச் செய்ய முடியவில்லை. ஆகவே ரெவென்யூ வேலைகளுக்குக் குந்தகம் ஏற்படாமல் இதற்காக ஒரு ' **Liaison Officer** ' ஐ தனியாகப் போட்டால் நன்றாக இருக்கும். இதை உடனடி யாக அரசாங்கம் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

" அடுத்தபடியாக, ' **agrarian unrest** ' ஐ பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். என் ஜில்லா சம்பந்தப்பட்ட வரையில் விவசாயி களுக்குப் பல சிக்கல்கள் இருக்கின்றன. ஜமீன் ஒழிக்கப்பட்ட கிராமங்

5th March 1955] [Sri K. Vinayakam]

களிலே, பெரிய நிலச்சுவான்தார்கள், 100-க்கு 80 விகிதம் வாரம் வாங்கிக் கொள்கிறார்கள். இதனால் தொல்லை ஏற்படுகிறது. தஞ்சை ஜில்லாப் பண்ணையாள் சட்டத்தைப் போல் எங்கள் ஜில்லாவுக்கும் ஒரு சட்டம் கொண்டு வரவேண்டும். இந்த விவசாயிகளின் தகராறுகளை 'அட்ஜுடிகேஷனுக்கு' விடவேண்டுமென்று கலெக்டரை அணுகினால், இதிலே தலையிடுவதற்கு தனக்கு அதிகாரம் இல்லை என்று சொல்லுகிறார். விவசாயிகளும், மிராசுதார்களும் சண்டை போட்டுக்கொண்டால் அப்பொழுது தலையிடுகிறேன் என்று சொல்லுகிறார். அவர் சொல்வதாவது : 'We will appear on the stage just to maintain law and order.' ஏற்கெனவே யிருக்கிற தொல்லையை வளரவிட்டு, வளர்ந்த பிறகு அமைதியை நிலைநாட்டுவதற்காகத் தலையிடுவோம் என்று சொல்வது பைத்தியக்காரத் தனம். ஆகவே ஒரு 'Comprehensive tenancy legislation' கொண்டு வர வேண்டும். சட்டம் வந்த பிறகும் கூட அங்கேயுள்ள தொல்லைகளை உடனடியாகத் தீர்ப்பதற்கு ஜில்லா அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும். சில கிராமங்களில், பெரிய மிராசுதார்கள், விவசாயிகள் இவ்வளவு கொடுத்தால்தான் பயிர் செய்வதற்கு நிலங்கள் கொடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். இதனால் விவசாயிகள் நிலத்தை விட்டு வெளியேறவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. உடனடியாக கலெக்டர் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்து, இந்த மாதிரித் தகராறுகளை யெல்லாம் அவரிடம் 'அட்ஜுடிகேஷன்'-க்கு விட ஏற்பாடு செய்யவேண்டும். இத்துடன் என் பேச்சை முடித்துக்கொண்டு வெட்டுப் பிரேரணைகள் வரும் பொழுது, பாக்கி விஷயங்களைப் பற்றி பேசுகிறேன்."

SRI N. RATHINA GOUNDER:—" நமது மதிப்பிற்குரிய நண்பர் விநாயகம் அவர்கள், கொங்க வெள்ளாள சமூகத்தை பிற்பட்ட சமூகம் ஆக்கிவிட்டால், அவர்களுக்கு ஆட்சேபணை ஒன்றுமில்லை யென்று சொன்னார். எங்களுடைய சமூகம் நீண்ட காலமாகவே பிற்பட்ட சமூகமாக யிருந்து வருகிறது"

TEMPORARY CHAIRMAN (SRI P. G. Karuthiruman) :—" சந்தர்ப்பம் வரும்பொழுது கனம் அங்கத்தினர் இதைப்பற்றி பேசலாம்."

SRI A. RATNAM :—" கனம் சேர்மன் அவர்களே, இன்றைய பட்ஜெட் விவாதத்திலே பலவற்றைப்பற்றி பேசவேண்டியிருந்தாலும், குறிப்பாக நான் எதற்காக இந்தச் சபையில் வந்தேனோ அதைப் பற்றி அதிகமாக பேச விரும்புகிறேன். காரணம் மற்ற சமயங்களில் அதிக நேரம் கிடைப்பதில்லை. இந்த பட்ஜெட் உரையை தமிழில் வழங்கியிருப்பதற்காக நிதி மந்திரி அவர்களைப் பாராட்டத்தான் வேண்டும். இனி எல்லாமே தமிழிலேயே வரவேண்டும். தமிழகத்திலே மெஜாரிட்டியாக வுள்ள தமிழர்கள் சார்பிலே எல்லா அலுவலகங்களில், சர்க்காருடைய சகல புத்தகங்கள், மற்ற ரிகார்டுகள் எல்லாம் தமிழிலேயே இருப்பது நலமென்று கருதுகிறேன். விரைவிலே நிதி மந்திரி அவர்கள் அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று வேண்டுகோளும், முதலில் இதைச் செய்ததற்காக பாராட்டுதலும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். 11 a.m.

" நிதி மந்திரி அவர்கள் பலமுறைகளிலே தற்காலத் திட்டங்களை விளக்கி, ஐந்து ஆண்டுத் திட்டம், திட்டத்தின் செலவு, அதன் அறிகுறி, நீர்ப்பாசனம், மின்சாரம், பழுப்பு நிலக்கரி, கிராமங்களுக்கு தண்ணீர் வசதி, நகரங்களுக்கு தண்ணீர் வசதி, ஸ்தல ஸ்தாபனம், கல்வி மான்யம் ஆகியவற்றைப்பற்றி யெல்லாம் அழகாக பட்ஜெட்டில் பொறித்திருக்கிறார். அதற்காகவும் அவரைப் பாராட்டவேண்டும். ஆனால் அழகாக பொறிக்கப் பட்டிருந்தாலும் போதாது. நடைமுறையிலே நல்ல பலன் விளைவிக்குமா ? மக்கள் நல்ல பலனடைவார்களா என்று பார்க்கின்ற நேரத்திலே, பரிதாபத்திற்குரிய உரையாகத்தான் இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்."

" நிதி அமைச்சர் அவர்கள் என்னைப் பலமுறைக் கண்டித்திருக்கிறார். எங்கள் சமூகத்தை நன்றிகெட்ட சமூகம் என்றும் கூறியிருக்கிறார். நாங்கள்

[Sri A. Ratnam] [5th March 1955

நன்றியுள்ளவர்களாகத்தான் கடமையைச் செய்து வருகிறோம். மேலும் நன்றி செலுத்துவதற்கு அரசாங்கத்தார் என்ன நன்மைகளைச் செய்திருக்கிறார்கள் என்று பார்க்கவேண்டும். யார் நன்றிகெட்ட சமூகம்? இந்த நாட்டின் ஜனத்தொகையில் 3-ல் ஒரு பகுதியாக இருக்கிற எங்கள் ஆதரவை வைத்துக்கொண்டுதானே, ஒரு சில கூட்டம் இந்த ஆட்சியை நடத்திக்கொண்டு அவர்கள் உல்லாசபுரியில் வாழ்ந்துக்கொண்டுவருகிறார்கள்? அதையெல்லாம் ஏன் அலசிப் பார்க்கக்கூடாது. இந்தச் சபையில் என் சமூகத்தினர் இந்த ஆட்சிக்கு நன்றி செலுத்தும் காரணத்தினால் அல்லவா இந்த ஆட்சி இன்று நிலைத்திருக்கிறது. ஆந்திராவும், தமிழகமும் ஒன்றாகச் சேர்ந்திருந்த காலத்திலும், 63 பேர்களில் 45 பேர்கள் காங்கிரசில் உறுபினர்களாக இருந்த காரணத்தினால் அல்லவா காங்கிரஸ் கட்சி இந்த நாட்டிலே நிலைத்திருக்கச் செய்தது. சென்ற தேர்தலிலே மண்ணைக் கவ்விய காங்கிரசுக்கு ஈடு செய்வதற்காக ஹரிஜனங்கள் அல்லவா ஒத்துழைத்தார்கள்? தென்னாப்பிரிக்காவில் மகாத்மா காந்தி அடிகளின் மகனின் உயிரைக் காப்பாற்றிய சமூகமும் இதுவே; ஆனால் இன்று அப்படிப்பட்ட மக்கள் பரிதவிக்கின்றனர். அவர்கள் அனுபவிக்கும் துன்பங்களும், கஷ்டங்களும் கணக்கிலடங்கா. ஆனால் அவர்களை எதிர்த்துக் கூறுவதற்கு நேரம் கிடையாது. அவர்கள் சூரையாடப்படுகின்றனர்; கொள்ளையடிக்கப்படுகின்றனர்; அவர்களுடைய குடிசைகள் கொளுத்தப்படுகின்றன; அவர்கள் மாடுபோல் அதிகாரிகளால் அடித்துவிரட்டப்படுகின்றனர். ஆனால் இதையெல்லாம் கேட்பதற்கு அவர்களுக்கு யாருமில்லாமல், பராரிகளாக பஞ்சமர்களாக விடப்பட்டிருக்கின்றனர், சேரிகளிலேயுள்ள மக்களின் நிலை இவ்வாறு இருக்கின்றனவே என்று சட்டசபையில் எடுத்துக் கூறினாலும், அவர்களுக்கு எந்தவிதமான நிவாரணமும் அளிக்க அரசாங்கம் முன்வருவது கிடையாது. ஆனால் இவைகளையெல்லாம் எடுத்துக்கூறினால், அது பொறுக்காமல் மட்டும் சில மெம்பர்கள் அதைத் தடைப்படுத்துவதற்காக எழுகின்றார்கள். ஆனால் என் மனம் ரொம்பவும் புண்பட்டு இருக்கிறது. உதாரணமாக ஒரு விஷயத்தை இச்சமயத்திலே குறிப்பிட விரும்புகின்றேன்.

"மூன்று மாதங்களுக்கு முன் திருநெல்வேலியில் ஒரு கிராமமே கொளுத்தப்பட்டிருக்கிறது. இவ்வாறு பல இடங்களில், இன்னும் கொலை, கொள்ளை முதலியன நடைபெற்று இருக்கின்றன. ஆனால் அரசாங்கத்திற்கு என்ன தகவல் கிடைத்ததோ தெரியாது. ஒரு வாரம், இரண்டு வாரம் விடாமல் சூரையடிக்கப்பட்டாலும் தந்திமேல் தந்தி பறந்தாலும் அதுபற்றியெல்லாம் சர்க்காருக்கு ஒன்றும் தெரிவதில்லை. கடைசியில் விசாரணைக்கு வரும்போது யார் உண்மையில் குற்றவாளி? யார் கொள்ளையடித்தார்கள்? யார் அக்கிரமம் செய்தார்கள்? யார் பிறர் பொருளை அபகரித்தார்கள்? என்றெல்லாம் விசாரிப்பதே கிடையாது. இந்த நிலையிலே தான் இன்று போலீஸ் இலாகா பணியாற்றிவருகின்றது. C.I.D.-க்கள் இருந்தும் ஒருவித பயனும் கிடையாது. ஆனால் இந்த இலாகாவிற்குத் தான் கோடிக்கணக்கில் மான்யங்கள் ஒதுக்கப்படுகின்றது. ஆனால் உண்மையில் இவர்கள் ஏழைமக்களுக்கு உதவி புரிகின்றார்களா என்று பார்க்கும்போது சிறிதும் இல்லை. உதவி புரியாவிட்டாலும் பரவாயில்லை, அக்கிரமங்கள் புரிகிறார்கள். கிராமங்களிலே வசிக்கும் பாமர மக்கள் அநியாயமாக நீதிமன்றங்களிலே குற்றம் சாட்டப்பட்டு குற்றக் கூண்டிலே ஏற்றப்படுகின்றனர். அதைத்தான் இன்று கண்கூடாகப் பார்க்கின்றோம். ஆனால் குற்றம் செய்த அதிகாரிகள் தங்களுடைய குற்றத்தை ஒப்புக் கொள்வார்களா? எப்படி திருடன் திருட்டை ஒப்புக்கொள்ளமாட்டானோ, எப்படி கொலைக்காரன் கொலையை ஒத்துக்கொள்வது கிடையாதோ, அப்படியே குற்றம் செய்த அதிகாரிகளும் தங்கள் குற்றங்களை ஒப்புக்கொள்வது கிடையாது. ஆகவே அவர்கள் கொடுக்கும் பொய்யான ரிப்போர்ட்டைத் தான் உண்மையென்று நம்பி அநியாயமாக தண்டிக்கப்படுகின்றனர். இவ்வாறு நாளுக்கு நாள் எங்கள் சமூகத்தினர்மேல் வீணான குற்றங்களைச் சுமத்தி நசுக்கிக்கொண்டு வருகிறார்கள். அதிலும் பாமர மக்கள் பல ஆயிரம் வருஷங்களாக வருணாசிரமத்தால் அடிபட்டு வந்த ஒருவன் இக் காரியத்தைச் செய்தாலும் பரவாயில்லை. ஆனால் படித்த மனிதன்

பட்டம் பெற்றவர்கள், பதவி வகிப்பவர்கள், காங்கிரஸ்காரர்கள், அதிலும் **M.L.A.**-க்கள், டிஸ்ட்ரிக்ட் போர்டு பிரசிடெண்டு, டிஸ்ட்ரிக்ட் போர்டு மெம்பர் போன்றவர்கள் இம்மாதிரியான குற்றங்களைச் செய்தால், அந்த அநியாயத்தை எங்கே போய் கூறுவது ? அந்த அளவிலேதான் இன்று ஹரிஜனங்கள் நடத்தப்பட்டு வருகின்றார்கள். இதையெல்லாம் ருசுப் படுத்துவது என்றாலோ, விளக்கமாக கூறவேண்டுமென்றாலோ அதற்கு தக்க நேரம்தான் கிடையாது.

" உதாரணமாக திருநெல்வேலியில் அபிமன்யு என்ற ஒரு ஹரிஜன்மீது வீணாக வழக்கு தொடரப்பட்டது. அதுபற்றி மூன்று மாத காலமாகியும் இதுவரை ஒருவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆனால் அந்த வழக்கின் காரணமாக இருந்தவர்கள் என்று மேலும் அங்குள்ள பல ஹரிஜனங்கள் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்து ருசுப்பிக்கப்படாமலேயே அநியாயமாக சிறைப்படுத்தப்பட்டிருக்கின்றனர். இதையெல்லாம் அரசாங்கத்திடம் எடுத்துச் சொன்னாலும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுப்பதில்லை. ஆனால் அபிமன்யுவை பொறுத்த வரையிலும் அவன் குற்றவாளி என்று ருசுப்பிக்கப்படாமலேயே அவனை எப்படியெல்லாம் ஒரு பட்டம் வாய்ந்தவர், பதவிப் பெற்றவர், காங்கிரஸ்காரர், ஒரு **M.L.A.**-வும் கூட என்ன செய்திருக்கிறார் என்பதைப் பார்ப்போம்—அவனைக் கட்டி வாயிலே செருப்பைக் கவ்வச் செய்து, அம்மணமாக்கி, ஊரிலே சுற்ற வைத்து, பின்னர் காரிலே ஏற்றிக்கொண்டு கோர்ட்டுக்குக் கொண்டுபோய் இருக்கின்றனர். அவன் மீதும் குற்றம் சாட்டப்பட்டு சிறையில் தள்ளப் போகிறார்கள். காரணம் தேவகி என்ற ஒரு பெண்ணுக்கு ஏதோ பணத்தைக் கொடுத்து காதை அறுத்ததாக குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. ஆனால் அவன் குற்றவாளி அல்ல என்று சொல்லி, நிரூபித்து அவனுக்கு ஜாமீன் கொடுப்பதற்குகூட அங்குள்ள ஹரிஜன மக்கள் அஞ்சுகிறார்கள். காரணம் அவர்கள் பட்டம், பதவியில் உள்ளதாலும், போலீஸ் டிபார்ட்மெண்டும், நீதிமன்றமும் அவர்களுக்கு துணைபுரிந்துகொண்டு இருப்பதுமேயாகும். அவர்களை எதிர்த்து நியாயத்தைச் சொல்லுவதற்கும் முடியாத நிலையில் இன்று ஹரிஜனங்கள் துன்புறுத்தப்படுகிறார்கள். ஆகவே இதையெல்லாம் அரசாங்கம் கவனித்து ஹரிஜனங்களைப் புறக்கணிக்காமல் அவர்களுக்கு ஆவன செய்வதற்கு முன்வரவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்."

Sri P. CHELLATHURAI :—" அந்தவிதமான அக்கிரமம் செய்யக் கூடிய காங்கிரஸ்காரர், அதுவும் **M.L.A.** யார், அவர் பெயர் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்."

Sri A. RATNAM :—"கேள்வி நேரத்திலே வந்தபோதே பெயர் சொல்லப்பட்டது. இப்பொழுது மறுபடியும் இந்தச் சபையில் அவருடைய பெயரைச் சொல்வது அவ்வளவு நல்லதல்ல. ஆனால் அவர் ஒரு காங்கிரஸ் எம்.எல்.ஏ. என்பதை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்."

Sri G. GOVINDAN :—" தனிப்பட்ட எம்.எல்.ஏ.-யைப்பற்றியும் 11-10 a.m. காங்கிரஸ் எம்.எல்.ஏ.-யைப்பற்றியும் கனம் அங்கத்தினர் சொல்லுகிறார். அவருடைய பெயரைச் சொல்ல முடியுமா என்று கேட்கிறேன்."

Sri A. RATNAM :—" பல எம்.எல்.ஏ.-க்கள் இருக்கிறார்கள். டிஸ்ட்ரிக்ட் போர்ட் மெம்பர்களும் அப்படி இருக்கிறார்கள். ஒவ்வொரு நபர்களின் விவரங்களைப்பற்றியும் சொல்ல முடியும். அவர்களைப்பற்றி சொல்லுவதற்கு எனக்கு இப்பொழுது சந்தர்ப்பம் கிடையாது. எல்லாவற்றையும் சொல்லுவதாக இருந்தால் மணிக்கணக்காக சொல்ல முடியும்."

Sri G. GOVINDAN :—" தைர்யம் இருந்தால் அவர்களுடைய பெயரை தயவு செய்து சொல்லுங்கள்."

[5th March 1955

Sri A. RATNAM :—" அந்த அக்கிரமம் செய்த காங்கிரஸ் சம்பந்தப்பட்ட எம்.எல்.ஏ.பெயரை இந்த சபையிலேயே ஹரிஜன் காங்கிரஸ் எம்.எல்.ஏ.-வால் முன்பே கூறப்பட்டிருக்கிறது. அந்த எம்.எல்.ஏ. பெயரைக் கூறும்போதும் கனம் நிதி அமைச்சர் தடுத்தும் இருக்கிறார் என்பதை ஞாபக மூட்டுகிறேன்.

"ஹரிஜனங்களுக்கு மந்திரி பதவியை மட்டும் கொடுத்துவிட்டால் அந்த சமூகம் முன்னேற்றமடைந்துவிட்டது என்று சொல்லிவிட முடியாது. ஹரிஜனங்களுடைய குறைகளைப்பற்றி சொல்லவேண்டுமென்றால் இந்த குறுகிய நேரம் போதாது. ஹரிஜனங்களுக்கு எவ்வளவோ கொடுமைகளை இழைத்து வருகிறார்கள். அதற்கு பல உதாரணங்களை எடுத்துக் கூறலாம். ஹரிஜனங்களுக்கு தீங்கிழைக்கிறவர்களின்மேல் நடவடிக்கை எடுப்பது கிடையாது. சென்ற டிசம்பர் மாதத்தில் ஒன்று நடந்தது. அதற்கு எந்த நடவடிக்கையும் எடுத்ததாகவே தெரியவில்லை. ஹரிஜன் ஒருவர் எஸ்.ஏ. பி.-யில் சேர்ந்திருக்கிறார். ஒரு ஹரிஜன் போலீஸ் வேலையில் இருப்பதா என்று அவரை கொடுமைப்படுத்துகிறார்கள். அவர் ஊரில் இல்லாத போது அவருடைய வீட்டை எரித்து அவருடைய தாயாரை எரியும் வீட்டில் பொசுக்கி இருக்கிறார்கள். அந்த அம்மையார் சர்க்கார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். இதற்கு யார் பேரிலாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா என்றால் இல்லை. ஹரிஜனங்கள் ரோடுகளிலும் போகக்கூடாது. சைக்கிள்களில் போகக்கூடாது. டிசம்பர் மாதத்தில் போளூர் அரக்கோணத்தில் இப்படி நடந்திருக்கிறது. இச்சிப்புத்தூர் சேரியில் ஒரு அம்மையார் இறந்துவிட்டார். அவரை சுடுகாட்டிற்குக் கொண்டுபோவதற்கு வழி விடவில்லை. கழுத்தளவு தண்ணீர் உள்ள வாய்க்காலைக் கடந்து நீந்திக்கொண்டு சென்று அந்த அம்மையாரை அடக்கம் செய்தார்கள்.

" ராணிப்பேட்டை ஆஸ்பத்திரியில் ஒரு படித்த பெண் நர்சாக இருக்கிறாள். அந்த அம்மாள் ஊரில் குடியிருந்தார் என்ற காரணத்திற்காகவும் அவள் படித்திருக்கிறாள் என்பதற்காகவும் ஜாதி ஹிந்துக்கள் அந்த அம்மையாரை அடித்து இம்சித்திருக்கிறார்கள். அந்த ஹரிஜனப் பெண்ணை ஜாதி ஹிந்துக்களான ஆண்கள் பலர் அவள் விபசாரத்திற்கு அழைத்தாள் என்று அவர் பேரில் பழி சொல்லுகிறார்கள். ஹரிஜனங்கள் ஆண்களாக இருந்தால் அவர்கள் ரௌடிகள் என்றும், கேடிகள் என்றும் போலீஸ்காரர்கள் ஹரிஜனங்களுக்குத் தெரியாமலேயே ரிக்கார்டுகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றிய ரிக்கார்டுகள் நீதி மன்றங்களில் காட்டப்படுகின்றன. பெண்களாக இருந்தால் அவர்களை விபசாரிகள் என்றும் சொல்லுகிறார்கள். ஹரிஜனங்கள்பேரில் பொய்யான கேஸ்களை தயாரிக்கிறார்கள். ரௌடிகள் என்றும் கேடிகள் என்றும் பதிவு செய்து கொள்ளுகிறார்கள்.

" சமுதாய திட்டம் என்றும், தேசிய விஸ்தரிப்பு திட்டம் என்றும், பல திட்டங்களை அமைத்து பணம் செலவிடுகிறார்கள். அவைகளை நாங்கள் வரவேற்கிறோம். நாடு சுதந்திரம் அடைந்தாலும் சேரி மக்கள் சுதந்திரம் அடைந்திருக்கிறார்களா என்று பார்க்கவேண்டும். இந்த திட்டங்களின் கீழ் ரோடுகள் போடுவதும், கிணறுகள் வெட்டுவதும், பாடசாலைகளை அமைப்பதும், வைத்தியசாலைகளைக் கட்டுவதுமாக இருக்கிறது. அவைகளினால் சேரிகளுக்கு எந்தவிதமான சௌகர்யமும் கிடையாது. மற்றும் கிராமங்களில் ஏதாகிலும் சௌகர்யம் செய்யவேண்டுமென்றால் அந்தச் செலவில் பாதியை கிராமத்தார்கள் கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அப்படி கிராமத்தார்கள் கொடுக்க முடியாமலிருப்பதால் சர்க்காரே அந்தப் பணத்தைப்போட்டு செலவு செய்ய வேண்டும். ஹரிஜனங்களும் பாதிப் பணத்தைக் கொடுக்கவேண்டும் என்று சொல்லுவது சரியல்ல. அரசாங்கமே அந்தப் பணத்தை ஏற்றுக் கொண்டு வேலைசெய்யவேண்டும்.

" ஐந்து வருட திட்டத்தில் 86 கோடி 43 லட்சம் ரூபாய் செலவிடப் போவதாகவும் அதில் தேசிய விஸ்தரிப்புக்கு 6 கோடி 41 லட்சம் ரூபாய் செலவிடப்போவதாகவும் சொல்லுகிறார்கள். ஹரிஜனங்களுக்கு என்று பணம் ஒதுக்கவேண்டுமென்றும், விவசாயம் செய்ய கடன் வேண்டும்

5th March 1955] [Sri A. Ratnam]

மென்று கேட்டால் ‘உங்களுக்குத்தான் தனியாக ஹரிஜன க்ஷேமாபிவிருத்தி டிபார்ட்மெண்ட்டை ஒதுக்கி இருக்கிறோமே’ என்று சொல்லுகிறார்கள். இதைப்பற்றி தோழர் பி. ஜி. மாணிக்கம் நன்றாக கூறியிருக்கிறார். ஒரு கோடி ஒன்பது லட்சம் ரூபாய் ஒதுக்கிவிட்டு ஐந்து லட்சம் ரூபாய் தான் செலவு செய்திருக்கிறார்கள் என்றும் மற்றும் அந்த டிபார்ட்மெண்டை மூடி விடப் போவதாகவும் ரெவினியு போர்டுடன் சேர்த்துவிடப்போவதாகவும் தெரியவருகிறது. சுதந்தரம் அடைந்து ஹரிஜன இயக்கம் ஆரம்பித்த பிறகு லேபர் பாடசாலைகள் குறைந்திருக்கின்றன. இந்த பாடசாலைகளையும் கல்வி இலாகாவுடன் சேர்த்துவிட காரியங்களும் நடக்கின்றன. ஹரிஜன வெல்பேர் கமிட்டிக்கு தெரியாமல் இது நடந்துவருவதாகத் தெரியவருகிறது. ஹரிஜன வெல்பேர் பாடசாலைகளை கல்வி இலாகாவுடன் சேர்த்துவிடப் போவதாகவும் தெரியவருகிறது. இரண்டு மூன்று க்ளார்க்குகளை மட்டும் வைத்துக்கொண்டு நடத்தினால் போதும் என்றும் சொல்லுகிறார்கள். ஆனால் பிரகாசம் காலத்தில் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கி ஹரிஜனங்களுக்கு 1948-ம் வருஷம் ஹரிஜன வெல்பேர் கமிட்டி திட்டத்தை தீட்டினார்கள். ஒரு கோடி ரூபாயை வீணாக செலவழித்தார்கள். இது வரையில் அதற்குக் கணக்கு கிடையாது. கமிட்டி ரிப்போர்ட்டின்படி ஹரிஜன டிபார்ட்மெண்ட் அமைக்கப்பட்டது. அதை இப்பொழுது அழிக்கப் பார்க்கிறார்கள்.

“ஹரிஜனங்களுக்கு நிலம் கொடுப்பது இல்லை. புதிய பள்ளிக்கூட வசதி கிடையாது, கிணறுகள் வெட்டிக் கொடுப்பது இல்லை. எங்களுக்கு ஏதாகிலும் நன்மை செய்யவேண்டுமென்ற எண்ணம் உங்களுக்கு இல்லை என்றால் எங்களை அந்தமானுக்கு அனுப்பி விடலாம். அங்கு நாங்கள் போவதற்கும் தயாராக இருக்கிறோம். கனம் சுவாமி சகஜாநந்தம் 49 கோடி ரூபாய் வருமானத்தில் எங்களுக்கு பத்து கோடி ரூபாய் ஒதுக்கிவைக்கவேண்டும் என்று சொன்னார். அப்பொழுது உங்களுக்கு பாகிஸ்தான் வேண்டுமா அல்லது பரஸ்தான் வேண்டுமா என்று கேட்டார்கள். எங்களுக்கு பாகிஸ்தானும் வேண்டியதில்லை, பரஸ்தானமும் வேண்டியதில்லை. எங்களை அந்தமான் தீவுக்கு அனுப்பினால் போதும். இல்லாவிட்டால் ஆடு மாடுகளுக்கு அளிக்கப்படுகிற ஊரிலுள்ள மாட்டுக் கொட்டகைகளிலாவது இடம் கொடுங்கள். அப்பொழுதாவது தீண்டாமை தீருமா? இல்லையேல் ஒரு சேரி ஒன்றுக்கு ஒரு புட்டி கிருஸ்னாயில் கொடுங்கள். சேரிகளை கொளுத்தி விடுங்கள். எங்களுக்கு ஏன் தனி சுடுகாடு, தனி பள்ளிக்கூடம், தனி கிணறு, தனி பாதை முதலியன. சுதந்தரமாக சுகாதாரமாக வாழ விடுகிறீர்களா? அக்ரகாரம், ஊர், சேரி என்ற உறைவிட பாகுபாடுகள் உள்ளளவும் தீண்டாமை ஒழியாது. ஹரிஜனங்களுக்கு நல்லது செய்ய உங்களுக்கு மனம் கிடையாது. கேட்டால் கடிந்து பதில் சொல்லுகிறீர்கள். உண்மைக்கு மாறாக திணிக்கிறீர்கள். கொடுமைப்படுத்துகிறீர்கள்.”

*Sri G. SAMIA KOORAYAR :—“கனம் சேர்மன் அவர்களே, 11-20 a.m.
1955–56-வது வருஷத்திய வரவு செலவுத் திட்டத்திலே மூன்றாவது படிவம் வரை ஜாதி பேதமன்னியில் கல்விச் சலுகை அளித்திருப்பதைக் கண்டு நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். அதோடு நீர்ப்பாசனம், மின்சார வசதி பெருகியிருப்பதைப்பற்றியும் திருப்திபட வேண்டிய விஷயம் தான். ஆனால், புதிய வரி போட்டிருப்பதானது பெரிய களங்கம் மாதிரி தான் இருக்கிறது. விவசாயத் துறையில் புதிய வரி வரும் என்று பட்ஜெட் வருவதற்கு முன்பு யாரும் கனவுகூட கண்டிருக்க முடியாது. விவசாயிகள்மீது போடப்பட்டிருக்கும் வரியானது விவசாயிகளுக்கு மிகவும் அதிர்ச்சி யளிக்கக்கூடியதாகவும், தாங்கமுடியாத வரிச்சுமையாகவும் இருக்கும் என்று சொல்லத் தேவையில்லை. இந்த வரியிலிருந்து கிடைக்கும் வருமானத்தை பஞ்சாயத்து, ஜில்லா போர்டு ஸ்தாபனங்களுக்கு கொடுக்கப்போகிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் ஆட்சி நடந்த காலத்தில் கலால் வருமானத்தைக்கொண்டு கல்வி இலாகா நடந்த மாதிரிதான் இந்த முறை இருக்கிறது. ஒரு ஏக்கரா நிலம் உடையவன் ரூபாய் 2 முதல் 3 வரையில் வரி கொடுக்க வேண்டிவரும். இது விவசாயி தாங்கமுடியாத வரி சுமையாகும்.

[Sri G. Samia Koorayar,] [5th March 1955

" நெல் விலையைப்பற்றி மந்திரி அவர்கள் புள்ளி விவரங்கள் கொடுத்தார்கள். எப்பொழுதுமே நெல் விலை அறுவடை காலத்தில் வெகுவாகக் குறைந்துவிடுவது வழக்கம். ரூ. 16-க்கு விற்ற நெல், ரூ. 9-க்கு குறைந்து இப்பொழுது ரூ. 12-க்கு வந்திருக்கிறது. ஏழை நடுத்தர விவசாயிகளெல்லாம் தானியங்களை அறுவடை காலத்தில் விற்று விடுவார்கள். மிகக் குறைந்தவிலையில் போட்டுவிடுவார்கள். அப்படித்தான் இதுவரை நடந்துவருகிறது. விவசாயிகளுக்கு பிரமாதமான லாபம் வந்துவிட முடியாது.

" $1\frac{3}{4}$-க்கு விற்றுவந்தது இப்பொழுது மூன்று மடங்காக தானியங்களின் விலை உயர்ந்திருக்கிறது என்று ஒருவர் சொன்னார். ஆனால், வாழ்க்கைச் செலவு இன்றைக்கு ஒன்றுக்குப் பத்து மடங்கு உயர்ந்திருக்கிறது என்பதை அந்த அங்கத்தினர் மறந்துவிட்டார் என்று நினைக்கிறேன். ஒரு துண்டு நாலணு விற்றது இப்பொழுது இரண்டு ரூபாய்க்கு விற்கிறது. அப்படிப்பார்த்தால் துணியின் விலை 8 மடங்கு அல்லவா உயர்ந்திருக்கிறது ? சர்க்கரை, மிளகு போன்ற வாழ்க்கைக்குத் தேவையான எல்லாப் பண்டங்களின் விலையும் இப்பொழுது ஒன்றுக்குப் பல மடங்கு உயர்ந்திருக்கிறது. இந்த நிலையில் இப்பொழுது பட்ஜெட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் வரியானது ஒரு சிறு வரிதானே என்று சொல்வதற்கில்லை. இவ் வரியை விவசாயிகளால் தாங்கமுடியாது. விவசாயத் துறையானது என்றைக்குமே லாபகரமான தொழிலாக இருந்தது என்று கருதமுடியாது. கிராமங்களில் உள்ள நிலங்கள் அந்தந்த கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்குச் சொந்தமாகவுள்ளவை நான்கில் ஒரு பங்கு, அல்லது மூன்றில் ஒரு பங்கு இருக்கலாம். கிராமங்களில் பெருவாரியாக நிலம் வைத்திருப்பவர்கள் விவசாயத் தொழிலில் சம்பாதித்தவர்கள் அல்ல. வர்த்தகத் துறையிலும் உத்தியோகத் துறையிலும் சம்பாதித்தவர்களும் நியாயமற்ற வழியில் கிடைத்து, அதன் மூலம் பரம்பரையாக வந்ததாக சொல்லிக்கொள்ளுகிறவர்கள்தான் கிராமம், கிராமமாகவும் ஆயிரக்கணக்கான ஏக்கர்களாகவும் கிராமங்களில் நிலங்களை வைத்திருக்கிறார்களே யொழிய விவசாயத் துறையில் சம்பாதித்தவர்கள் அல்ல. நிலத்தை வைத்துக்கொண்டு அதிலிருந்து பணம் சம்பாதித்தார்கள் என்று சொல்லமுடியாது. ஆகவே, இப்பொழுது கொண்டுவர உத்தேசிக்கும் வரியை மெஜாரிடி பலத்தைக்கொண்டு வந்ததாக யாரும் நினைக்காமலிருக்க வேண்டுமானால் இவ்வரியைக் கைவிட வேண்டும். இல்லாவிட்டால் பொது ஜனங்களிடையே விபரீதமான பலனை உண்டு பண்ணும்.

"நிலச் சீர்திருத்தம் வரும், நிலச் சீர்திருத்தம் வரும் என்று விவசாய மக்கள் இதுவரை எதிர்பார்த்து இப்பொழுது ஏமாற்றம் அடைந்து கொண்டிருக்கிறார்கள். வருஷ கணக்கு ஆகும் என்று சொல்லிக்கொண்டு, இப்பொழுது மாதக் கணக்கில் வரப்போவதாகச் சொல்லப்படுகிறது. அந்தச் சீர்திருத்தம் சுப்ரமண்யம் கமிட்டி சிபார்சுகளின் அடிப்படையில் தான் வரும் என்று சொல்லப்படுகிறது. சுப்ரமண்யம் கமிட்டியின் சிபார்சுப்படி அப்பொழுதே நிலச் சீர்திருத்தம் அமுலுக்குக் கொண்டு வந்திருந்தால் இப்பொழுது கொண்டுவரப்படும் நிலச் சீர்திருத்தத்தினால் மக்கள் மேலும் பலன் அடைய ஏதுவாக இருக்கும். அப்பொழுது நிறுத்தி விட்டு குறைந்தபட்சம் எவ்வளவு நிலம் வைத்துக்கொள்ளலாம் என்ற அடிப்படை பிரஸ்தாபம் வந்தவுடனேயே ஆட்சேபணை செய்யதவர்களெல்லாம் சுப்ரமண்யம் கமிட்டி ரிப்போர்ட்டே தேவலை என்று சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். அந்த அடிப்படையில்தான் வரும் இந்தச் சீர்திருத்தம் என்றும் நினைக்கவேண்டியிருக்கிறது. இந்த சீர்திருத்தத்தில் நல்ல அம்சங்களும் விசேஷ உரிமைகளும் அதிகமாக சேர்க்கப்படவேண்டும்.

" நமக்குச் சுதந்திரம் வந்த பிறகு நேரடியாகச் சில பலன்களை அனுபவிக்கும்படியாகச் செய்யவேண்டும். சுதந்திரத்திற்குப் பிறகு ஒவ்வொருவருக்கும் குடியிருக்க மனை சொந்தமாக இருக்கவேண்டும். அனேக டெல்டாப் பிரதேசங்களில் ஹரிஜனங்களுக்கு மனை வசதி செய்து கொடுப்பதற்கு முடியவில்லையென்று சொல்லப்படுகிறது. டெல்டா பிரதேசத்தில்

5th March 1955] [Sri G. Samia Koorayar]

சில இடங்களில் காலனி ஒதுக்கி கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் காலனிக்கு வந்தபிறகு ஏற்கனவே குடியிருந்த இடம் பாழாக கிடக்கிறது இத்தனை வருஷங்களாகியும் நிலச்சுவான்தார் குடியேறவில்லை. ஆகையால், தைரியமாக அந்தந்த இடத்தையே அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கவேண்டும். மேலும் நிலமில்லாத எல்லோருக்கும் அவரவர்களுக்குச் சுதந்திரமான மனை இருக்கும்படியாகச் செய்யவேண்டும்.

" ஆந்திராவில் செய்ததுபோல் பத்து ரூபாய்க்குக் குறைந்த கிஸ்தி கட்டுபவர்களுக்கு வரி வஜா செய்துகொடுக்க வேண்டும். அப்படிச் செய்வதினால் சர்க்காருக்கு அதிகமாக நஷ்டம் ஒன்றும் ஏற்றுபட்டுவிடாது. ஒரு கோடி சொச்சம் ரூபாய் செலவாகலாம். மின்சாரத்துக்கு சுமார் 12 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் ஒரு கோடி சொச்சம் குறைத்துக் கொள்ளலாம். மின்சார செலவுகளைக் கொஞ்சம் குறைத்துக்கொள்ளலாம். இரண்டு வருஷங்கள் கிஸ்தி வஜா தொடர்ந்து செய்வதினால் ஒன்றும் கெட்டுவிடாது. இது நேரடியாக அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய பலனாக இருக்கும். ஆகவே, அதைச் செய்து பொது மக்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாக வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

" படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு புறமிருக்க கோடிக்கணக்கான விவசாய மக்களும் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஒரு வருஷத்திலே மூன்றில் இரண்டு பகுதி காலத்தில் விவசாயிகள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். படித்தவர்களிடையே உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்குவதற்கு திட்டம் வகுக்கப்பட வேண்டும். ஆனால், நிர்வாகச் செலவை அதிகப்படுத்தி பொதுமக்கள் தலையில் சுமரும்படியாக விட்டுவிடக்கூடாது. வேலை சிருஷ்டித்துக் கொடுத்தால்கூட பொது ஜனங்களுக்கு அது சுமையாக இருக்கக்கூடாது. விவசாயிகளிடையேயுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு கிராமக் கைத்தொழில்களையும் குடிசைத் தொழில்களையும் ஏற்படுத்த வேண்டும். முக்கியமாக அந்தத் தொழில் மூலம் உற்பத்தியாகும் பண்டங்கள் இந் நாட்டிலேயே செலவாகக்கூடிய முறையில் இருக்க வேண்டும், மார்க்கெட் தேடிக்கொண்டிருக்கும்படியாக இருக்கக்கூடாது. கைத்தறித் தொழில்களுக்கு ஆதரவுகேட்டு, அதுவே முடியாமல் இருக்கின்ற அளவுக்கு எல்லோரும் சட்ட சபையில் ஆதரவு கொடுக்கவேண்டுமென்று பட்ஜெட்டில் காணப்படுகிறது. இது மாத்திரம் போதாது. கைத்தறிக்கு மாத்திரம் ஆதரவு கொடுத்தால் நிலைக்காது, மில் நூல்களை கைத்தறிக்கு வாங்குவது முடியாத காரியம். கதர் உற்பத்திக்கு மனப்பூர்வமாக ஆதரவு தரவேண்டும். அதுதான் இயற்கையான கைத்தொழிலாக அமைய முடியும். மத்திய சர்க்காரோடு கலந்து பேசி மில்களை படிப்படியாகக் குறைத்து கதர் உற்பத்தியை பெருக்கவேண்டும். நாட்டுக் குடிசைத் தொழில்களும் கைக்குத்தல் அரிசி, நாட்டுச் செக்கு ஆகியவைகளுக்கு ஆதரவு கொடுக்கவேண்டும்.

" சமீபத்தில் தஞ்சையிலே நல்ல நன்றாக விளையக் கூடிய 4,000 ஏக்கர் நிலத்திலே கரும்பாலை வைக்கும் திட்டம் இடப்பட்டிருக்கிறது. கரும்பாலை புதிதாக ஆரம்பிப்பதற்குப் பதிலாக பனை வெல்லத்தை உற்பத்தி செய்வதுமூலம் அதை ஈடு செய்ய முடியும். நம் ராஜ்யத்தில் ஏராளமான பனை மரங்கள் இருக்கின்றன. இந்த ராஜ்யத்தின் சர்க்கரைத் தேவையை பூர்த்தி செய்வதோடு இந்தியாவில் பாதிக்குமேல் சப்ளை செய்ய முடியும். அதற்கு மூலதனம் வேண்டியதில்லை. உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய நிலங்களில் கரும்பு பயிர் செய்து சர்க்கரை செய்வதற்கு ஏராளமான மூலதனம் செலவிடவேண்டும். இனியாகிலும் உணவுப் பொருள் விளையும் நிலத்தில் கரும்பு சாகுபடி செய்து சர்க்கரை ஆலை ஏற்படுத்தாமல் பனஞ் சக்கரைத் தொழிலுக்கு ஆதரவு தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

[Sri G. Samia Koorayar] [5th March 1955

11-30 a.m. “அடுத்தபடியாக தேசிய விஸ்தரிப்பு திட்டத்தைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். கிராம மக்கள் ஒரு பகுதிப் பணம் கொடுக்க வேண்டுமென்றிருப்பதால், அவர்களால் கொடுக்க முடியவில்லை. சில இடங்களில் பஞ்சாயத்து போர்டுகள் கிடையாது. பஞ்சாயத்து போர்டு இல்லாத இடங்களில் ஜில்லா போர்டு பணம் கொடுத்து ஈடு செய்ய வேண்டும். கிராம மக்கள் கொடுக்க முடியாத இடங்களிலே, சர்க்காரே அதிகமாகப் பணம் கொடுப்பதற்கு, ஜில்லா கலெக்டருக்குப் பூரண அதிகாரம் கொடுக்க வேண்டும். ஜனத் தொகை அடிப்படையில் இல்லாமல் ஒவ்வொரு ரெவினியூ கிராமத்திலும் பஞ்சாயத்து போர்டு அமைக்க வேண்டும். கிராம நிர்வாகத்தை பஞ்சாயத்து போர்டே நடத்த வேண்டும். 500 பேர் ஜனத் தொகை கொண்ட ஒவ்வொரு கிராமத்திலும் என்று இல்லாமல் குறைந்த ஜனத்துகையாயிருந்தாலும் ஒரு ரெவினியூ கிராமத்திற்கு ஒரு பள்ளிக்கூடம் அவசியம் வேண்டும். இப்பொழுது பள்ளிக்கூடங்கள் இல்லாத கிராமத்திலிருந்து 4 அல்லது 5 மைல் போக வேண்டிய நிலைமையில் மாணவர்கள் இருக்கிறார்கள். ரெவினியூ கிராமம் ஒவ்வொன்றுக்கும் ஒரு பள்ளிக்கூடம் அவசியம் வேண்டும்.

"விலைவாசி இன்றைக்கு வீழ்ச்சி அடைந்திருக்கிறது. இது எதைக் காட்டுகிறது? நாட்டின் பொருளாதாரத்தின் மீது சர்க்காருக்கோ அல்லது உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் மக்களுக்கோ போதிய அளவில் இன்றைக்கு அவர்களுக்கு ஆதிக்கம் கிடையாது என்பதை தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. இந்த நாட்டின் பொருளாதாரத்தில் ஈடுபட்டிருக்கக் கூடியவர்களில் பெரும்பகுதி விவசாயிகள்தான் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். அப்படி பெரும்பாலானவர்கள் ஈடுபட்டிருக்கும் விவசாயத்தில் உற்பத்தி செய்யும் பொருள்களின் மீது அவர்களுக்கு எந்த ஆதிக்கமும் கிடையாது. இந்த நாட்டில் இருக்கும் எல்லா சரக்குகளின் மீதும் அவர்கள் ஆதிக்கம் செலுத்தக்கூடிய அளவில் அவர்களுக்கு சக்தி இல்லை. இந்த நிலைமையில் என்ன ஆகும்? எந்த விஷயத்தை எடுத்துக் கொண்டாலும் அதில் இப்படித்தான் இருக்கிறது. நில சீர்திருத்தம் என்று சொல்லுகிறார்கள். அதற்கு குருட்டுத்தனமான சட்ட திட்டங்கள் இருக்கின்றன. இப்பொழுது இருக்கும் சட்ட திட்டங்கள் எந்த அளவில் இருக்கிறது. பொருளாதாரம் கீழே விழுகிற அந்த அளவில் இருக்கிறது. உற்பத்தி அதிகரிப்பினால் விலைவாசிகள் கீழே வீழ்ந்துவிட்டன என்று சொல்லுகிறார்கள். அதை ஒப்புக்கொள்ள நான் தயாராக இல்லை.

"இப்பொழுது 1953-ம் வருஷத்தை விட சர்க்கரை உற்பத்தி $1\frac{1}{2}$ மடங்கு அதிகரித்திருக்கிறது. அதனால் அதன் விலை கீழே விழவில்லை. துணி உற்பத்தி 3,380 லட்சம் கெஜம் இருந்தது. இப்பொழுது அதன் உற்பத்தி அதிகரித்திருக்கிறது. அப்படி அதிகரித்தும் துணியின் விலை கீழே விழவில்லை. நூல் விலை அதிகரித்திருக்கிறது. இரண்டு வருஷங்களுக்கு முன்பு ஹார்வி மில்லில் உற்பத்தியாகும் 20-ம் நம்பர் நூல் விலை ரூ. 19 ஆக இருந்தது. இன்றைக்கு அதன் விலை ரூ. 24–2–0. சரக்குகளின் உற்பத்தி அதிகரித்தாலும் கூட அவைகளின் விலை கீழே விழவில்லை. தேயிலையை எடுத்துக்கொள்ளுவோம். அதை எவ்வளவு அதிகமாக உற்பத்தி செய்தாலும் அதன் விலை கீழே விழவில்லை. ஆனால் விவசாயிகள் விளைவிக்கும் பொருள்களின் உற்பத்தி அதிகரித்தாலும் கீழே விலை வீழ்ந்து வருகிறது. இதனால் என்ன ஏற்படுகிறது. இதற்குக் காரணம் என்ன? இதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். இதற்கு வழி என்ன?

"ஏற்றுமதிக்கு இப்பொழுது சந்தர்ப்பம் அதிகமாகக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்தால் இந்தப் பிரச்னையை தீர்த்துவிடலாம் என்று சொல்லலாம். ஏற்றுமதி கொள்கை ரொம்பவும் அவசியம் என்றும் சொல்லலாம். அது எப்பொழுது நன்மை ஏற்படும் என்பதைப் பார்க்கவேண்டும். வெளி நாட்டின் பொருளாதாரமும் இந்நாட்டு பொருளாதாரமும் ஏற்றுமதியைப் பொறுத்து அமையவேண்டும். அதற்கு நாம் ஒரு திட்டத்தை அமைக்கவேண்டும். ஏற்றுமதிக் கொள்கையில் இந்நாட்டிற்கும் பிரிட்டனுக்கும் அடிப்படையில் வித்யாசம் உண்டு. பிரிட்டன் போன்ற நாடுகள் யந்திரங்கள் போன்றவைகளை வைத்துக்கொண்டு தொழில் நடத்துகிறார்கள். அவர்கள் ஏற்றுமதி செய்யும் பொருள்களுக்கு அவர்கள் மார்க்கெட் தயாரித்துக்கொண்டிருக்கிறார்கள்.

5th March 1955] [Sri P. Ramamurthi]

வெளி நாட்டில் நாம் உற்பத்தி செய்யும் பொருள்களை குறைந்த விலைக்கு வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். நாம் வெளி நாட்டிற்கு அனுப்பும் பொருள் களை அவர்கள் நிர்பந்தம் செய்யும் விலைக்குத்தான் நாம் விற்கவேண்டிய தாக இருக்கிறது. அந்த வசதி பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் இருக்கிறது. நம் நாட்டிற்குக் கிடையாது. அதற்கு வேண்டிய சட்ட திட்டங்களை அவர்கள் வகுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே ஏற்றுமதி விஷயத்தில் பிரிட்டன் முதல் அமெரிக்கா, பிரான்ஸ் வரையில் சட்டங்கள் அமைத்துக்கொண்டு அதன்படி நடக்க வேண்டியதாக இருக்கிறது.

" பருத்தி விலையை எடுத்துக்கொள்ளுவோம். இரண்டு வருஷங்களுக்கு முன் இருந்ததைவிட இப்பொழுது கீழே விழுந்து விட்டது. அதனால் பருத்தி விவசாயிக்குத் தான் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. பருத்தி குத்தகை காரர்களுக்கு கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. தொழிலாளர்களுக்கு அதனால் நன்மை இருக்கிறதா என்று பார்த்தால் அதுவும் இல்லை. ஆனால் துணி யின் விலை கீழே விழுந்ததாகத் தெரியவில்லை. ஆனால் விவசாயிகள் உற்பத்தி செய்யம் உணவு பொருள்களின் விலை கீழே விழுந்து விட்டது. விவசாயிக்கு தம்படி மிச்சம் கூட கிடையாது. ஆனால் Cost of living index குறைந்துவிட்டது என்று சொல்லுகிறார்கள். வாங்கும் சக்தி குறைந்து விட்டது என்றும் சொல்லுகிறார்கள். மில் முதலாளிகள் குறைவான விலையில் பருத்தியை வாங்கி அதிகப்படியாக விற்க வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள்.

" கைத்தறி தொழிலை எடுத்துக்கொண்டால், அங்கு நெசவாளர்களு டைய நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. அவர்களுக்கும் மிச்சம் கிடையாது. கை நெசவுக்காரர்களுக்கு எந்த விதமான சௌகர்யமும் கிடையாது. அதற்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதாகவும் சொல்லு கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படும் நூல் சரியான விலைக்குக் கொடுக் கப்படவேண்டும். அவர்களுக்கு குறைவான விலைக்குக் கொடுக்கிறார்கள். அதனால் உற்பத்தி செலவு குறைகிறது. அதை வாங்கி விற்கும்போது மில்காரர்கள் விலையை நிர்ணயம் செய்கிறார்கள். மில் முதலாளிகள் அதி கப்படியான உற்பத்தி செய்தாலும் விலை குறையவில்லை. நெசவாளர்கள் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு தம்பிடி கூட மிச்சம் கிடையாது. ஆனால் உற்பத்தி அதிகரித்து விட்டது, அதனால் வாங்கும் சக்தி குறைந்து விட்டது என்று சர்க்கார் பெருமைப்படுகிறார்கள். அதில் அர்த்தம் இல்லை. ஏற்றுமதிக் கொள்கையில் சர்க்கார் விவசாயிகளுக்கு சப்சிடி கொடுப்பதாக இல்லை. மில் முதலாளிகளை குறைந்த விலைக்கு வாங்குவதற்கு இடம் கொடுத்துவிட்டு அதிகப்படியான விலைக்கு விற்க இடம் கொடுப்பதால் அவர் களுக்குத்தான் சர்க்கார் சப்சிடி கொடுப்பதாக இருக்கிறது.

" இன்றைக்கு விலைவாசிகளை நிர்ணயம் செய்வது என்பது மில் முத லாளிகளின் கையில் இருக்கிறது. வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்யக்கூடிய பொருள்களின் விலை சம்பந்தப்பட்டமட்டில் அந்த விலைவாசியை நிர்ண யிக்கக்கூடியது பெரிய பெரிய Export house-களாகிய ராலி பிரதர்ஸ் கையில் இருக்கிறது. ஏற்றுமதி ஸ்தாபனங்களின் கையிலிருக்கிறது. இங்குள்ள எக்ஸ்சேஞ்சு பாங்குகள் அவர்களுக்கு சொந்தமாக இருக் கின்றன. அதனால் ஏற்றுமதி செய்யும் பொருள்களின் விலையை அவர் கள் கட்டுப்படுத்துகிறார்கள். அவர்கள் குறைக்க வேண்டும் என்றால் குறைக்க வேண்டும், கூட்ட வேண்டுமென்றால் கூட்ட வேண்டும். எப் பொழுது குறைப்பது என்பதும் எப்பொழுது கூட்டுவது என்பதும் அவர் களுக்குத் தெரியும். இப்படி ஏற்றுமதிக்காரர்கள் அங்கங்கே விவசாய இடங்களில் பாங்குகளை அமைத்திருக்கிறார்கள். அவர்கள் விவசாயிகளுக் குக் கடன் உதவுவதால் அவர்கள் நிர்ணயம் செய்யும் விலையில் தான் விவசாயிகள் பொருள்களை விற்க வேண்டியதாக இருக்கிறது. விலையைக் கட்டுப்படுத்தும் சக்தி அவர்கள் கையிலிருக்கிறது. குறைக்க வேண்டிய காலத்தில் குறைத்துக்கொண்டும் கூட்ட வேண்டிய காலத்தில் விலையைக் கூட்டிக்கொண்டும் போகிறார்கள். மணிலாக் கொட்டையை உதாரணமாக சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டும். ரூ. 24-க்கு விற்று வந்தது இப்பொழுது 14 ரூபாய்க்கு வீழ்ந்து விட்டது. ரூ. $14\frac{3}{4}$-க்கு விற்றபோது

ரூ. 15-க்கு உயர்ந்தது. இந்த 4 அணு உயர்வை வைத்துக்கொண்டு விலைவாசி அதிகரித்து விட்டது என்று சொல்லுகிறார்கள். ரூ. 24-லிருந்து ரூ. 14-க்குக் குறைந்ததைப் பார்க்கவேண்டும். ஆகவேதான் பெரிய பெரிய **Export houses** ஏற்றுமதி ஸ்தாபனத்தை தங்கள் கையில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். உற்பத்தியாகும் பொருள்களின் விலையை நிர்ண யிக்கும் ஆதிக்கத்தை அவர்கள் கையில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். உள்நாட்டு உற்பத்தி சரக்குகளின் விலையை நிர்ணயிக்கும் சக்தியைக்கூட அவர்களுடைய ஆதிக்கத்தின் கீழ் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். . .

• • • • •

3-27 p.m. மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஹார்வி மில் சொந்தக்காரர் களின் ஆதிக்கத்தில் பாண்டியன் பாங்கு ஒவ்வொரு ஊரிலும் இருக்கும். தேனி போன்ற ஊரிலும் ஏற்படுத்தப்பட்டிருக்கும். பருத்தி வியாபாரத் தில் ஈடுபட்டிருக்கும் வியாபாரிகளுக்கு அவர்கள் பாண்டியன் பாங்கியி லிருந்து கடன் கொடுப்பார்கள். பருத்தியின் விலையைக் குறைக்கவேண்டு மென்று வியாபாரிகளுக்குக் கொடுத்த கடனைத் திருப்பிக் கொடுக்கும்படி சொல்வார்கள். கொடுக்க முடியாத சமயத்தில் தங்களிடம் இருக்கக்கூடிய பஞ்சை பாங்குகளில் விற்கவேண்டிய நிர்ப்பந்தம் சிறு வியாபாரிகளுக்கு ஏற்படுகிறது. அதனால் பல சந்தர்ப்பங்களில் வியாபாரிகள் திவால் ஆயிருக்கிறார்கள். ஆகவே, இந்த நாட்டில் விளையும் ஒவ்வொரு பொருளையும் எடுத்துக்கொண்டாலும்சரி, நாட்டில் இருக்கும்படியான பெரிய மூலதனக் காரர்கள் அதாவது வியாபார சூதாடிகளுடைய கையில் இருக்கிறது. உள்நாட்டு வியாபாரம் சம்பந்தமான பொருள்களெல்லாம் சூதாடப்படுகிறது, விளைபொருள்களிலெல்லாம் சூதாட்டம் நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

"முதல் இல்லை என்று சொல்கிறார்கள். அதிகமாக கிடைக்கும்படி யான லாபம் எங்கே போகிறது? இந்த ராஜ்யத்தில் பருத்தி விலை குறைந்ததன் விளைவாக சென்ற வருஷம், ஹார்வி மில்லில் 45 லட்சம் ரூபாய் லாபம் கிடைத்திருக்கிறது. இந்த வருஷம் 55 லட்ச ரூபாய் லாபம் கிடைத்திருக்கிறது. மானேஜிங் ஏஜென்ஸி வகையில் கமிஷன் அடைந்தது வேறு இருக்கிறது. விவசாயிகள் கஷ்டப்படலாம்; தொழி லாளிகள் கஷ்டப்படலாம், நடுத்தர மக்கள் கஷ்டப்படலாம்; ஆனால் பெரும் முதலாளிகளுக்கு நெருக்கடி ஏற்பட்டது கிடையாது. இந்த லாபத்தை முதலீடாக அவர்கள் ஈடுபடுத்துவார்கள் என்ற வாதம் சொல்லப் படுகிறது. வாஸ்தவத்திலேயே லாபத்தை முதலீடாக உபயோகப்படுத்து கிறார்களா? இல்லை. கிடைத்திருக்கக்கூடிய பெரும்பகுதி லாபத்தை வியா பார சுதாட்டத்தில் தான் அதிகமாக இவர்கள் உபயோகப்படுத்துகிறார்கள். ஸ்டாக் எக்ஸ்சேஞ்சு சூதாட்டம், புலியன் சூதாட்டங்கள் ஆகியவைகளில் மூலதனம் பூராவும் ஈடுபட்ட பிறகு நாட்டில் புதிய தொழில்கள் ஏற் படுத்துவதற்கு மூலதனம் கிடையாது என்று சொல்வதெல்லாம் வெறு அர்த்தமற்ற பேச்சாகும்."

"ஒரு உதாரணம்: இரண்டு பெரிய கம்பெனிகள் ஹார்வி மில்காரர் களுக்குச் சொந்தமாக இருக்கின்றன. பாண்டியன் பாங்கு, பாண்டியன் இன்ஷூரன்ஸ் கம்பெனி ஆகியவைகளாகும். சென்ற 7 வருஷங்களில் மட்டும் அவைகளுக்குக் கிடைத்திருக்கக் கூடிய நிகர லாபம் $2\frac{1}{4}$ கோடி ரூபாயாகும். மானேஜிங் ஏஜென்ஸி கமிஷன் மட்டும் 70 லட்ச ரூபா யாகும். மூன்று கோடி ரூபாய் லாபத்தில் பங்குதாரர்களுக்கு பாதிக்கு மேல் கிடைக்கும். கிடைத்துங்கூட தாளையூத்திலுள்ள இந்தியா சிமிட்டித் தொழிலை நடத்துவதற்கு அவர்கள் கையில் பணம் கிடையாதாம். இந் தியன் பைனான்ஸ் கார்ப்பொரேஷன் 45 லட்ச ரூபாய் கடன், குறைந்த வட்டியில், கொடுத்தாக வேண்டுமாம். இதைப் பார்க்கும்போது என்ன தோன்றுகிறதென்றால், விவசாயிக்கு கடன் கொடுப்பது சர்க்காருக்கு கஷ்ட மாக இருக்கும். ஆனால், இவ்வளவு லாபம் சம்பாதிப்பவர்கள் புதிய தொழில்களில் ஈடுபடுவதற்கு நாட்டின் அபிவிருத்திக்கு புதிய தொழில் களை நடத்த வேண்டுமென்று சொன்னால் 45 லட்சம் ரூபாய் வரையில் சர்க்கார் கடன் கொடுத்தாகவேண்டும். பாரி கம்பெனிக்கு சென்ற 7

வருஷங்களில் மட்டும் கிடைத்திருக்கக்கூடிய லாபம் $11\frac{1}{4}$ கோடி பவுன்களாகும். அதற்குப் பிறகு மானேஜிங் ஏஜென்ஸி கமிஷன் இருக்கிறது. அது போகட்டும், இவ்வளவும் கிடைத்த பிறகும் புகளூர் சர்க்கரைத் தொழிற்சாலையை நடத்துவதற்கு 43 லட்ச ரூபாய் இந்தியன் பைனான்ஸ் கார்ப்பொரேஷன் கடன் கொடுத்தாக வேண்டுமாம். பாரி கம்பெனியார் இவ்வளவு லாபம் அடைந்தும் சர்க்கரைத் தொழிற்சாலையை நடத்துவதற்கு நாட்டு மக்கள் வரிப்பணத்திலிருந்து கடன் கொடுத்தாகவேண்டுமாம். அப்பொழுதுதான் அவர்கள் அந்தத் தொழிற்சாலையை நடத்துவார்களாம். தனிப்பட்டோருக்கு ஊக்கமளிக்கிறோம் என்று சொல்லப்படுகிறது. அவர்களிடம் பணம் இல்லவே இல்லையா ? இருக்கிறது. இருந்தாலும் அந்தப் பணத்தின் பெரும்பகுதி நாட்டில் புதிய தொழில்களை ஏற்படுத்துவதற்கு உபயோகப்படுத்தப்படாமல் எந்தத் தொழிலில் அதிகமாக லாபம் கிடைக்கிறதோ அதில் தான் அவர்கள் ஈடுபடுகிறார்கள்.

"மத்திய சர்க்கார் நிதி மந்திரி இரண்டு மூன்று தினங்களுக்கு முன் சொல்லியிருப்பதாவது :

'The success of the Second Five-Year Plan will, in my view, depend upon two main factors, organisation and finance. In an economy in which monetary rewards are the principal device for attracting real resources along desired lines, the availability of finance is a crucial consideration.'

ஒரு சமுதாயப் பொருளாதார அமைப்பில் லாபம் கிடைப்பது என்ற ஒரு கருவியைக் கொண்டுதான் எந்தத் தொழிலிலும் முதலை ஈடுபடுத்த முடியும் என்று பணம் கிடைத்தால் தான் ஒரு திட்டம் என்பதை நிறைவேற்றுவது சாத்தியம் என்றும் திட்டவட்டமாகக்கூறியிருக்கிறார்கள். எந்தத் தொழிலில் லாபம் கிடைக்குமோ அந்தத் தொழிலில் தான் அவர்கள் முதலை ஈடுபடுத்துவார்கள். தொழிலில் ஈடுபடுவதற்குப் பதிலாக சரக்கை மலிவாக வாங்கி அதிகப்படியான விலைக்கு விற்கமுடியும் என்று சொன்னால் அதிகமான லாபம் கிடைக்குமென்று சொன்னால் அதில் ஈடுபடுத்துவார்கள். இதுதான் நடக்கிறது. இன்றிருக்கக்கூடிய நிலைமையில் கையில் பங்கை வைத்துக்கொண்டு லாபம் கிடைக்க பாங்குகளின் மீதும் ஆதிக்கம் செலுத்தக்கூடிய நிலைமையில் ஏகபோக முதலாளிகள் அந்தப் பணத்தை "ஸ்பெகுலேஷன்" செய்வதில் அதிக லாபம் கிடைக்கிறது. மார்கெட் சூதாட்டத்தில் அதிகமாக ஈடுபடுத்துகிறார்களேயல்லாமல் இந்த நாட்டின் ஜனங்களுக்குத் தேவையான புதிய தொழில்களில் அவர்கள் ஈடுபடுவது இல்லை. இதை கடந்த ஐந்து வருஷங்களாகப் பார்க்கிறோம்.

"பண்டித நேரு ஆவடி காங்கிரசில் பேசக்கூடிய காலத்தில் ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றி சொன்னார் :—

'It is not necessary for the Governmen. to control every sector of economy,

It is n·t necessary for the Governmεnt to take control of every factory. It is enough to control certain strategic centres.'

எந்த அரசாங்கமும் ஒவ்வொரு தொழிற்சாலையையும் கையில் எடுக்க வேண்டிய அவசியம் கிடையாது என்று சொல்லிவிட்டு சில கேந்திரமான பகுதிகளை தங்கள் ஆதிக்கத்தில் வைத்துக் கொண்டிருந்தால் போதும்" என்று சொன்னார். ராணுவ பாஷையை உபயோகித்து ஒவ்வொரு அங்குல இடத்திலும் ஒவ்வொரு சோல்ஜரைக் கொண்டுபோய் நிறுத்தவேண்டியதில்லை. மலை உச்சியில் ஒரு பீரங்கியை நிறுத்தி விட்டால் அந்தப் பகுதியில் ஆதிக்கம் செலுத்துவது சாத்தியம். இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு அதை 'அப்ளை' செய்து பார்ப்போம். இந்த நாட்டின் பொருளாதாரத்தைப் பார்த்தால் அந்தப் பகுதி எது ? கேந்திர ஸ்தானம் எது ? வெறும் உற்பத்தி அதிகரித்ததினால் நாட்டின் பொருளாதாரத்தில் விவசாயி ஆதிக்கம் செலுத்த முடிகிறதா ? கவர்ன்மெண்ட் ஆதிக்கம் செலுத்த முடிகிறதா ? அவர்கள் செலுத்தக்கூடிய கேந்திர ஸ்தானம் எது ? வெளிநாட்டு வியாபாரி தங்கள் கையில் இருக்கக்கூடிய பண பலத்தைக் கொண்டு உள்நாட்டு உற்பத்திச் சரக்கை

குறைவான விலைக்குக் வாங்கும்படியான சக்தி படைத்திருக்கிறார்கள். அது ஒரு பெரிய ஸ்ட்ராடஜிக் சென்டர். அந்த சென்டர் சர்க்கார் கையில் இருக்கும் வரை உண்மையாக இந்த நாட்டில் விலைவாசி கட்டுப்பாடு என்பதெல்லாம் வெறும் கேலிக்கூத்தாகும். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய பெர்மிட் கொடுத்தால் கூட ஏற்றுமதி ஆகாது. அந்த நாட்டில் வாங்குவதற்குத் தயாராக இருக்கவேண்டாமா? பெர்மிட்டே சூதாட்ட கருவியாக மாறிவிடுகிறது. ஏற்றுமதிக்குப் பெர்மிட் கொடுத்தால் அந்தச் சரக்கும் ஒரு சூதாட்டச் சரக்காக மாறிவிடுகிறது. பெர்மிட்டும் சூதாட்டத்திற்கு கருவியாக மாறிவிடுகிறது. சரக்கும் சூதாட்டத்திற்கு கருவியாக மாறிவிடுகிறது. ஆகவே தான் வெளிநாட்டு வியாபாரம் என்ற அந்த கேந்திர ஸ்தானம் சர்க்கார் கையில் இல்லாதவரை உள்நாட்டில் இருக்கும்படியான இந்த விளை பொருள்களுக்கு ஒரு சரியான விலைக்கு உத்தரவாதம் என்பது என்றைக்கும் கிடைக்க முடியாது. அந்தப் பொருளாதாரம் சம்பந்தப்பட்டமட்டில் நிரந்தரமற்ற, ஒரு உத்தரவாதமற்ற நிலைமையில் தான் என்றென்றைக்கும் அவர்கள் இருப்பது என்பது சாத்தியம். இதைக் கண்கூடாக நாம் கடந்த 7, 8 வருஷங்களாக பார்த்துக்கொண்டு வருகிறோம்.

3.37 p.m. "இரண்டாவதாக உள் நாட்டில் விளையக்கூடிய சரக்குகளை எடுத்துக் கொள்வோம். உணவுப் பொருள்கள், பருத்தி, கடலை முதலிய பொருள்கள் சம்பந்தப்பட்ட வரையில் உள் நாட்டில் நடக்கும் வியாபார சூதாட்டத்தைத் தடுக்காமல் போனால், எப்படி அவைகளின் விலையை நிர்ணயிப்பது சாத்தியம்? அதுவும் சாத்தியமற்ற நிலையில் தான் இருக்கிறது. ஆகவே சர்க்காரே உள் நாட்டில் விளையும் தான்யங்கள், பருத்தி முதலிய பொருள்களை பெரிய அளவில் வாங்கி உள் நாட்டு வியாபாரத்தில் பங்கு எடுத்துக் கொண்டாலொழிய இந்தச் சூதாட்டத்தைத் தடுப்பது சாத்தியமில்லை. அதற்காக உள்நாட்டு வியாபாரிகளை ஒழித்துவிட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. சர்க்கார் '**biggest trader in internal market**' என்ற முறையிலே ஒரு ஸ்தாபனமாகயிருந்தால் தான், இந்தச் சூதாட்டத்தைத் தடுப்பது சாத்தியம். ஆனால் இதைச் சொல்லக் கூடிய காலத்தில், 1952-ம் வருஷத்துக்கு முன்பிருந்த 'புரொக்யூர்மெண்ட்' முறையிருக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அதற்கும் இப்பொழுது நான் சொல்லக்கூடிய முறைக்கும் வித்தியாசம் உண்டு. அந்தக் காலத்தில் பகிரங்க மார்க்கெட்டில் அதிகமான விலைக்கு விவசாயிகள் விற்பதற்கான சூழ் நிலையிருந்த போதிலும், நிர்பந்தமாக குறைவான விலைக்கு விற்கும்படிக் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். அந்த மாதிரி ஒரு கொள்முதல் திட்டம் அப்பொழுது நம் நாட்டில் நிலவி வந்தது. ஆனால் இன்றைக்கு அந்த மாதிரித் திட்டம் தேவையில்லை. "தான்யப் பங்கீட்டு முறை" (Rationing) வந்து விடுமோ என்று பயப்படவேண்டியதில்லை. விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கும் என்று உத்திரவாதம் செய்யக்கூடிய முறையிலே சர்க்கார் நேரடியாக விவசாயப் பொருள்களை வாங்குவது என்ற நிலைமை ஏற்பட்டால், மற்ற வியாபாரிகளும் ஒழுங்காக இருப்பார்கள். பல சிறிய வியாபாரிகளும் சர்க்காரின் ஏஜெண்டுகளாக இருப்பது சாத்தியம். வெளிநாட்டு மார்க்கெட்டுகளிலும் நம் நாட்டில் விளையும் பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கும். உள் நாட்டு வியாபார சூதாட்டத்தையும் தடுக்க முடியும். உற்பத்தியாளர்களும் பயனடைவார்கள். விலைச் சரிவையும் ஓரளவுக்குத் தடுக்க முடியும்.

"பல திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமானால் சர்க்காருக்குப் பணம் வேண்டுமென்று தான் நாங்களும் சொல்கிறோம். பணம் வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் புதிய திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் பணம் எங்கிருந்து கிடைக்கிறது என்பது தான் கேள்வி. இன்று நமது மாகாணத்தில் இருக்கக் கூடிய நிலைமை என்ன? புதிய திட்டங்களுக்குப் பணம் வேண்டுமென்று சொல்லி, புதிதாக வரிகளையும் போட்டிருக்கிறார்கள். இந்த வரி விதிப்பைப்பற்றி பல அங்கத்தினர்கள் பேசி விட்டதினால், நான் அதைப் பற்றி பேச விரும்பவில்லை. நமது அரசாங்கத்திற்குத் தேவையான ரூபாய் 24 கோடியை மத்திய அரசாங்கத்திலிருந்தும் பொது

5th March 1955] [Sri P. Ramamurthi]

மக்களிடத்திலிருந்தும் கடனாக வாங்கலாம் என்று கூறப்படுகிறது. அந்த 24 கோடி ரூபாயிலே, 7 கோடி ரூபாய்க்கு கடன் பத்திரங்கள் வழங்கப் போவதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் நடை முறையில் இந்தக் கடன் எப்படி வசூலிக்கப்படுகிறது என்பதை நாம் ஆராயவேண்டும். இந்தக் கடனும் வரிக்கு மேல் ஒரு வரியாகத் தான் வசூலிக்கப்படுகிறது. இல்லை என்று பலர் மறுக்கலாம். அரசாங்கமும் குரோத மனப்பான்மையுடன் தான் வேண்டுமென்றே கற்பிப்பதாகச் சொல்லலாம். ரிசெர்வ் பாங்கு நியமித்திருக்கக் கூடிய **Shroff Committee** இது விஷயமாகக் கூறியிருப்பதை நான் படித்துக் காண்பிக்கிறேன். சென்னை அரசாங்கம் இந்தக் கடன் எழுப்பும் விஷயத்தில் எவ்வாறு நடந்து கொண்டிருக்கிறார்கள் என்று அவர்கள் கூறியிருப்பதை நான் இப்பொழுது படிக்கிறேன்.

"*The fact that in the case of the recent loan raised by the Madras Government as much as Rs. 6.5 crores, consisting of subscriptions of Rs. 500 and less, a good many of which came from mofussil areas, has been cited in support of the arguments that with suitable techniques idle resources can be mobilised. But in the case of the Madras Loan, at any rate, we are informed that very considerable coercion was exercised for securing subscriptions for the loan and that a substantial part of the subscriptions had been financed through bank loans. It was stated before us that a leading bank in South India had lent about Rs. 2 crores for this purpose. A good portion of the bonds subscribed by the original investors have at present been sold out in recent months to institutional investors . . .*"

"'ஷிராப் கமிட்டி' சென்னை அரசாங்கத்திற்குக் கொடுத்திருக்கும் 'ஸெர்டிபிகேட்' இது தான். இந்த $6\frac{1}{2}$ கோடி ரூபாயை வசூலிப்பதில் சென்னை அரசாங்கம் பலாத்கார முறைகளையும் நிர்ப்பந்த முறைகளையும் கையாண்டிருக்கிறார்கள் என்று நம்பகமாக கூறப்பட்டுள்ளது. இந்தக் கடனை வாங்குவதற்கு தென் இந்தியாவில் ஒரு பிரபல பாங்கு 2 கோடி ரூபாயை விவசாயிகளுக்குக் கடனாகக் கொடுத்து அவர்கள் அந்தப் பணத்தை கொண்டு சர்க்காரின் கடன் பத்திரங்களை வாங்கிய பிறகு, அதே கடன் பத்திரங்களை குறைவான விலைக்கு அந்த பாங்கே மீண்டும் வாங்கிக்கொண்டிருக்கிறது என்பது அந்த ரிப்போர்ட்டிலிருந்து தெரியவருகிறது."

THE HON. SRI C. SUBRAMANIAM :—"I am glad that you place so much reliance on that report."

SRI P. RAMAMURTHI :—"I place reliance on facts and I do not place reliance on their conclusions.

"ஆகவே, அதே முறையிலே இன்றைக்கு மீண்டும் கடன் வசூலிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படக்கூடாது என்பது தான் என் கருத்து. இருபத்து நாலு கோடிக்கு 100 கோடியாகப் பணத்தை வசூலிக்கட்டும். ஆனால் அந்தப் பணத்தை வாங்குவதற்கு வழி என்ன என்பதுதான் பிரச்னை. இதைப்பற்றிச் சொல்லக்கூடிய காலத்தில் மத்திய நிதி மந்திரி ஸ்ரீ தேஷ்முக் அவர்கள் பணம் பிரதானமில்லை என்று சொல்லியிருக்கிறார். ஆவடி காங்கிரஸ் மகாநாட்டில் பேசிய நேருஜி அவர்களும்,

'Hitherto we have resorted to financial planning. Hereafter we must resort to physical planning'

என்று சொல்லியிருக்கிறார். அதாவது, இதற்குப் பிறகு நமது செல்வ வளங்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, செல்வ வளங்களை உபயோகப் படுத்தும் வகையில் திட்டம் வகுக்கவேண்டுமென்று சொன்னார். பணம் பிரதானமில்லை ; செல்வ வளங்கள் தான் பிரதானம் என்று சொன்னால்,

அதன் அர்த்தம் என்ன? எந்த சமுதாய அமைப்பில் இருக்கிற ஸ்தாபனங்கள் இந்த செல்வ வளங்கள் உபயோகப்படுவதற்குக் குறுக்கே நிற்கின்றனவோ, அந்த ஸ்தாபனங்களைத் தகர்த்தெறிந்துவிட்டு, புதிய ஸ்தாபனங்களை ஏற்படுத்தியாகவேண்டும். அப்போதுதான் அந்த செல்வ வளங்கள் உபயோகப்படுவது சாத்தியம்.

"வெளிநாட்டு வியாபாரம் இந்த நாட்டில் இருக்கக்கூடிய சில வெளி நாட்டுக் கம்பெனிகள் கையில் சிக்கிக்கொண்டிருக்கிறது. அவர்களுக்குச் சொந்தமாக இருக்கிற 'எக்ஸ்சேஞ்சு பாங்குகள்' அவர்கள் ஆதிக்கத்தின் கீழேயிருக்கின்ற காரணத்தினால், அந்த ஸ்தாபனங்கள் அதன் வளர்ச் சிக்குக் குறுக்கே நிற்கின்றன. ஆகவே இந்த வெளிநாட்டு வியாபார **'monopoly'** பூராவும் நமது சர்க்கார் கையில் இருந்தால்தான், நம் நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களுக்கு வெளி நாடுகளில் நியாயமான விலை கிடைக்க வசதி ஏற்படும். உதாரணமாக, 'ராலி கம்பெனியை' எடுத்துக்கொள்வோம். இந்த நாட்டில் உற்பத்தியாகும் மணிலாக்கொட் டையை வெளிநாடுகளுக்கு அனுப்பும் உரிமை அவர்கள் கையில் இருக் கிறது. அதிகமான விலை கொடுக்க அவர்கள் விரும்பமாட்டார்கள். நமது சர்க்காரின் கையிலேயே அந்த அதிகாரம் இருக்குமானால், பிரிட் டனோ அல்லது அமெரிக்காவோ சரியான விலை கொடுக்க முன்வரவில்லை யென்றால், வேறு வெளிநாடுகளுக்கு விற்க முடியும். அப்படிச் செய் தால்தான் நாம் சொல்லும் நிபந்தனை **(terms)**களுக்கு அவர்கள் உட்படு வார்கள். அப்பொழுதுதான் நம் வழிக்கு அவர்கள் வருவார்கள்.

"உதாரணமாக நம் நாட்டில் ஒரு எஃகு தொழிற்சாலை நிறுவுவதற் காக 1948-ம் வருடத்திலேயே பிரிட்டனுடன் பேச்சு வார்த்தைகள் நடந்தன. அங்கிருந்து ஒரு 'கமிஷன்' 'மிஷன்' எல்லாம் வந்தன. 1953-ம் வருடம் வரையில் உதவியளிக்க மாட்டேன் என்று தான் சொன்னார்கள். ஆனால், 1954-ம் வருடத்தில் ரஷியா தேசம் அதற்கு வேண்டிய உதவியைச் செய் கிறேன் என்று சொன்ன உடனேயே, பிரிட்டனிலிருந்து ஒரு மந்திரி நமது நாட்டிற்கு ஓடி வந்தார். 'நாங்கள் உதவி செய்கிறோம்' என்று சொன்னார்.

3.47 p.m. "ஆகவே சர்க்கார் கையில் இந்த ஆதிக்கம் இருக்குமேயானால் வெளி நாடுகளில் நமது பொருள்களுக்கு சரியான விலை கிடைக்க வசதி ஏற்படும். விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் இடமேற்படும். கோடிக்கணக் காகவரும் லாபங்கள் பூராவும் சர்க்கார் கையிலே இருக்கவேண்டும். இன்றைக்கு அது தொழிலதிபர்களிடத்திலே இருந்துவருகிறது. அதனால்தான் சர்க்காரால் உத்திரவாதம் அளிக்க முடியாமல் இருக்கிறது. அது என்றைக்கும் சர்க்காரிடத்திலே இருக்கவேண்டுமென்பதே என்னுடைய கோரிக்கை. அதே போல் உள்நாட்டு வியாபாரத்தினால் கிடைக்கக்கூடிய பெரும் லாபமும் சர்க்காரிடத்திலே இருக்கவேண்டும். அவ்வாறு இல்லாததினால் இன்று என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது? விலைவாசிக்கு கட்டுப்பாடு இல்லாத காரணத்தினாலே இன்று விலைவாசி வீழ்ச்சியுற்றிருக்கிறது. அதனால் சர்க்காருக்கும் அதிகமான நஷ்டமேற்பட்டு இருக்கிறது. 1952–53-ம் வருஷத்திலே அரிசியினால் மட்டும் ரூ. 45 கோடி நஷ்டமேற்பட்டிருப்பதாக இந்திய சர்க்கார் நிதியமைச்சர் ஸ்ரீமான் தேஷ்முக் கூறியிருக்கிறார். அதற்கு **subsidy** செய்வதற்கு ஒன்றும் ஏற்பாடு இல்லை. அதற்கு முக்கிய காரணம் விலைவாசியில் கட்டுப்பாடு இல்லாமையே ஆகும். அதைத் தடுத்திருந்தால் அந்தத் தொகையைக்கொண்டு இந்த நாட்டிலுள்ள சாதாரண மக்களுக்கு உதவிகள் செய்திருக்க முடியும். தவிர, கட்டுப்பாடு இருந்திருந்தால் இந்த நஷ்டத்தைத் தடுத்திருக்கவும் முடியும். அதையெல்லாம் விட்டு சும்மா எக்ஸ்பர்ட்ஸ் கமிட்டி போடுவதனால் என்னப் பிரயோஜனம், அவர் களால் என்ன செய்யமுடியும் என்று புலப்படவில்லை. அவர்களால் செய்யும் வேலையை தினமும் ஹிந்துப் பத்திரிகையில் 3, 4-ம் பக்கங்களைப் பார்த்தால் தெரியும். அதற்கு அவர்கள் அவசியமே இல்லை. ஆகவே, எதற்காக ஒரு கமிட்டி?

"உள்நாட்டு சூதாட்டத்தை முதலில் நீக்கவேண்டும். அந்த உள் நாட்டு மார்க்கெட் சூதாட்டத்தால் ஏராளமான ரூபாய்கள் தனிப்பட்ட முத

5th March 1955] [Sri P. Ramamurthi]

லாளிகளிடம் முடங்கிவிடுகின்றது. இதை நிறுத்தினல் சர்க்காருக்கு லாபம் கிடைப்பதோடு, அம்முதலாளிகளிடம் முடங்கிக் கிடக்கும் லட்சக்கணக்கான மூலதனத்தை சூதாட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு பதிலாக அவர்களால் **productive purposes** அதாவது உற்பத்தி செய்யக்கூடிய முறையில் உபயோகப்படும். தவிர ஜனங்களுடைய க்ஷேமநல அபிவிருத்திக்காகவும், பல புதிய தொழிற்சாலைகள் ஏற்படுவதற்கும் உதவியாக இருக்கும். தவிர இன்று சர்க்காருக்கு பணம் தேவையாக இருந்தாலும் அவர்களிடமிருந்து கட்னக பெற்றுக்கொள்வதற்கு முடியும். அதனல் விவசாயிகளுக்கு இம்மாதிரியான ஒரு நெருக்கடி எல்லாம் ஏற்படாது. அதனல் தான் **Speculation** அதாவது மார்க்கெட் சூதாட்டத்தை முதலில் ஒழித்துவிடவேண்டுமென்று கூறுகிறேன். அப்பொழுதுதான் இந்நாட்டினுடைய நிலைமை திருந்துவதற்கு முடியும்.

"இன்று நாட்டில் எங்கு பார்த்தாலும் விலைவாசிகள் வீழ்ச்சியுற்ற பிரச்னையே பேசப்படுகின்றது. அதற்குக் காரணம் சென்ற வருஷத்தைவிட உற்பத்தி அதிகரித்திருப்பதே காரணம் என்று கூறப்படுகின்றது. ஆகவே இந்தப் பிரச்னையைத் தீர்க்காத வரையில் இன்னும் நான்கு பெரும் அணைக்கட்டுத் திட்டங்கள் போட்டாலும் பிரயோஜனமில்லை. அணைக்கட்டுத் திட்டங்கள் போடவேண்டியதுதான். உற்பத்தியும் அதிகரிக்கவேண்டியது தான். ஆனல் அதே சமயத்தில் உற்பத்தியாகக்கூடிய பொருள்களுக்கு சரியான விதத்திலே, விவசாயிகள் மேம்பாடு அடையக்கூடிய விதத்திலே, நிலைமையை உண்டாக்குவதற்கு உத்திரவாதமும் அளிக்கப்படவேண்டும். அதற்கு அடிப்படையான கொள்கைகளை நடைமுறைக்கு கொண்டுவரவேண்டும். அவ்வாறு திட்டம் செய்யாததினல்தான் இன்றைக்கு நாட்டில் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

"இதே கண்ணேட்டத்தோடு பார்க்கும்போது, இந்த நாட்டிலே உள்ள விவசாய மக்கள், குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்யும் மக்கள் ஆகியோருடைய பிரச்னையும் எழுகிறது. அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்குமேல் அதிகமான செலவு செய்து விவசாயம் செய்யவேண்டியிருக்கிறது. இந்த மாகாணத்திலே இருக்கக்கூடிய குத்தகைக்காரர்களின் நிலையைச் சீர்திருத்துவதற்காக நிலச் சீர்திருத்தம் கொண்டுவரப் போவதாக சொல்லப்படுகின்றது. இது சம்பந்தமாக முதன் மந்திரி அவர்கள் சமீபத்திலே ஓரிடத்தில் பேசியபோது இதில் அதிக சிக்கல்கள் இருப்பதாகவும், அதுப்பற்றி ஆலோசித்துக்கொண்டிருப்பதாகவும் கூறினர்கள். சென்ற காலத்தைவிட இன்று அவர்கள் நிலைமை மோசமாக உள்ளது.

"நான் சென்ற வாரம் திருநெல்வேலி ஜில்லாவிற்கு போயிருந்தேன். அதிலும் விவசாயிகளுக்கிடையே உள்ள நிலத் தகராறைத் தீர்ப்பதற்காக கடையநெல்லூருக்குப் போயிருந்தேன். கடையநெல்லூரில் கிருஷ்ணபுரம் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அங்கு விசாரித்ததில் நிலத்தை வாரம் எடுத்துக்கொள்வதனல் நிலச் சொந்தக்காரருக்கு பெரும் பகுதியை அவர்கள் கொடுத்துவிடவேண்டியிருக்கிறது. நிலத்திற்கு தகுந்தாற்போல் பங்கு கொடுக்கவேண்டியிருக்கிறது. 5-ல் ஒரு பங்கு 4-ல் ஒரு பங்கு என்று இருக்கிறது. சற்று வளமான பூமியாக இருந்தால் 3-ல் ஒரு பங்கும் கிடைக்குமாம். அந்தப் பக்கத்துக் கணக்குப்படி, ஒரு கோட்டை விரைபாடு நிலம் என்று கூறப்படுகிறது. ஒரு கோட்டை என்றல் 112 பட்டணம் படியாகும். அப்படி 112 படி நெல் விதைக்கக்கூடிய ஒரு நிலமாகக் கணக்கிடப்படுகிறது. அதாவது 1·68 ஏக்கராகும். அப்படிப்பட்ட நிலத்தில் ஒரு கோட்டை நெல்லை விதைத்தால் சாதாரண பூமியாக இருந்தால் 9-லிருந்து 10, 12 கோட்டை நெல் விளையுமாம். சற்று வளம் படைத்த பூமியாக இருந்தால், 18 கோட்டையிலிருந்து 20 கோட்டை வரை நெல் கிடைக்குமாம். சாதாரணமாக $10\frac{1}{2}$ கோட்டை நெல் ஒரு பூமியில் விளைவதாக வைத்துக்கொள்வோம். 3-ல் ஒரு பங்கு என்று சொன்னல் அவனுக்கு $3\frac{1}{2}$ கோட்டை நெல் கிடைக்கும். அப்படிக் கிடைக்கும் அந்த $3\frac{1}{2}$ கோட்டை நெல்லுக்கும் அவனுக்கு பலவிதமான செலவுகள் இருக்கின்றன. முதலில் ஒரு கோட்டை விஸ்தீர்ணமுள்ள பூமியைக் கொடுத்ததற்காக 1 கோட்டை நெல் சும்மா கொடுத்துவிடவேண்டுமாம். அப்படி ஒரு கோட்டை

நெல்லை சும்மா கொடுப்பதால் அவனுக்கு $2\frac{1}{2}$ கோட்டை நெல்லே கிடைக்கிறது. அதிலும் பல தொல்லைகள் அவனுக்கு உண்டு. அதாவது அந்த ஒரு கோட்டை நெல்லை அளக்கும்போது முதலில் ஊமை மரக்கால் என்று ஒரு மரக்கால் நெல்லை சும்மா போடவேண்டுமாம். லாபம் என்று சொன்னாலும், அடுத்து இரண்டு என்று எண்ணுவான். ஆனால் இதிலே முதலில் சும்மா ஒரு மரக்கால் நெல் போட்டுவிட்டு அடுத்து 1, 2 என்று அளக்கவேண்டுமாம். என்னடா மனுஷனில் தான் ஊமை இருக்கின்றான், மரக்காலிலுமா ஊமை இருக்கிறது என்று முதலில் ஆச்சரியப்பட்டேன். ஆகவே முதலில் அளக்கும் மரக்கால் பேசாது. (பலத்த சிரிப்பு.)

" அதற்கு மேலும் கங்காணம் கொடுக்க வேண்டுமாம். கங்காணம் என்றால் அறுவடை செய்யப்பட்ட நெல்லை, களத்திலே போட்டிருந்தால், அதை உடனடியாக மிராசுதார் சென்று பார்வையிடுவதற்கு முடியாமல் போனால் (அதாவது அவர் எங்காவது ஊருக்கு போயிருப்பார், அல்லது தன் சொந்த விவகாரமாக கோர்ட்டுக்குச் சென்றிருப்பார்), அவர் வந்து பார்வையிடும் 4, 5 நாட்கள் வரை ஒரு காவல்காரனை வைத்திருப்பார். அந்த காவல்காரனுக்கு தினம் ஒன்றுக்கு ஒரு மரக்கால் வீதம் வாரம் எடுத்துள்ள விவசாயி தன் பங்கு நெல்லில் கொடுக்கவேண்டும். இதற்கு தான் கங்காணம் என்று பெயர்.

" இவ்வாறு எல்லாம் பங்கிட்டுவிட்டு, பாக்கியுள்ளதில் தன் செலவிற்கு போக வைத்துக்கொள்ளவேண்டும். இதனால் இன்று ஏழை விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். தாங்கள் செலவிட்ட பணம்கூட சில வேளைகளில் கிடைக்காமல் நஷ்டமேற்படுகிறதாம். அதிலும் இன்றைய விலை வீழ்ச்சி நிலையில் அவர்களுக்கு உண்மையிலேயே நஷ்டமேற்படுகிறதாம்.

" அதாவது முன்பு ஒரு கோட்டை நெல் ரூ. 45-க்கு விற்க முடிந்ததாம். ஆனால் இன்றைய விலை வீழ்ச்சியின் காரணமாக ரூ. 30-க்குத்தான் விற்க முடிகிறதாம். இதனால் இன்று விவசாயிகள், அதிலும் குத்தகைக்கு எடுக்கும் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இது விஷயமாக, எந்தப் பிரதேசத்தை எடுத்துக்கொண்டாலும், இதே நிலைதான் இருக்கிறது.

" எதிர்ப்பக்கத்தில் இருக்கும் ஸ்ரீமான் கருத்திருமான் அவர்களோடு இரண்டு தினங்களுக்கு முன் பேசிக்கொண்டு இருந்தேன். அப்போது இன்றைய விவாசயிகள் நிலைமையைப்பற்றியும் அவரிடம் பேசிக்கொண்டு இருந்தேன். அவர்கள் இப்போது விலை வீழ்ச்சியின் காரணமாக விவசாயிகள் ஜாஸ்தியாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று ஒப்புக்கொண்டார்கள். ஆகவே இந்தப் பிரச்னையை தீர்ப்பதில் தான் மிகவும் முக்கியமாக இன்று கவனம் செலுத்தவேண்டும். அது சர்க்காருடைய பொறுப்பு மாகும். சும்மா சிக்கல்கள் இருக்கின்றன என்று மட்டும் பேசிக்கொண்டு இருந்தால் பிரயோசனம் இல்லை. ஆகவே இதைத் தீர்ப்பதே இன்றுள்ள முக்கியப் பிரச்னையாகும்.

3-57 p.m. " குத்தகை பாக்கியைக் கொடுப்பதில் பல தகராறுகள் ஏற்படுகின்றன. விவசாயிகள் தங்களுடைய கூலியைக் கேட்டால் மிராசுதார்கள் கொடுக்க மறுக்கிறார்கள். அது நியாயமா என்று கேட்டாலும் உடனே போலீஸ் பந்தோபஸ்தை மிராசுதார்கள் நாடுகிறார்கள். திருநெல்வேலியில் 9-ந் தேதி நடந்த வெளியேற்றும் சம்பவம் ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. விவசாயிகளுடைய கோரிக்கையை சுமார் 50 மிராசுதார்கள் ஏற்றுக்கொண்டு விட்டார்கள். ஆனால் ஆனை அய்யர் என்ற ஒரு பெரிய மிராசுதார் மட்டும் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். விவசாயிகள் கேட்பது நியாயம் என்று மற்ற மிராசுதார்கள் ஏற்றுக்கொண்ட பிறகும் ஆனை அய்யர் மறுத்து விட்டார். உடனே நெல்லை களத்திலேயே போட்டுவிட்டார்கள். பத்து பன்னிரண்டு நாட்கள் அப்படி இருந்து ஹெட் கான்ஸ்டபிள் போய் அதை அளக்கச் சொன்னார்கள். விவசாயிகள் அதைத் தடுத்தார்கள். மற்றும் வந்த கான்ஸ்டேபிள்களைக்கொண்டு அந்த விவசாயிகளை

5th March 1955] [Sri P. Ramamurthi]

151-வது செக்ஷன்கீழ் கைது செய்தார்கள். அதற்கு கோர்ட் விவகாரம் கிடையாது. நிலைமை என்ன என்பதை யோசித்துப்பார்க்க வேண்டும். நிதி மந்திரி அவர்கள் ஒரு வக்கீல்தான், அவர் சட்டம் தெரிந்தவர்தான். ஆகையால் இந்த விஷயத்தை கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். உதாரணமாக வீட்டை வாடகைக்கு விடுகிறார்கள். வீட்டை திருப்பிக் கொடுக்கவேண்டும் என்று சொல்லி வாடகைக்கு இருக்கிறவர் வீட்டை காலி செய்யமாட்டேன் என்று சொன்னால் வீட்டுக்கு சொந்தக்காரர் கோர்ட்டுக்குத்தான் போகவேண்டுமே தவிர நேரடியாக போலீசுக்கு தகவல் கொடுத்து அப்புறப்படுத்தச் சொல்லக் கூடாது. இது ஒரு சிவில் விவகாரம். சிவில் கோர்ட்டுக்குத்தான் போக வேண்டும். சிவில் கோர்ட்டுக்குச் சென்று அங்கு தீர்ப்பு வாங்கிய பின் தான் போலீஸ்காரருடைய உதவியை நாட வேண்டும். எடுத்த எடுப்பிலேயே போலீஸ் உதவியை நாடுவது என்பது சரியல்ல. 'பிரீச் ஆப் காண்ட்ராக்ட்' என்றால் அது சிவில் விவகாரம். கோர்ட்டுக்குப் போவதற்கு ஆட்சேபணை கிடையாது. தீர்ப்பை நிறைவேற்றும்போதுதான் போலீஸ்காரரிடம் போகவேண்டும். சாமான்களை எடுத்து வெளியே கோர்ட்டுக்கு போகாமலேயே போட முடியாது. அதைப் போலவேதான் இந்த விவகாரமும். அதனால் 151-வது செக்ஷன்படி நடவடிக்கை எடுத்துக்கொள்வது என்பது சரியல்ல. இவ்விதம் நடந்தால் போலீஸ்காரர்கள் கொள்ளையடிப்பதற்கு இடம் ஏற்படும். மிராசுதார்களுக்கும் விவசாயிகளுக்கும் ஏற்படும் தகராறுகளை தீர்ப்பதற்கு போலீசுக்கு இடமில்லை. அது ஒரு சிவில் விவகாரம். இதனால் தான் விவசாயிகள் இதை எதிர்க்கிறார்கள். விவசாயிகள் எதிர்க்கிறார்கள் என்றால் என்ன ஏற்படுகிறது. போலீஸ்காரர்களை அனுப்பி மிராசுதார்களுக்கு பாதுகாப்பு கொடுக்கும்படியான நிலைமை ஏற்படுகிறது. இதை மாற்றுவதற்கு உடனடியாக என்ன செய்யவேண்டும் ? வரவர நிலைமை மோசமாகிக்கொண்டு வருகிறது. வேறு சட்டங்களைப் பற்றி ஆலோசனை செய்துகொண்டு போவதில் பயனில்லை. அதைப்பற்றி எங்களுக்கு கவலை இல்லை. பின்னால் இதற்கு அவசியமான நிலைமை ஏற்படும். ஆகவே இப்பொழுதே இதற்கு வேண்டிய ஒரு சட்டத்தை இயற்ற வேண்டும். உடனடியாக அதை தயாரிக்க வேண்டும். நிலத்தை விட்டு வெளியேற்றுவதை மாகாணம் பூராவும் உடனடியாகத் தடை செய்ய வேண்டும். சட்டம் கொண்டு வரப்போகிறோம் என்று பிரசாரம் செய்வதாக இருக்கிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை. இப்படி பிரசாரம் செய்வது மிராசுதார்களுக்கு நோட்டீஸ் கொடுப்பது போல் இருக்கிறது. சட்டம் வருவதற்கு முன்பாக இருக்கக்கூடிய விவசாயிகளை நிலத்தை விட்டு வெளியேற்றி விடுங்கள் அல்லது செந்த சாகுபடிக்கு நிலங்களை வைத்துக்கொள்ளுங்கள் என்று மிராசுதார்களுக்கு நோட்டீஸ் கொடுப்பது போல் இருக்கிறது. நிலைமையை சீர்திருத்தம் செய்வதாகவே இல்லை. இது ஒரு எச்சரிக்கை கொடுப்பதாகத் தான் இருக்கிறது. நிலைமையை சீர்திருத்தம் செய்வதற்கு இப்பொழுதே இந்த சட்ட சபையை கலைத்துவிட்டு ஒரு அவசரச் சட்டத்தைப் போடுங்கள். பிறகு பட்ஜெட் முடிந்தவுடன் மீண்டும் கூடி அந்தச் சட்டத்தை பாஸ் செய்து கொள்ளலாம். மறுபடியும் கூட்டுவதாக இருந்தாலும் எங்களுக்கு பிரயாணப்படி வேண்டாம். பிராயணப்படி இல்லாமல் நாங்கள் இங்கு வந்து அந்த சட்டத்திற்கு ஆதரவு கொடுக்கிறோம். ஆகவே உடனடியாக அவரச் சட்டத்தை செய்து நிலத்தை விட்டு வெளியேற்றுவதை உடனடியாக தடை செய்ய வேண்டும். அதையும் மாகாணம் பூராவும் செய்ய வேண்டும்.

" இரண்டாவதாக குறிப்பிடும்போது இப்பொழுது விலைவாசி அதிகப்படியாக வீழ்ச்சி அடைந்திருக்கிறது. அதனால் குத்தகைக்காரர்களுக்கும் கூலியாட்களுக்கும் இப்பொழுது கொடுத்துவரக்கூடிய பங்கிற்கு 30 பர்செண்ட் அதிகமாக கொடுத்தாகவேண்டும். ஒவ்வொரு ஊரிலும் எவ்வளவு கொடுத்துக்கொண்டு வருகிறார்களோ அதற்கு மேலாக 30 பெர்செண்ட் அதிகமாக கொடுக்கவேண்டும் என்ற ஒரு சட்டத்தையும்

இயற்றவேண்டும். சட்ட பூர்வமாக அப்படி கொடுக்கவேண்டும் என்று ஒரு உத்தரவு போடவேண்டும். இல்லாவிட்டால் விவசாயிகள் பாதிக்கப்படுவது திண்ணம்.

" மூன்றாவதாக நிலம் இல்லாத விவசாயிகளுக்கு நிலத்தைப் பங்கிட்டுக் கொடுக்கவேண்டும் என்று ஒரு மசோதாவை இந்த சட்ட சபையில் கொண்டுவந்த காலத்தில் ஸ்ரீமான் சி. சிப்பிரமணியம் அவர்கள் பதில் சொல்லும்போது 'ராமமூர்த்திக்கு விவசாயத்தைப்பற்றி ஒன்றும் தெரியாது. அதனால்தான் இப்படிப்பட்ட மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்' என்று சொன்னார். எனக்கு எவ்வளவு விவசாயம் தெரியும் என்பது அவருக்குத் தெரியாது. ஆனால் ஒன்றை மட்டும் நான் அவருக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நாங்கள் ஏதாகிலும் ஒரு மசோதாவைக்கொண்டு வந்தால் அதுவும் விவசாயிகள் சம்பந்தமாக இருந்தால் முதலில் அதை கிசான் சங்கத்தில் வைத்துவிட்டு அவர்களுடைய யோசனையைக்கேட்டுவிட்டுத்தான் இங்கு கொண்டுவந்து பேசுவோம் என்பதை மட்டும் அவருக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வேறு விதமாக நினைக்கவேண்டாம். கட்சியில் விவசாயம் தெரிந்தவர்களுடைய மத்தியில் வைத்துவிட்டும் மற்றவர்களைக் கேட்டுக்கொண்டும்தான் இங்கு கொண்டு வருவோம். அதனால் எங்களுக்கு விவசாயத்தைப்பற்றி தெரியவில்லை என்று சொல்வதில் அர்த்தம் இல்லை.

" அடுத்தபடியாக விவசாயிகளுக்கு தரிசு நிலங்களை மட்டும் கொடுத்துவிட்டால் போதாது. அதை சீர்படுத்துவதற்கு வேண்டிய பணம் விவசாயிகளுடைய கையில் இப்பொழுது இல்லை. சர்க்காரும் பணம் இல்லை என்று சால்ஜாப்பு சொல்லக்கூடாது. இப்பொழுதுள்ள சர்க்காருடைய கொள்கை நிலமில்லாத விவசாயிகளுக்கு தரிசு நிலங்களைக் கொடுப்பது என்பது. அப்படி சர்க்கார் சொல்லிக்கொண்டு வந்தாலும் நிலம் வேண்டும் என்ற கூச்சல் இருந்துகொண்டே இருக்கிறது. கையில் பணம் இல்லாதபோது விவசாயிகளுக்கு நிலத்தைப் பங்கிட்டுக் கொடுத்தால் என்ன பிரயோசனம். தரிசு நிலங்களை கொடுத்து விட்டோம் என்று சொல்லி ஜனங்களை ஏமாற்றுவதாகத்தான் இருக்கும். நிலத்தைக் கொடுத்தாலும் அவர்கள் விவசாயம் செய்வதற்கு வேண்டிய வசதியையும் செய்து கொடுக்க வேண்டும். அப்படி செய்து கொடுக்க சர்க்கார் உடனடியாக முன் வந்தாக வேண்டும். தனிப்பட்ட முதலாளிகளுக்கும் சொந்தப் பணம் போட்டு நடத்தும் தொழில்களுக்கும் கடன் கொடுத்து உதவி செய்ய சர்க்கார் தயாராக இருக்கிறார்கள். அதுவும் வட்டி இல்லாமல் கொடுக்கவும் தயாராக இருக்கிறார்கள். டாட்டா போன்றவர்கள் தொழில் நடத்த பத்துக்கோடி ரூபாய் பணம் வேண்டுமென்று கேட்டாலும் வட்டி இல்லாமல் கடன் கொடுக்க சர்க்கார் தயாராக இருக்கிறார்கள். தவணையில் வாங்கிக் கொள்ளவும் தயாராக இருக்கிறார்கள். அதற்கு சாத்தியமாக இருக்கும்போது நாட்டின் முதுகெலும்பாக இருக்கும் விவசாய தொழிலாளர்களுக்கும் நிலமில்லாத விவசாயிகளுக்கும் ஏன் கடன் கொடுத்து உதவக் கூடாது ? அதற்கு என்று ஒரு திட்டம் வகுக்கலாம். அவர்களுக்கென்று வருஷம் ஒன்றுக்கு 30 லட்சம் ரூபாய் செலவு செய்து நிலங்களை சாகுபடிக்குக் கொண்டுவரலாம். புல் டோசர்களையும் டிராக்டர்களையும் வைத்துக்கொண்டு அந்த நிலங்களை சீர்திருத்தி சாகுபடிக்குக் கொண்டுவந்தால் விவசாயிகளால் சாகுபடி செய்வதற்கு வசதியாக இருக்கும். இப்பொழுதுள்ள 50 லட்சம் ஏக்கர் தரிசு நிலங்களை சீர்த்திருத்தம் செய்து கொடுத்தால் 15 லட்சம் விவசாயிகளுக்கு சாகுபடி செய்வதற்கு வசதி ஏற்படும். அப்பொழுது நாட்டில் என்ன நிலமை ஏற்படும் ? நாட்டிலுள்ள வேலையில்லா திண்டாட்டம் பெரிய அளவில் நீங்கும். குத்தகைத்தாரர்களுக்கும், மிராசுதார்களுக்கும், விவசாயிகளுக்கும் மிராசுதார்களுக்கும் சண்டை சச்சரவு ஏற்படாது. சட்டம் இல்லாமலேயே மிராசுதார்கள் அதிகப்படியான வாரத்தைக் கொடுக்க முன் வருவார்கள். தொழிலாளர்களுடைய நிலைமையும் முன்னேற்றமடையும். இன்றைக்கு எந்த வாரம் வேண்டுமென்றாலும் எடுத்துக்கொள்ளலாம் என்ற நிலைமை நாட்டில் ஏற்படும். எந்த வாரத்தை கொடுத்தாலும் போதும் என்று விவசாயிகள்

5th March 1955] [Sri P. Ramamurthi]

நினைப்பார்கள். இப்படிப்பட்ட ஒரு கூட்டம் அதிகமாக இல்லை என்ற ஒரு நிலைமை ஏற்படும்போது நிலச்சுவான்தார்கள் உழக்கூடியவர்களைத் தேடிச் சென்று 'உனக்கு அதிகமாக பங்கு தருகிறேன். நீ என்னுடைய நிலத்தை குத்தகைக்கு எடுத்துக்கொள்' என்று சொல்லி அழைக்கும் படியான நிலைமை ஏற்படும். அதனால்தான் இந்தப் பிரச்னை இன்று மிகவும் அவசர அவசியமாகிவிட்டது. ஒத்திப்போடுவதில் பிரயோஜனமில்லை. 4-07 p.m.

"தேசிய திட்டத்தில் நாட்டில் இருக்கக்கூடிய செல்வ வளங்களிலேயே நிலமும் ஒன்று. நிலச் செல்வத்தை இன்றைக்கு சரியாக உபயோகப் படுத்துகிறோமா என்பதை ஆலோசித்துப் பார்த்து அதற்கு ஏதாவது விஷயங்கள் குறுக்கே நின்றால் அதைத் தகர்த்தெறிந்துவிட்டு, வசதிகள் செய்துகொடுப்பது திட்டத்திற்கு அடிப்படையான கொள்கையாக இருக்க வேண்டும்.

"ஆகவே, இந்த முறையில் நாம் பல விஷயங்களை ஆலோசிக்கவேண்டி யிருக்கிறது. பாக்கி இருக்கக்கூடிய விஷயங்களில் நெய்வேலித் திட்டம் மிக முக்கியமான திட்டமாகும். நெய்வேலித் திட்டத்தை எடுத்துக்கொண் டால் இந்திய சர்க்காருக்கும் ராஜ்ய சர்க்காருக்கும் உள்ள உறவுகளைப்பற்றி நான் சொல்லவில்லை. '60 கோடி ரூபாய் இந்த சர்க்கார் செலவழிக்க வேண்டிய தில்லை, மத்திய சர்க்கார் அதற்கு உதவுகிறது' என்று நிதி மந்திரி அவர்கள் பிரசங்கத்தில் குறிப்பிட்டார். அது வரவேற்கக்கூடிய விஷயம். பிறகு என்ன ஆகப்போகிறது ? நெய்வேலியில் பெரிய அளவு க்கு மின்சாரம் உற்பத்தி செய்து, மற்ற பொருள்களும் உற்பத்தி செய்த பிறகு, என்னென்ன தொழில்கள் ஏற்படப்போகின்றன என்பது யாரைப் பொறுத்திருக்கிறது ? மின்சாரத்தை உபயோகப்படுத்தப்போகிறார்களா இல்லையா என்பது யாரைப் பொறுத்திருக்கிறது ? தனிப்பட்ட முதலாளி களைப் பொறுத்திருக்கிறது என்று தெரியவருகிறது. தனிப்பட்ட முதலா ளிகள் ஏதாவது தொழில்களை நடத்தினால்தான் அங்கு தொழில்கள் ஏற்படும் என்ற நிலை ஏற்படுகிறது. 'தொழில்களை நடத்தவேண்டாம், தொழில்களில் ஈடுபடுத்தமுடியாது' என்று அவர்கள் நினைத்தால் நெய் வேலியில் தொழில்கள் ஏற்படாது. தனிப்பட்ட முதலாளிகள் வேறு துறை களில் பணத்தை ஈடுபடுத்தி அதில் அவர்களுக்கு அதிக லாபம் கிடைக்கு மென்றால் நெய்வேலியில் புதிய தொழில்களை ஆரம்பிக்கமுடியாது, அப்படி யென்றால் அங்கு புதிய தொழில்கள் கிடைக்காது. ஆகவே, 60 கோடி ரூபாய் செலவழிக்கவேண்டியதிலிருந்து ராஜ்ய சர்க்காருக்கு விடுதலை கிடைத்திருப்பதால் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படக்கூடிய அதே காலத்தில் மின்சாரம் அங்கே உற்பத்தியானவுடனே மின்சாரத்தை கொண்டு வேறு ஒரு தொழிலை ஆரம்பிப்பதற்கு லாயக்காக முன்கூட்டியே வேறு தொழில்களுக் கான திட்டத்தையும் போட்டு அதை ஈடுபடுத்துவதற்கு இன்றைக்கு நாம் முன் வருவோம். தனிப்பட்ட முதலாளிகள் நடத்துவதற்கு முன்வந்தால் கூட்டாக வரட்டும். தனிப்பட்ட முதலாளிகளே பூரணமாக எடுத்துக்கொண்டு அவர்கள் ஏதோ தொழில்களை ஆரம்பிக்கப் போகிறார்கள் என்று நினைத்துக் கொண்டு சர்க்கார் சும்மா இருக்கக்கூடாது. அப்படிச் செய்தால் திட்டங்களி லிருந்து கிடைக்கக்கூடிய மின்சாரம் வீணாகப்போகக்கூடிய நிலைமை ஏற்படும்.

"தாமோதர பள்ளத்தாக்கு திட்டத்திலிருந்து கிடைத்த மின்சாரத்தை என்ன செய்வதென்று தெரியாமல் அந்த தெர்மல் ஸ்டேஷனை கல்கத்தா கார்ப்பரேஷனுக்கு விற்கும்படியான நிலைமை ஏற்பட்டது. சென்ற வரு ஷத்தில் பஞ்சாப் ராஜியத்திலுள்ள பக்ரா–நங்கல் திட்டத்தில் உற்பத்தியான மின்சாரத்தை என்ன பண்ணுவது என்று தெரியவில்லை. மின்சாரம் உற்பத்தியான உடனே தொழில்கள் தானாக ஏற்பட்டுவிடாது. மின்சாரம் கிடைப்பதற்குள்ளாகவே பல தொழில்களை ஆரம்பிப்பதற்கு முன்கூட் டியே திட்டமிடவேண்டும். நிபுணர்களையும் மற்றவர்களையும் கொண்ட ஒரு கமிட்டியை அரசாங்கம் ஏற்படுத்தி, அவர்களுடைய யோசனையின்பேரில் என்னென்ன திட்டங்களை வகுக்கலாம், எவ்வளவு பணம் அந்தந்த திட்டத்திற்குச் செலவிடலாம் என்பதைப்பற்றி உடனடியாக ஆலோசனை செய்து பார்த்து நடவடிக்கை எடுக்கவேண்டும். இது உடனடியாகச் செய்யவேண்டிய விஷயம்.

[Sri P. Ramamurthi] [5th March 1955

“தொழிலாளர்களுக்கும் சர்க்காருக்கும் இடையே இருக்கவேண்டிய உறவுகள் சம்பந்தமாக ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தச் சட்டசபையில் சென்ற காலத்தில் நான் சில கேள்விகள் கேட்ட சமயத்தில் சம்பந்தப்பட்ட மந்திரிகளால் சில பதில்கள் கொடுக்கப்பட்டன, இப்பொழுது புதிதாகப் பேசப்படுகிறதே, டெமக்ராடிக் ப்ளானிங், சோஷலிசப் பாணியில் சமுதாயத்தைச் அமைப்பது என்றெல்லாம் இப்பொழுது பேசப் பட்டுவருகிறதே, அதனால் ஏதாவது ஒரு மாற்றம் ஏற்படுமா என்று பார்த்தால், மாற்றம் இருக்காது என்று தோன்றுகிறது. இந்த ஒரு தொழிலை நடத்துவதற்கு இந்த நாட்டிலிருக்கக்கூடிய ஜனங்களுடைய ஒத்துழைப்பு வேண்டுமென்று சொன்னால், குறிப்பாக சர்க்கார் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழில்களிலே நிச்சயமாகத் தொழிலாளர்களுடைய ஒத்துழைப்பு வேண்டும். அது கிடைக்கவேண்டுமென்றால் தொழிலாளர்களைப் பார்த்து, ‘ நீங்கள் இன்றைக்கு, தொழிலில் ஈடுபட்டிருப்பதால் உங்களுக்கும் அதில் ஒரு பங்கு உண்டு ’ என்று சொல்லவேண்டும். சொத்தில் தொழிலாளர்களுக்குப் பங்கு வேண்டுமென்று நான் இப்பொழுது சொல்ல முன்வரவில்லை. தொழில்களை நடத்தும்படியான திறமையில் உங்களுக்கு பங்கு உண்டு என்று சொல்லி அவர்களை மனிதர்களாக நடத்தக்கூடிய நிலைமை இல்லாமற்போனால் நன்மை இல்லை. நாங்கள் உத்தியோகஸ்தர்களைத்தான் நம்பிக்கொண்டேயிருப்போம். அவர்களை வைத்துக்கொண்டு தொழிலாளர்கள்மீது ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருப்போம் என்று சொல்லக்கூடிய நிலைமை இருந்தால் சென்ற காலத்தில் முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் உள்ள உறவுக்கும் இனி ஏற்படக்கூடிய உறவுக்கும் வித்தியாசம் ஏற்படாது.

“நாங்கள் சம்பந்தப்பட்டமட்டில் சர்க்கார் நடத்தும்படியான தொழில்களில் ஈடுப்பட்டிருக்கக்கூடிய தொழிலாளிகளுக்கு நியாயமான உரிமை கிடைக்க வேண்டும் என்பதுதான். அந்த உரிமை அவர்களுக்கு வேண்டுமென்றால் தொழில்களில் நடக்கக்கூடிய நுணுக்கங்களை அவர்கள் கற்றுக்கொண்டு புதிய யோசனைகளைக் கொடுப்பது சாத்தியம். ஊழல்களைப் கண்டு பிடித்துத் தருவது சாத்தியம். அதற்கு வேண்டிய தொழிற்சங்க உரிமைகள் மேலும் மேலும் அவர்களுக்கு கொடுக்கவேண்டும். ஒரு தொழிலாளி வேலையிலிருந்து நீக்கப்பட்டால் விசாரணை செய்வதற்கு உரிமை இருக்கவேண்டும். தொழில் சம்பந்தமான உரிமை வேண்டும். குறுக்கிடுவது கூடாது. சர்க்கார் இதை ஆலோசனை செய்து பார்க்கவேண்டும். உதாரணமாக, உத்தியோகஸ்தர்களிடையே உள்ள லஞ்சத்தை போலீஸ்காரர்களைக்கொண்டு பிடித்துவிட முடியுமா என்று கேட்கிறேன். தொழிற்சங்கத்தை நம்பினால், அவர்களுடைய ஒத்துழைப்பை நாடினால், திருட்டுகளையும், அதிகாரிகளிடையே லஞ்ச ஊழல்களையும் கண்டுபிடிப்பது சாத்தியம். சர்க்கார் தொழிற்சாலைகளில் நடக்கும் திருட்டுக்களைக் கண்டுபிடிப்பதற்கு தொழிற் சங்கங்களின் உதவி இருக்கவேண்டும். தென்னிந்திய ரயில்வே பொன்மலை ஓர்க்ஷாப்பில் **1942–43**-ல் எப்படித் திருட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன ? லஞ்சங்களையும், திருட்டுக்களையும் கண்டுபிடிக்க தொழிலாளர்களுடைய உதவியைக் கோருவதற்குப் பதிலாக அவர்கள்மீது ஆத்திரப்படுவதில் பிரயோஜனமில்லை. ஏதாவது ஒரு அதிகாரி லஞ்சம் வாங்கினார் என்று கண்டுபிடித்தால் அந்தக்கண்டுபிடித்த தொழிலாளி டிஸ்மிஸ் செய்யப் படுகிறான். அதற்குமேல் அப்பீல் கிடையாது. யூனியன் தலையிடுவதற்கு இடம் கிடையாது, அதிகாரி சொல்வதுதான் சரி என்ற நிலைமை இருந்தால் தொழிலாளர்களுடைய ஒத்துழைப்பு இவ்விஷயத்தில் சர்க்காருக்குக் கிடைப்பதற்கு இடம் இருக்காது, அர்த்தம் இருக்காது. ஆகவே, தொழிற் கொள்கையை மாற்றிக்கொள்ளவேண்டும். இந்த அடிப்படையில் செய்தால் நாம் முன்னேறுவது சாத்தியம்.

“ நான் இதுவரை கூறியிருக்கக்கூடிய யோசனைகளை கனம் நிதி மந்திரி அவர்கள் ஆழ்ந்து யோசனை செய்வதற்குப் பதிலாக ஆத்திரப்பட்டு உடனடியாக பதில் கொடுத்துவிடவேண்டாம். நான் சொன்ன விஷயங்களுக்கு ஏதோ இப்பொழுதே பதில் சொல்லித்தான் ஆகவேண்டுமென்ற முறையில் சொல்லவேண்டாம். இதைப்பற்றி கொஞ்சம் தீவிரமாக ஆலோசனை செய்து பார்த்து நான் சொல்லியிருக்கும் யோசனையை நாட்டு மக்களுக்கு

ஏற்றபடி சரியான திட்டங்களை உருவாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாட்டிலிருக்கக்கூடிய எல்லா ஜனப்பகுதிகளும் மேம்பாடு அடையவேண்டும். சமுதாயத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகள் நீங்கி, ஒரு பகுதியினர் மற்ற பகுதியினரை ஏமாற்றுவதோ, சுரண்டுவதோ என்ற நிலைமை ஏற்படாமல் இருக்கக்கூடிய முறையில் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். இந்த நாட்டில் ஏதோ சுவர்க்கத்தை உண்டுபண்ணிவிடவேண்டுமென்று கேட்காவிட்டாலும் இன்றிருக்கக்கூடிய நிலையில் நான் குறிப்பிட்ட தகராறுகளைக் களைந்தெறியவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கின்றேன்."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" Mr. Speaker, Sir, at the outset with your permission, I would like, on behalf of this Assembly and the people of this State, to offer our fraternal greetings to the people of Andhra on this historic occasion (Cheers). We were together till very recently and they are our neighbours now. We are interested in the formation of a stable Government there, because we have got common problems and we have got certain common disputes also which have got to be solved and settled in a friendly way. I am sure, Sir, that very soon the counterpart of this Assembly will sit in Andhra and a Government will be formed there and we will be able to find solutions to the various problems which have been kept pending in view of the crisis created there. It is particularly noteworthy that in the context of a separated Andhra, for the first time, the elections are taking place and let me wish the people of Andhra every success in their effort to establish a democratic and stable Government. On this occasion, let me also thank the people of our State in reaffirming their confidence in the Congress Government by returning Congress candidates in all the three bye-elections which were held recently (Cheers) and I may assure the people of this State that we shall strive with all sincerity to be worthy of the confidence and trust which they have been pleased to repose in us. 4-15 p.m.

" Then, Sir, I want to pass on a bouquet, a genuine bouquet at that, to the Leader of the Opposition for having made a very sober speech today. But I have, not on my own behalf, but on behalf of this House, got a grievance against him. He occupies a very responsible position of the Leader of the Opposition and we are entitled to have some claim over his time as far as this House is concerned. Occupying this position as he is, it is no use his just peeping in during some days, making a speech and running away. I would request him that he should be present here and give his very useful and wise guidance for the benefit of the House as a whole. I may assure him that I am not saying anything in a spirit of fault-finding but I sincerely say this, as the Leader of the Opposition, he is bound to devote a little more time and I hope he will take note of it.

" Sir, before I pass on to the various points raised during the debate, I refer to the charges levelled by certain hon. Members belonging to Malabar and South Kanara, of discriminatory treatment. I am glad the Leader of the Opposition also touched that

point and appealed to me that I should not take them in a spirit of challenge to Government. I do not take them in that spirit at all. Still, it is not merely a question of our being satisfied, but it is a question of a mistaken impression being created in the people of Malabar and in the people of South Kanara. Therefore, if I touch that point, it is not in a spirit of answering the criticisms made by hon. Members, but it is our duty—we owe it to the people of Malabar and the people of South Kanara—to clear this misunderstanding. Not only the Members belonging
4-20 p.m. to the Communist Party indulged in the criticism. It is all the more regrettable to note that even Members of other parties fell into that trap. I have absolutely no doubt that an analysis of the figures of expenditure during the last two or three years will reveal—I am prepared to appoint an Auditor General for the purpose of scrutinising and analysing the figures—that we have been spending more on Malabar, more on South Kanara, more than what each of the two districts is entitled to either on the basis of population or on the basis of revenue. I agree, the approach to a budget should not be from the point of view of population or revenue; the approach should be from the point of view of the requirements of the various regions. That is why, without going into the figures of population or revenue, we have budgeted in a generous way. Certain problems have to be tackled in Malabar and certain other problems have to be tackled in South Kanara. Take the question of irrigation. Malabar and South Kanara have got plenty of rainfall and the average rainfall in a year is more than one hundred and twenty inches. There is an assured water-supply for the first crop. In some areas, there is scarcity of water for the second crop. Therefore the main problem there is the building of dams for storage of water to be used for raising the second crop. It is only from that aspect we took up the Malampuzha Project, the Walayar Project and the Mangalam Project. How far these projects will ensure an assured supply of water for raising the second crop or how for these dams will be beneficial, remains to be seen. Because storage of water is the main need of Malabar, we took up many projects even though they involved an expenditure of crores of rupees. As far as Malampuzha is concerned, we have not confined ourselves to the original plan of having a channel on the left bank only; we are having a channel on the right bank also. If the project is found to be really useful for supplementing the water required for raising a second crop, this has got to be further extended. We are contemplating the execution of the Kanhirapuzha Reservoir Project also. Though there is plenty of rainfall and water for one crop is always assured, still we have gone to the greatest possible extent in making provision for supplementing the water needed for a second crop. What about the other districts which some Members called as the Rayalaseema of this State? I do not know why that name has been brought in here, as if our names are not good enough. In Tirunelveli, a portion

5th March 1955] [Sri C. Subramaniam]

of Coimbatore and a portion of North Arcot, the average rainfall is 25 inches. (Sri P. Ramamurthi :—' Less than that.') I stand corrected. But we can take the average as 25 inches and even this much of rainfall is available only in two out of every five years. In spite of this fact, we have taken up certain projects for execution in Malabar. Whenever I go to South Kanara, I am told that the problem there is not the problem of irrigation but the problem of building up roads or communications. With abundant rainfall and with the perennial rivers flowing there, I do not see any difficulty of irrigation as far as that district is concerned. In the matter of communications I do agree that in the past Malabar and South Kanara were neglected to a great extent. But that was because there was no thickly populated towns or villages as such and the homesteads were spread out here and there. Besides the region is mountainous and therefore construction of roads there was a difficult problem. If one looks into the amount spent during the last two or three years in Malabar and South Kanara on the improvement of communications, putting up of roads and on other projects, he will find that it is an enormous amount. I do not want to go into the figures with reference to the current budget. Any Member can work out the figures for himself. Malabar and South Kanara together absorb more than half so far as allotment for Highways is concerned. Still we do not grudge them giving this amount. They have been long neglected and we want to tackle their problems and remove their difficulties. In spite of all this, charges of discrimination against us are being levelled!

